
# சமத்துவமற்ற பிரசைகள்:

## இலங்கையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான முஸ்லிம் பெண்களின் போராட்டம்




ஹிஷாமா ஹாமின் &
ஹஸனாஹ் சேகு இஸ்ஸதீன்
ஒக்டோபர் 2016

## <u>உள்ளடக்கம்</u>

**ஆய்வு பற்றி**
ஆய்வு முறைமை
வரையறைகள்

**முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் சட்டவாக்கம் பற்றிய ஒரு பார்வை**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் நிர்வாகம்

**முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பெண்களும், சிறுமிகளும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

1.திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை இன்மை

2.முஸ்லிம் மணமகளுக்கு சுயாதீனம் மற்றும் தீர்மானம் எடுத்தலில் சமத்துவம் இன்மை

3. கைக்கூலி (சீதனம்)

4. விவாகரத்திற்கான சமத்துவமற்ற ஏற்பாடுகள்

5. பலதார மணம்

6. பராமரிப்பு

7. காதிகள்

**ஏனைய தேசிய சட்டங்களின் கீழான சட்டரீதியான விலக்களிப்புகள்**

**சிவில் சமூகத்தின் தலையீடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்**

**திருத்தங்களுக்கான போராட்டம்**

**திருத்தத்திற்கு எதிரான தடைகளும், சவால்களும்**

**பரிந்துரைகளும் முக்கிய முடிவுகளும்**

**பின்னிணைப்பு : மூலோபாய செயற்பாட்டுக்கான புள்ளிகள்.**

## ஆய்வைப் பற்றி

மனித உரிமைகள் தொடர்பிலும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பிலும் வேலைசெய்யும் முஸ்லிம் பெண்களாக, இந்த ஆய்வின் அடிப்படை நோக்கானது, ஆயிரக்கணக்கான இலங்கை முஸ்லிம் பெண்களின் பாரதூரமான யதார்த்தத்தில் இருந்து பெறப்பட்டதாகும். எங்களது இந்த ஆய்வின் போது 1951ம் ஆண்டின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழும், அதை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட காதி நீதிமன்ற அமைப்பின் கீழும் பெண்கள் எதிர்கொள்கின்ற கொடூரமான எத்தனையோ அனுபவங்களை நாம் கடந்து வந்தோம். சட்டத்தின் காரணமாகவும், சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாங்கினாலும், இவை இரண்டும் அறிமுகப்படுத்தியுள்ள கலாசாரம் காரணமாயும் எண்ணிலடங்காக வழக்குகள் இதன்கீழ் காணப்படுகின்றன.

நீண்ட காலமாக நீதிக்காயும், சமத்துவத்துக்காயும் போராடி வருகின்ற பாதிக்கப்பட்ட பெண்கள் பகிர்ந்துகொண்ட, மனதை உலுக்குகின்ற, வேதனையளிக்கின்ற கதைகளாலும், முஸ்லிம் சமூகத்தினுள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பாக உள்ள சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்குமான ஆய்வாகவும் இதை முன்னெடுத்து வடிவமைப்பதற்கு நாம் தூண்டப்பட்டோம்.

அண்மையில், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திருத்த உரையாடலானது, பழைமைவாதிகளினதும், செயற்பாட்டாளர்களினதும் குறுகிய எல்லைகளுக்கு அப்பால் முஸ்லிம் சமூகத்திற்குள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் அரசியலமைப்புத் திருத்தச் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பின்னணியில் 'உரிமைகளின் அடிப்படையிலான அரசியலமைப்பு' என்ற வகையில், இலங்கையில் சிறுபான்மை முஸ்லிம் பெண்களாக இருப்பது பற்றி இவ்வரசியலமைப்புத் திருத்தம் என்ன கருத்தைக் கொண்டுள்ளது என்பது தொடர்பில் ஆவலுடன் விரிவாக சில முக்கியமான கேள்விகளை இது எழுப்பியுள்ளது. இந்தச் சட்டத்தினாலும், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போதும் இந்த நாட்டில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினால் ஆளப்படுகின்ற பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் தாக்கமும், விளைவும் என்ன? இந்தச் சட்டத்திலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள குறைபாடுகள் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தும், அதிகளவாக அர்ப்பணிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும், இச்சட்டத் திருத்தத்திற்கான காலம் தாழ்த்தப்படுவது அல்லது மழுப்பப்படுவது ஏன்?

மேலே கூறப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கப்படும் வகையில் இந்த ஆய்வானது பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. பகுதி 1 முஸ்லிம் பெண்களுக்கும், சிறுமிகளுக்குமான முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட முறைமையின் பிரதான நடைமுறை விளைவுகள் சிலவற்றை பகுத்தாராய்ந்து வெளிக்கொண்டுவருகிறது. பகுதி 2 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பை முன்கொண்டு செல்வதற்காக செயற்படுகின்ற மற்றும் இந்த பிரச்சினைகளை முன்னெடுக்கின்ற, பெண்களுக்கு உதவியாக உள்ள சிவில் சமூக அமைப்புக்களால் உருவாக்கப்படும் தளராத முயற்சிகள் பற்றிய பார்வை. பகுதி 3 தேசிய மட்டத்தில் பன்மைத்துவ முயற்சிகள் இருந்த போதும், இலங்கையில் கடந்த 25 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தத்தைக் கட்டுப்படுத்துகின்ற பிரதான தடைகளையும், சவால்களையும் மதிப்பீடு செய்கின்றது. இதனடிப்படையில் கண்டடைந்தவைகளைக் கொண்டு, பகுதி 4இல் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துடன் தொடர்புபட்ட திருத்தங்கள் தொடர்பான சில பரிந்துரைகளை இந்த ஆய்வு

முன்வைக்கின்றது. அத்துடன் தற்போதைய அரசியலமைப்புத் திருத்த செயல்முறையின் பின்புலத்திலும் இப்பரிந்துரைகளை முன்னெடுத்துள்ளது.

பிரசைகள் என்ற வகையிலான உரிமைகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் உச்சபட்ச கவனத்தைப் பெறுகின்ற இந்தக் காலத்தில், சமத்துவத்தை தீர்க்கமாகக் கோருவதற்கான தக்க சந்தர்ப்பத்தை இந்த ஆய்வு கொடுக்கிறது. உறுப்புரை 16(1)இனை நீக்குவதன் ஊடாக சமத்துவத்துவத்திற்கும், நீதித்துறை மீளாய்வுக்குமாக தனியார் சட்டங்கள் உட்பட அனைத்து சட்டங்களையும் உட்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம் பெறும் இவ்வேளையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் எதிர்மறையான தாக்கத்திற்கு குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான தாக்கத்திற்கு தீர்வு காண்பதற்கான ஒரு மத்திய புள்ளியாகவும் இது உள்ளது.

இந்த ஆய்வானது, முக்கியமாக அனேகமான முஸ்லிம் பெண்களின் அன்றாட வாழ்வை சீரழிக்கும் நிலையை மாற்றும் பேராவலின் உந்துதலினால் செய்யப்பட்டது. மேலும் நாம் வசிக்கும் நமது இந்த சமூகத்தை உள்நோக்கிக் கேள்விகேட்க வைக்கிறது. இந்த நாட்டில், இலங்கை முஸ்லிம் பெண்கள், தமது உரிமைகளின் பாதுகாப்பையும், முழுமையான உத்தரவாதத்தையும் கொண்ட சமத்துத்துவம் மிக்க பிரஜைகளாக தாம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற போராட்டத்துக்கு இந்த ஆய்வானது முக்கியமான பங்களிப்பை நல்குகிறது. இந்த நேரத்தில் பெண்களும், ஆண்களும் அவர்களது நேரத்தை எமக்கு ஒதுக்கி, தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டமைக்காக அவர்களுக்கு நாம் நன்றி கூறுகிறோம். தங்களது வாழ்க்கையில் அநீதிகளுக்கு எதிராக போராடுகின்ற, சமூகத்திற்காக தங்களை அர்ப்பணித்த, பாரிய முரண்பாடுகளுக்கு எதிராக பெண்களின் நல்வாழ்வுக்காக செயற்படுகின்ற தைரியம் மிக்க இலங்கை சகோதரிகளுக்கு இந்த ஆய்வை நாம் அர்ப்பணிக்கின்றோம்.

**ஆய்வு முறைமை**

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக ஆரம்ப தரவுகளும் இரண்டாம்தர, தகவல்களும் சேகரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது. ஆரம்ப தரவானது கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை ஆகிய இடங்களிலிருந்து பிரதான தகவல்களைப் பெறும் தனிநபர் நேர்முகங்களூடாகச் சேகரிக்கப்பட்டதுடன் புத்தளம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் குழுக் கலந்துரையாடல்கள் ஊடாகவும் பெறப்பட்டது. பிரதான தகவல்களைப் பெறும் நேர்முகமானது 49 பேரிடம் (32 பெண்கள், 17 ஆண்கள்) நடத்தப்பட்டது. அவர்களிடம் இடைத்தரமாக கட்டமைக்கப்பட்டதும், திறந்ததும் மற்றும் ஆம் இல்லைக் கேள்விகளும் கேட்கப்பட்டன. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தம், அதற்குண்டான தடைகள், சவால்கள் பற்றி பல்வகைமைச் செயற்பாட்டாளர்களிடமும், தனிநபர்களிடமும் கேட்கப்பட்டன. அத்துடன் திருத்தத்திற்கான மூலோபாயங்கள் பற்றியும் அவர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. இந்த விடயங்கள் பற்றி வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த பிரதான தகவலாளர்கள் இனங்காணப்பட்டு மிக அவதானமாக அவர்களது கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. மறுசீரமைப்பை நோக்காகக் கொண்ட செயற்பாட்டாளர்களிடமிருந்தும், பழைய நிலைமையை அப்படியே வைத்திருப்பதற்கு விரும்புகின்ற மதம்சார் பழைமைவாதகள் வரை பரந்த வட்டத்தில் பலதரப்பட்ட நபர்கள் தெரிவுசெய்யப்பட்டமை இதனை உறுதி செய்கிறது.

விவாகம், விவாகரத்து மற்றும் வீட்டு வன்முறைகள் போன்ற ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் செயற்படும் சிவில் சமூகத்தினர் உட்பட, சட்டரீதியான தீர்வுகளைப் பெறுவதற்காக முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பெண்களுடன் வேலைசெய்கின்ற பெண்களின் உரிமைகளுக்காக வாதாடுகின்ற மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றவர்களுடனும் நேர்முகங்கள்

நடத்தப்பட்டன. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள பிரச்சினைகள், சவால்கள் பற்றி நன்கு புரிந்து கொண்ட தனிநபர்களுடனும் காதி நீதிமன்ற நீதிபதிகள், போஹ்ரா (Bohra) மற்றும் மேமன் (Memon) சமூகங்களைச் சேர்ந்த திருமணப் பதிவாளர்களும், காதிகளும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழான வழக்குகளில் வேலை செய்கின்ற வழக்கறிஞர்கள், முஸ்லிம் தனியாள் சட்ட திருத்தத்திற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 2009இல் அமைக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள், நீதிச் சேவை ஆணைக்குழுவின் அரச அலுவலகர்களுடனும், சட்ட மறுசீரமைப்பு ஆணைக்குழு, பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, பிரதமர் அலுவலகம் போன்றவற்றுடனும் நேர்முகங்கள் நடத்தப்பட்டன.

முதலாம் தரமாக, தேர்ந்தெடுத்த குழுக்கலந்துரையாடல் புத்தளத்திலும், மட்டக்களப்பிலும் இரண்டு சிவில் சமூக அமைப்புக்களின் சபை அங்கத்தவர்களுடனும், தன்னார்வத் தொண்டர்களுடனும் நடத்தப்பட்டது. காதி நீதிமன்றங்களிலும், அத்துடன் பெரும்பாலும் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்ற ஏனைய சந்தர்ப்பங்களிலும் அதை கவனத்தில் எடுத்து உடனடியாக உதவுகின்ற நேரடியாக பெண்களுடன் வேலை செய்கின்ற, அமைப்புகள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டன.

இரண்டாம்தர தரவு, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான முக்கிய பிரசுரங்களின் மீளாய்வினூடாகவும், இலங்கையின் சட்டத்திருத்த செயல்முறைகள், அது தொடர்பான பிரசுரங்கள், முஸ்லிம் குடும்பச்சட்டம் பற்றிய ஆவணங்கள், மற்றும் ஏனைய நாடுகளில் இருந்து பெறப்பட்ட சட்டத்திருத்த செயல்முறைகள் என்பவற்றினூடாகவும் தொகுக்கப்பட்டது.

**வரையறைகள்**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் காணப்படுகின்ற பெண்களுக்கெதிரான பாரபட்சமான ஏற்பாடுகள் தொடர்பில் பரந்த அளவிலும், நீதிமன்றில் பெண்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப்பிரச்சினைகள் தொடர்பில் ஓரளவிலும் ஆவணப்படுத்தல்கள் காணப்படுகின்றபோதும் சட்டத்திருத்தம் தொடர்பான மாறுபட்ட கருத்துக்களையும், சவால்களையும் கொண்ட ஆவணப்படுத்தல்கள் சொற்ப அளவிலேயே இருந்தது. எனவே இந்த ஆய்விற்காக திரட்டப்பட்ட தகவல்களில் அதிகமானவை நேர்முகங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் தங்கியுள்ளன. பல்வகை மூலங்களில் இருந்தும் பெறப்பட்ட சமகால பிரச்சினைகளையும், சம்பவங்கள் தொடர்பான தகவல்களையும் சரிபார்க்க இந்தக் குழு அதனுடன் தொடர்புடைய, பொருத்தமான ஏனைய முயற்சிகளையும் எடுத்தது.

2009 இன் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தக் குழுவில் இன்னும் சில அங்கத்தவர்கள், சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதி அமைச்சர், போன்ற பிரதான தனிநபர்களிடமிருந்து நேர்முகம் எடுப்பதற்கு பலவகை முயற்சிகளை மேற்கொண்டிருந்தும் அது முடியாமல் போய்விட்டது. பிரதான தகவல் வழங்குநர்களிடம் விரிவுபடுத்திய கேள்விகளைக் கேட்க முடியாது போய்விட்டதற்கு காரணம், இந்த ஆய்வுக்கான கால அவகாசம் வரையறுக்கப்பட்டிருந்தது. அதாவது, அந்த குறித்த காலத்திற்குள் சரியான நேரத்தில் அவை கிடைக்கவில்லை அல்லது நேர்முகம் தர விரும்பாத முக்கிய தகவல் தருநர்களை தொடர்ந்தும் அணுகுவதற்கு இந்தக் குழுவினால் முடியவில்லை.

# பகுதி 1: முஸ்லிம் பெண்கள், சிறுமிகள் மீது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் தாக்கம்

## PART 1:
## IMPACT OF MUSLIM MARRIAGE AND DIVORCE ACT (MMDA) ON MUSLIM WOMEN AND GIRLS

## முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான சட்டவாக்கப் பார்வை (Muslim Marriage and Divorce Act - MMDA)

'ஷரிஆ' என்பது "குறிப்பாக இஸ்லாத்தின் முதல் மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் முஸ்லிம் சட்டவாளர்களினால் வரலாற்று ரீதியாக விளங்கிக் கொள்ளப்பட்டு விரிவாக்கப்பட்ட இஸ்லாத்தின் பொதுவான ஒழுங்கு முறைமை" யைக் குறிக்கின்றது. "ஷரிஆ" சட்டமானது சட்டக் கொள்கைகள் மற்றும் விழுமியங்களை விடவும் பரந்தளவானவற்றை உள்ளடக்கியுள்ளது. ஆனால் அது சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படும் நாடுகளில் இஸ்லாமிய சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சட்டமானது மிகவும் விரிந்த சட்ட விடயங்களைக் கொண்டது என்பதுடன் முஸ்லிம் குடும்ப அல்லது தனியாள் சட்டம் என்பது இதன் ஒரு பகுதி மட்டுமே. இந்த குடும்பச் சட்டம் அல்லது தனியாள் சட்டமானது, உலகெங்கும் உள்ள 44 நாடுகளில் வெவ்வேறுபட்ட மட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது.

இரட்டை சட்ட முறைமைகள் உள்ள நாடுகளில் "ஷரிஆ" சட்டம் குடும்ப விடயங்களுக்கு மட்டுமானதாக ஆக்கப்பட்டமையானது (உதாரணமாக: திருமணம், விவாகரத்து, பாதுகாவல், பராமரிப்பு, வழியுரிமை) 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வந்த பாதிப்பாகவும் இதற்கான செல்வாக்கு காலனித்துவத்துடன் சேர்ந்து கொள்கின்றது எனலாம்.[1]

இலங்கையிலும் கூட காலனித்துவ காலத்தின் விளைவாக குழுச்சட்டங்கள், குறிப்பிட்ட சமூகங்களுக்கான தனியாள் சட்டங்களின் ஏற்பாடுகளும் அதற்கு சமாந்தரமாக பொதுச் சட்டங்களும் சகல நாட்டு மக்களுக்கும் ஏற்புடைத்தாகின்றது. எடுத்துக்காட்டாக விவாகம், விவாகரத்து தொடர்பாக திருமண பதிவு கட்டளைச்சட்டத்திற்கு மேலதிகமாக முஸ்லிம்களுக்கானதும், கண்டிய சிங்கள சமூகத்திற்கானதுமான தனியாள் சட்டங்கள் உள்ளன.

தமது நம்பிக்கையின் கீழ் திருமணம் செய்யும் முஸ்லிம்களைத் தவிர, இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் ஏற்புடைத்ததாக 1907ம் ஆண்டில் இலங்கையின் திருமண பதிவுகள் கட்டளைச் சட்டம்[2] (பொது) கொண்டு வரப்பட்டது.[3] இரண்டு சமூகங்கள் - கண்டிய சிங்களவர்கள் மற்றும் இலங்கை முஸ்லிம்கள் இன அடிப்படையிலும், சமயரீதியிலும், திருமணம் மற்றும் விவாகரத்துக்குத் தனித்தனி சட்டங்களைக் கொண்டுள்ளனர். கண்டிய சிங்களவர்கள் 1952ம் ஆண்டுக்கான கண்டிய திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் அல்லது பொது திருமண பதிவுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் விவாகம் புரிய முடியும். எவ்வாறெனினும் இந்த ஏற்பாடு முஸ்லிம் சமூகத்தினருக்கு வழங்கப்படாததுடன் அவர்கள் 1951ம் ஆண்டின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் "இலங்கையில் வாழும் முஸ்லிம் இனத்தவர்கள்" ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை திருமணம் (இது இஸ்லாத்திற்கு மதம் மாறியவர்களையும் உள்ளடக்கும்) புரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பொதுச்சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் வேறு இன மற்றும் மதத்தினை சேர்ந்தவர்களை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் அடிப்படைக் கூறானது 1770களில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பற்றேவியா (தற்போதைய இந்தோனேசியா) விவாக மற்றும் விவாகரத்து சட்டக்கோவையின் பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்டது. 1806 – 1951 வரையான

---

1 எட்.அப்த் அல்லாஹ் அஹமட் நயிம் 2002 'மாறுபடும் உலகில் இஸ்லாமிய குடும்பச் சட்டம்: ஒரு உலகளாவிய வள நூல்' சமயத்துக்கும் சட்டத்துக்குமான நிகழ்ச்சித் திட்டம், இமோரி பல்கலைக்கழகம், அமெரிக்கா.

2 19ம் இலக்க இலங்கையின் பொதுத் திருமணங்கள் கட்டளைச் சட்டம், 1907

3 1907ம் ஆண்டின் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் நீண்ட தலைப்பு

இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த சட்டக்கோவை கோவைப்படுத்தப்படல், மீளாய்வு செய்யப்படல், மற்றும் மாற்றம் செய்யப்படல் போன்ற செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இது ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சட்ட மற்றும் சமயம் சார்ந்த பிரபல்யமான தனிப்பட்டவர்களினால் செய்யப்பட்டது.[4] தற்போதைய முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமானது கோவைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை மட்டுமன்றி இலங்கை முஸ்லிம்களால் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட உள்ளூர் வழக்காறுகள், பழக்கவழக்கங்கள்: உதாரணமாக கைக்கூலி (சீதனம்) என்பவற்றையும் ஒன்றாக தொகுக்கப்பட்டு 1951ம் ஆண்டு சட்டமாகக் கொண்டு வரப்பட்டது.[5]

**முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் நிர்வாகம்**

தற்போது இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை இலங்கையின் மொத்த சனத்தொகையான 20.3 மில்லியன் மக்கள் தொகையில் 9.66 வீதம்[6] அல்லது 1,967,523 மில்லியன்[7] (இதில் 1,011,891 பெண்கள் மற்றும் சிறுமிகள்) தொகையாகும். முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களாக அம்பாறை, கொழும்பு, கண்டி, திருகோணமலை, புத்தளம் மற்றும் மட்டக்களப்பை ஒழுங்கு முறையின்படி கூற முடியும்.[8] முஸ்லிம் சமூகம் என்பது வழமையாக தனக்குள்ளேயே பல்லினத்தன்மை மற்றும் இன அடிப்படையிலான பல வேறுபட்ட சிறுபான்மை குழுக்களை அதாவது இலங்கைச் சோனகர், கரையோர இந்திய சோனகர், மலேயர்கள், போஹ்ரா (இது தாவூத் போஹ்ராவையும் உள்ளடக்கும்) மற்றும் மேமன்[9] போன்றவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்த சமூகம் மிக முக்கியமான இரண்டு பிரிவுகள் அதாவது சுன்னி (இது பெரும்பான்மை) மற்றும் ஷியா உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது, காதி (முஸ்லிம் நீதிபதி) நீதிமன்ற முறையினை உருவாக்கியுள்ளதுடன் அது காதிகளினது சபையினையும்[10] அதற்கான ஆலோசனை சபையினையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் ஒரு காதிநீதிமன்றுக்கு ஒரு காதிநீதிபதி என்ற அடிப்படையில் 65 காதி நீதிமன்றங்கள் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் முஸ்லிம்களுக்கு சேவையாற்றி வருகின்றன. பெரும்பாலான காதிகள் அமைவிட ரீதியிலான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், குறிப்பிட்ட சில காதிகள் அதாவது மேமன் மற்றும் போஹ்ரா சமூக காதிகள் தாங்கள் வாழ்கின்ற பிரதேசங்களை அடிப்படையாக கொண்டல்லாது தம் இனம்சார்ந்து இலங்கை முழுவதுக்குமான நியாயாதிக்கத்தினை கொண்டிருக்கின்றனர்.

காதி சபையானது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட சபையாக[11] காணப்படுகின்றது. இது காதி நீதிமன்றங்களின் தீர்ப்புக்களின் செயற்பாடுகளின் மூலம் வருகின்ற மேன்முறையீடுகள் காதி சபைக்கு செய்யப்படும். அத்துடன் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட அமுலாக்கத்துடன் தொடர்பான கேள்விகள் எழும்போது அல்லது அதன் விளைவாக ஏதாவது ஒழுங்கு விதிகள் உருவாக்கப்படும்போது அதனை மேற்பார்வை செய்ய அல்லது கையாளவும் இச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. காதி சபையினது அமர்வுகள் கொழும்பு மற்றும் கல்முனையில் மாத்திரமே நடைபெறுகின்றது. காதி சபையினரது முடிவுகளால் வழக்குகள் தீர்க்கப்படாமல்

---

4 எட்.ஸக்கரியா எப், கொடிகார சி, 'உரிமைகளையும் தளங்களையும் கோரும் பெண்கள்: இலங்கையில் முஸ்லிம் தனியாள் சட்டத்தைத் திருத்துவதற்கான செயல்வாதம் - முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, கொழும்பு, இலங்கை

5 கொடிகார சி, 1999. '*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women'*. Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML)

6 முஸ்லிம்களின் மொத்த சனத்தொகையில் 51.4 % பெண்கள் 48.6% ஆண்கள்

7 சனத்தொகைப் புள்ளிவிபரம் 2012 – புள்ளிவிபரத் திணைக்களம் http://www.statistics.gov.lk/

8 மேலது

9 நு:.மான், எம்.ஏ, 2007, *Sri Lankan Muslims: Ethnic Identity within Cultural Diversity*. Colombo: International Centre for Ethnic Studies.

10 காதி, காழி, காஸி என்றும் அழைக்கப்படும்.

11 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 15

அல்லது வழக்கின் திறத்தவர்கள் பாதிக்கப்படும் போது மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு முறையீடு ஒன்றினை செய்ய முடியும். மேலும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் படி காதியாரின் உத்தரவின் படி, பராமரிப்பினைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், பராமரிப்பைச் செலுத்தும் படி வலுவாக்கும் கட்டளையை வழங்க நீதவான் நீதிமன்றத்தின் நீதவானுக்கு நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றம் பிள்ளையின் பாதுகாவல் மற்றும் திருமணக் கொடை (மஹர் மற்றும் கைக்கூலி) தொடர்பாக நிலுவையில் உள்ள தொகையை மீளப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழுவானது காதிமார்களது நியமனங்களைக் கையாள அதாவது நற்குணமுள்ள, சமூகத்தில் நல்ல வகிபங்கினை அடைந்துள்ள எந்த ஒரு முஸ்லிம் ஆணையும்[12] காதியாக நியமிக்கவும், காதிமார்களையும், காதி சபை அங்கத்தவர்களையும் அவர்களின் பதவியில் இருந்து இடைநிறுத்தவும், இடமாற்றங்களை செய்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் நீதிச்சேவை ஆணைக்குழுவானது காதிமார்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும், அதன் முடிவின்படி அவர்களது பதவியினை இடைநிறுத்தவோ அவர்களுக்கு மாற்றம் வழங்குவதற்கோ மட்டுமே அதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

***முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட ஆலோசனைச் சபை பற்றிய குறிப்பு***

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 04 ஆனது சமய மற்றும் பால்நிலை ஏற்பாடுகள் எதனையும் குறிப்பிடாமல், நான்கு முதல் ஒன்பது பேர் கொண்ட ஒரு ஆலோசனைச் சபையினை உருவாக்குவதற்கான ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது. ஆலோசனைச் சபையின் தலைவராக பதிவாளர் நாயகம் இருப்பார். இச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று வருடங்கள் வரை பதவி வகிக்க முடியும். இச்சபையின் கடமையானது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் நிர்வாகம் தொடர்பான சகல விடயங்களிலும் பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குதலாகும். இவ்வேற்பாடு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் கூட இச்சட்டமானது கொண்டு வரப்பட்டு 65 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் இன்னும் இந்த ஆலோசனைச் சபையானது உருவாக்கப்படவில்லை. இதில் தகுதி வாய்ந்த பெண்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களையும் உள்ளடக்க முடியும் என்பது கூட இதற்கான ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

இவ்வாறான ஒரு சபை அமுலில் இருக்குமெனின் காதிநீதி மன்ற முறையின் கீழ் சட்டம் தொடர்பான மீறல்கள் மற்றும் காதி நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பான பொருத்தப்பாடுகளின்மையினை மேற்பார்வை செய்யக் கூடிய தன்மையுடைத்ததாய் இருக்கும். இச்சபையில் பெண் அங்கத்தவர்கள் இருப்பது அவர்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அவதானித்து, கருத்துக்களை வழங்கவும், குறித்த சட்ட அமைப்புக்குள் அதனைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகளைக் கலந்துரையாடவும் மேலும் தேவையேற்படின் அதற்கடுத்தடிபடியாக எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கவும் உதவும். தற்போதைய நிலையில் இந்த ஆலோசனைச் சபையானது உருவாக்கப்படல் அவசியமானதாய் உள்ளது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பாக அனுபவமும், நிபுணத்துவமும் உள்ளவர்கள் பதிவாளர் நாயகத்திற்கு இது தொடர்பான விடயங்களில் பொருத்தமான அறிவுரைகளை வழங்கக்கூடிய வகையில் நியமிக்கப்படல் வேண்டும். இந்த ஆலோசனைச் சபையில் ஆகக்குறைந்தது 50 வீதத்திற்கு குறையாதளவு பெண்கள் உள்ளடக்கப்பட்டதாக அமைக்கப்படுவது முன்நிபந்தனையாக்கப்படல் வேண்டும்.

12 நீதிச் சேவை ஆணைக்குழுவின் தகவலின் படி, உயர்நீதிமன்ற நெறிப்படுத்தல்களுக்கு அமைவாக, காதிகள் 4 தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர். அவை சட்டத்தரணிகள், மௌலவி அல்லது ஆலிம், அலுவலகர் தரமுடைய ஓய்வு பெற்ற பகிரங்க உத்தியோகத்தர் மற்றும் அல்லது பட்டதாரி.

## முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பெண்களும் சிறுமிகளும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்

கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் காணப்படும் சில அம்சங்கள், பெண்கள், சிறுமிகளால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளின் தன்மையையும் அதன் அளவையும் காட்டுகின்ற உள்ளார்ந்த விடயங்களாகும்.

### 1. திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லை இன்மை

**ஏற்பாடுகள்:** பொதுத்திருமண பதிவுகள் கட்டளைச்சட்டத்தின் 1995ம் ஆண்டிற்கான திருத்தமானது திருமணம் செய்யும் இரு சாராரினதும் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லையாக 18 இருக்க வேண்டும் என கூறியுள்ள நிலையில், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் முஸ்லிம்களுக்கான ஆகக்குறைந்த விவாக வயதினை குறிப்பிடத் தவறியுள்ளது. அதேசமயம் தற்போதைய முஸ்லிம் விவாகமும் விவாகரத்துச் சட்டமானது இவ்வாறு வயதெல்லையினை குறிப்பிடத் தவறி இருப்பதன் காரணமாக சட்டரீதியாக இலங்கை முஸ்லிம்களுக்கு இளவயது திருமணத்திற்கான அனுமதியை வழங்குகின்றது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 23ஆனது 12 வயதுக்கு குறைந்த சிறுமிகளின் திருமணமானது காதியினால் விசாரிக்கப்பட்டு, அதிகாரமளிக்கப்படுமிடத்து மட்டுமே அத்திருமணத்தினை பதிவு செய்ய முடியும் என்ற வரையறையைக் கொண்டுள்ளபோதும் பதிவு செய்யப்படாமல் சடங்குரீதியாக செய்யப்படும் திருமணங்களும் வலிதானவையே என்ற ஏற்பாட்டையும் சட்டம் கொண்டுள்ளது.[13] இந்த பிரிவின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாத வேளையில் அதனை ஒரு குற்றமாக கருத முடியும் எனினும் அதற்கான தண்டனையானது "நூறு ரூபாய்க்கு மேற்படாத தண்டப்பணமும், அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும்"[14] என்பதாகவே அமைகின்றது.

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின்[15] பிரகாரம் 16 வயதுக்கு குறைந்த சிறுமியுடன் அவரது சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி பாலியல் உறவு வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் அது நியதிச்சட்ட பாலியல் வல்லுறவுக்கு சமமாகும். ஆயின் தண்டனைச்சட்டக்கோவைக்கான திருத்தம் 1995ல் நடைபெற்று நியதிச்சட்ட வல்லுறவு ஏற்பாடுகள் உள்வாங்கப்படும் போது இந்த விடயம் முஸ்லிம் சமயத்தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் சவாலுக்குள்ளாக்கப்பட்டு 16 வயதுக்கு குறைந்த மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட திருமணமான முஸ்லிம் சிறுமிகள் நீதிமுறையில் பிரிந்திருந்தாலே தவிர ஏற்புடைத்தாகாது[16] எனக்கூறி பின்தள்ளப்பட்டது. இதன் விளைவாக, முஸ்லிம்களினைப் பொறுத்தவரையில் நியதிச்சட்ட வல்லுறவு விடயம் தொடர்பில் ஏற்புடைத்தான வயது 12 ஆகும்.[17] மேலும், தலாக்[18] விவாகரத்து நடைபெறும் போது நீதிமுறையான பிரிவினைக்குரிய ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்பதுடன் மனைவி விவாகரத்து

---

[13] முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 16- திருமணத்தைப் பதிவு செய்யாமையானது அதன் வலிதுடைமையை எவ்விதத்திலும் பாதிக்காது.

[14] முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 82

[15] குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை – பிரிவு 363

[16] 1995ம் ஆண்டில், பெண்கள் மற்றும் சிறுவர்களது உரிமைகளுக்காய் பணிபுரியும் சிவில் சமூக அமைப்புகளால் செய்யப்பட்ட பாரிய பரிந்துரைகளால் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 363 திருத்தப்பட்டு 16 வயதுக்குக் கீழான சிறுமியுடனான பாலியல் உறவு அவளது சம்மதத்துடனோ இன்றியோ செய்யப்பட்டாலும் அது நியதிச்சட்ட பாலியல் வல்லுறவாக கணிக்கப்பட்டது. ஆயின் அச்சிறுமி அவனது மனைவியாகவோ 12 வயதுக்குக் கீழ்படாமலோ இருப்பின் அல்லது நீதிமுறையான பிரிவுக்குட்படாதிருப்பின் அது இக்குற்றத்திலிருந்து விலக்களிக்கும். எனவே இது முஸ்லிம் சிறுமிகளை விலக்களித்துள்ளது.

[17] UNICEF Sri Lanka, July 2013, 'Emerging Concerns and Case Studies on Child Marriage in Sri Lanka' http://www.unicef.org/srilanka/2013_Child_Marriage_Case_Studies.pdf

[18] கணவனால் சொல்லப்படும் விவாகரத்து

தொடர்பான முதலாவது அறிவிப்பின் பின்னர் கணவனது இல்லத்தில் மூன்று மாத காலத்திற்கு (இத்தா காலம்) இருப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார். இந்த கால கட்டப்பகுதியில் பெண்களை கட்டாயப்படுத்தி உடலுறவு (திருமண வல்லுறவு) கொள்ளும் போதும்கூட தண்டனைச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் பெண்கள் பாதுகாக்கப்படவில்லை.

**பிரச்சினைகளும் விளைவுகளும்:** நூல்களை மீளாய்வு செய்யும் போது, முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகளது உண்மையான நிலை தொடர்பாக பல முறைமையான ஆவணங்கள் இவ்வேற்பாட்டின் விளைவுகளை கோடிட்டுக் காட்டியுள்ளமையை அவதானிக்க முடிந்தது.[19]

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவியளித்த தன்னார்வத் தொண்டர்களின் கருத்துப்படி, இளவயது மனைவிமாரிடம் இருந்து கணவன்மார் விவாகரத்து கோருவதற்கான முக்கிய அடிப்படைக் காரணமாக இருப்பது 'இளவயது மனைவிமார் பாலியல் உறவுக்கு தகுதியற்றவர்கள்' என்பதும் 'வீட்டு வேலைகளை செய்ய முடியாதவர்களாக காணப்படுகின்றார்கள்' என்பதுமேயாகும். விவாகரத்துக்குள்ளாகும் இளம்பெண்கள் சமூகத்தில் தேவையற்றவர்களாக ஒரு ஆபத்தான நிலையில் விடப்படுகின்றனர். முதல் கட்டமாக இளவயதில் திருமணம் செய்யும் பெண்கள் மற்றும் சிறுமிகளது கல்வியானது வழக்கமாக இடைநிறுத்தப்படுகின்றது.[20] இது குறிப்பாக அவர்களது உயர் படிப்பினையும், பொருளாதார சந்தர்ப்பங்களினையும் மட்டுப்படுத்துவதாக அமைகின்றது. இது அவர்களை அவர்களது கணவன்மார் பராமரிப்பினை வழங்க முடியாமல் அல்லது விருப்பம் இல்லாமல் இருக்கும்போது, கணவனின் இறப்பின் போது, பலதார மணத்தின்போது, விவாகரத்து அல்லது கைவிட்டுச்செல்லும் போது பொருளாதார ரீதியில் பாரியளவு தங்கி வாழ்பவர்களாக இருக்கும் நிலைக்கு வலுக்கட்டாயமாக தள்ளிவிடுகின்றது.

UNFPA யின் 2011ம் ஆண்டின் அறிக்கையின் படி 'இலங்கையின் மூன்று மாவட்டங்களில் காணப்பட்ட இளவயது கர்ப்பத்தின் அதிகரிப்பு, தன்மை, காரணங்கள் தொடர்பாக கூறப்படுகையில், இஸ்லாமிய நம்பிக்கையைப் பின்பற்றுபவர்கள், முஸ்லிம் இனப் பெண்கள், அல்லது முஸ்லிம் வாழ்க்கைத்துணையை கொண்ட பெண்கள், வாழ்கின்ற சமூகத்தில்தான் இளவயது கர்ப்பம் அதிகரித்துக் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.'[21] இளவயதில் திருமணம் செய்யும் சிறுமிகள் பாலியல், இனப்பெருக்கம் மற்றும் குடும்பதிட்டம் தொடர்பான விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கும் இனப்பெருக்கம் மற்றும் மகப்பேற்று சுகாதாரம் தொடர்பாக உடலியல் ரீதியில் முதிர்ச்சியில்லாத சந்தர்ப்பத்திலும் அதிகூடிய அளவில் ஆபத்துக்குள்ளாகின்றனர்.[22] அத்துடன் அவர்கள் வீட்டு வன்முறை, பலவந்தமான பாலியல் உறவு (திருமண வல்லுறவு) உட்பட பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு உட்படும் ஆபத்து அதிகரித்துள்ளது.

**<u>சகல பிரஜைகளுக்குமான திருமணத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த வயதெல்லை</u>**

---

19 2015இல் FOKUS அமைப்பானது புத்தளத்தில் உள்ள முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்துடன் இணைந்து 1000 பெண் தலைமைக் குடும்பங்களுடன் அவர்களது பொருளாதார, சமூக, மற்றும் கலாசார உரிமைகளுக்கான அணுகுதல் தொடர்பிலான ஆய்வை மேற்கொண்டது. இதில் 42 விகிதமான பெண்கள் 18 வயதுக்குக் குறைவான நிலையில் குடும்ப வழமை மற்றும் வழக்காறு என்பதனால் 55 சதவிகிதமான பெண்களும், பொருளாதார காரணிகளுக்காக 23 சதவிகிதமான பெண்களும், திருமணம் முடித்துள்ளனர். மேலும் இவ்வாய்வு 18 வயதுக்கு முன்னர் திருமணமானவர்களுக்கும், 18 வயதின் பின் திருமணமானவர்களுக்குமிடையிலான குறிப்பிடத்தக்களவு கல்வியறிவு பெற்றுள்ளமையின் வித்தியாசத்தையும் வெளிப்படுத்தியது. 18 வயதுக்கு முன்னர் திருமணமான அநேக பெண்கள் 1-5 ஆம் தரம் மட்டுமே பொதுவாக படித்திருந்தனர். மூலம்: *FOKUS Women: Survey on Status of Muslim Female Heads of Household and their Access to Economic, Social and Cultural Rights in Puttalam District 2015)*

20 Gul, Begum Safana, 2014. *'Is Equal Justice Possible',* Islamic Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka

21 UNFPA, 2012. '*Extent, Trends and Determinants of Teenage Pregnancies in Three Districts of Sri Lanka*' http://srilanka.unfpa.org/publications/extent-trends-and-determinants-teenage-pregnancies-three-districts-sri-lanka

22 15 வயதுக்கு முன்னர் கருவுறும் சிறுமிகள் ஏனையோரை விட மகப்பேற்றின் போது இறந்து விடுவதற்கான 5 மடங்கு அதிக சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளனர். மூலம்: Girls Not Brides http://www.girlsnotbrides.org/what-is-the-impact/

ஒரே ஒரு வழக்காயினும், பல வழக்குகளாயினும் வழக்குகளின் எண்ணிக்கையினை கணிப்பதனை விட்டுவிட்டு, இளவயது திருமணம் என்பது ஏற்றுக் கொள்ளப்படவே முடியாதது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் சட்டப்போர்வையில் இதனைச் செய்வதனை தவிர்த்து முஸ்லிம் சமூகமானது அதனை நீக்குவதற்கு முனைப்புக்காட்ட வேண்டும்.

சமூக, பொருளாதார, கலாசார காரணங்களால் இளவயதுத் திருமணங்கள் நடக்கின்றன என்பதுடன் சேர்ந்து வாழ்வதனூடாக ஏனைய சமூகங்களிலும் இது காணப்படுகின்றது. ஆனால் இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் முஸ்லிம் சமூகத்தினைப் பொறுத்த வரையில் இது சட்ட ரீதியானதாக காணப்படுவதுடன் அரசு இதனை தடுப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காதிருக்கின்றமையுமாகும். ஏனைய சமூகங்களில் அரச நிறுவனங்களும் சிவில் சமூகமும் சிறுவர்களது நன்மை மற்றும் உரிமைக்காக இந்த பழக்கத்தினை இல்லாதொழிப்பதற்கு மிகவும் ஆக்கபூர்வமாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதேவேளை தேசிய அளவில் அரச நிறுவனங்களினால் இளவயது சிறுவர் திருமணம் (இளவயதில் சேர்ந்து வாழ்தல்) மற்றும் இளவயது கர்ப்பம் என்பவை தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தும் போது முஸ்லிம் சமூகத்தை 'அதனை கையாளுவது பிரச்சனைக்குரியது' என கூறி முழுமையாக கைவிட்டு செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

முஸ்லிம்களுக்கான ஆகக்குறைந்த திருமண வயதெல்லையினை நிர்ணயிக்க விருப்பம் இல்லாதவர்கள், வழக்கமாக அமெரிக்காவின் சில மாநிலங்களில் காணப்படும் குறைந்த திருமண வயது எல்லையினை குறிப்பிட்டு சிறுவர் உரிமை தொடர்பில் 'மேற்குல நாடுகளின் இரட்டைத்தன்மை' என அழைக்கின்றனர். அதேசமயம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக காணப்படும் அல்ஜீரியா, ஜோர்தான், ரியூனீசியா, மொறோக்கோ, துருக்கி, மற்றும் லெபனான் போன்ற நாடுகள் திருமணத்திற்கான வயதெல்லையினை சர்வதேச மனித உரிமைகள் தரத்திற்கமைவாக நிலைநிறுத்தியுள்ளன. அதை ஒருபோதும் நாம் கவனத்தில் எடுப்பதில்லை.

இதேவேளை முஸ்லிம் அரசியல்வாதிகள்,[23] சமயத்தலைவர்கள், மற்றும் சில தனிப்பட்டவர்களும், நிறுவனங்களும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட மீளாய்வின் போது ஆகக்குறைந்த திருமண வயது என்பது தொடர்பான தீர்மானம் முஸ்லிம் சமூகத்தினுள் இருந்து தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதற்கும் அது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ்தான் ஆளப்படல் வேண்டும் என்பதற்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர். எப்படியோ திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது என்னும் தலைப்பானது முஸ்லிம் சமூகத்தினுள் விவாதிக்கப்பட வேண்டிய தலைப்பாக காணப்படுவதுடன் மிகவும் முக்கியத்துவம் உள்ள விடயமாகவும் காணப்படுகிறது. அத்துடன், சமய ரீதியிலான கண்ணோட்டத்தில் ஆதரிப்பு அல்லது எதிர்ப்பு என பலதரப்பட்டவர்களின் பார்வையினூடாகத்தான் ஆகக்குறைந்த வயதின் உருவாக்கம் தங்கியுள்ளது. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தினைச் சேர்ந்த பொறுப்புவாய்ந்த சகலரும் இணைந்து 1) ஆகக்குறைந்த திருமண வயதினை 18 ஆக உயர்த்துவதற்கும் 2) அரசு தனது சகல பிரஜைகளுக்கும் ஆகக்குறைந்த திருமண வயதினை நிறுவுவதனை தீர்மானிப்பதற்கும் உடன்படுவார்கள் அல்லது சம்மதம் தெரிவிப்பார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றல்ல.

இலங்கை அரசானது பெண்ணோ, ஆணோ சகல பிரஜைகளும் தத்தமது கலாசார, பாரம்பரிய மற்றும் மதச்சுதந்திரம் தொடர்பான உரிமைகளை அங்கீகரிப்பதும், அதற்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதும் மிக முக்கியமாகும். ஆகக்குறைந்த திருமண வயதினை தீர்மானிப்பது

[23] றவூப் ஹக்கீம் அவர்களால் சொல்லப்பட்ட கூற்றைக் காண்க. மார்ச், 2015 http://www.sonakar.com/?p=80151

போன்ற விடயங்களில் கலாச்சாரம் மற்றும் சமயம் என்ற பெயரில் சிறுவர்களினது உரிமையினை விட்டுக்கொடுக்காமல் இருப்பதனை உறுதிப்படுத்துவது இலங்கை அரசினது பொறுப்பாகும்.

இலங்கையானது பலவகையான சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களில் குறிப்பாக சிறுவர் உரிமைகள் சமவாயம் (CRC)[24] மற்றும் பெண்களுக்கெதிரான சகல விதமான பாராபட்சங்களையும் இல்லாது ஒழிப்பதற்கான சமவாயம் (சீடோ/CEDAW) போன்ற ஆவணங்களின் ஒரு தரப்பாகும். அத்துடன் அவை பூகோள ரீதியிலான சிறுவர் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளைப் பேணுவதனையும் தேவைப்படுத்துகின்றன. சிறுவர் உரிமைகள் சமவாயம் 18 வயதுக்கு குறைந்த சகலரும் சிறுவர்கள் என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் உறுப்புரை 2 எந்த ஒரு சிறுவரும் நியாயாமற்ற வகையில் சமயம், இனம், அல்லது பால்நிலை என்ற அடிப்படையில் நடத்தப்பட முடியாது என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது. உறுப்புரை 19 ஆனது சிறுவர்கள் சகல விதமான வன்முறைகள், அதாவது 'காயப்படுத்தப்படுவது, உடல் மற்றும் உள ரீதியிலான இழிவான நடத்துகை' போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் எனத்தெரிவிக்கின்றது.

சீடோ சமவாயத்தின் அடிப்படையில், சிறுவயது மற்றும் பலவந்தத் திருமணம் 'தீங்கு விளைவிக்கும் பழக்கம்' என கருதப்படுவதுடன் இதனை குறைப்பதற்கும் இல்லாமல் செய்வதற்கும் அரசு மிகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தனிப்பட்ட நபருக்கும், ஒட்டுமொத்தமாக அரசுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அரசானது தனது பிரஜைகள் தீர்க்கமாக வாக்களிப்பதற்காக குறித்ததொரு வயதை நிர்ணயிக்கும் எனின் அதேபோல் ஆகக்குறைந்த திருமண வயதையும் அதே தர்க்கரீதியில் செயற்படுத்த வேண்டும். அரசானது இளவயதினர் மற்றும் சிறுவர்கள் 18 வயதுக்கு முன்னர் திருமணம் செய்தல் என்பது அவர்களது ஆரோக்கியம், கல்வி மற்றும் நலனோம்புதல் போன்ற விடயங்களுக்கு பாதகமாக அமையும் என அதை தடுக்குமானால், அது அந்த நாட்டில் உள்ள சகல சிறுவர்களுக்கும் அதாவது இன, மத ரீதியிலான வேறுபாடின்றி சகலருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

**கோரிக்கை:** இன, மத வேறுபாடின்றி சகல பிரஜைகளுக்கும் ஆகக்குறைந்த திருமண வயது 18 என இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இஸ்லாமிய சட்டவியல் நிர்ணயிக்கப்பட்ட வயது என்று எதையும் குறிப்பிடவில்லை எனினும் சில அறிஞர்கள் குறித்த வயதெல்லையினை நிர்ணயிப்பதற்கு அனுமதியில்லை என்று கருதுகின்ற நிலையில், அரசாங்கமானது தனது ஏனைய பிரஜைகளுக்கு ஆகக் குறைந்த வயதெல்லையினை நிர்ணயித்தது போன்று பொறுப்பைக் கையிலெடுத்து வயதெல்லையினை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இதற்காக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலிருந்து வயதெல்லையினை நீக்க வேண்டிய இருக்கும். (ஏனெனில் தற்போது இச்சட்டத்தின் கீழ் மீளாய்வு மற்றும் மாற்றம் என்பதானது தனிப்பட்ட சூழ்நிலையிலும், தனிப்பட்டவர்களின் ஏதேச்சாதிகாரமான தீர்மானம் எடுத்தலிலும் தங்கியுள்ளது) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது அரசினால் நிர்ணயிக்கப்படும் வயதினைப் பிரதிபலித்தல் வேண்டும்.

### 2. முஸ்லிம் மணமகளுக்கு சுயாதீனம் மற்றும் தீர்மானம் எடுத்தலில் சமத்துவம் இன்மை

**ஏற்பாடுகள் :** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது விசேடமாக சுன்னி பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் மணமகளுக்கு திருமணத்துக்கான தனது சம்மதத்தைத் தெரிவிக்கும்

---

[24] உறுப்புரை 24 (3) – சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் 'வினைத்திறனான, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதாரத்துக்கு கெடுதலான பாரம்பரிய பழக்கங்களை ஒழித்து விடும்படி அரச தரப்புக்கான கடப்பாட்டை விதிக்கின்றது. மற்றும் இச்சமவாயத்துக்கான (General Comment on HIV/AIDS (GC No 3 para 11) பொதுக் கருத்தானது இளவயதுத் திருமணங்கள் 'கெடுதலான பாரம்பரிய பழக்கங்கள்' என்பதன் பொருளில் வருவதாகக் குறிப்பிடுகின்றது.

ஏற்பாட்டினை திருமணத்துக்கான முன்நிபந்தனையாக கட்டாயமாக்கவில்லை. இச்சட்டத்தின் பிரகாரம் “வலி” (*நெருங்கிய ஆண் பாதுகாவலர்*)[25] க்கு மணமகளை திருமணம் செய்து கொடுக்க உரிமை உண்டு. “வலி” ஒருவர் இல்லாத சந்தர்ப்பங்களில் காதி அந்த திருமணத்தினை அங்கீகரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.[26]

பொது திருமண பதிவுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் திருமணத்தின் திறத்தவர் என்ற வகையில் மணமகள் வெளிப்படையாக தனது சம்மதத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் சமமாக வழங்கப்பட்டிருப்பதுடன், உத்தியோகபூர்வ ரீதியிலான திருமண ஆவணங்களில் கையொப்பம் இடுதலுக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிலையில் முஸ்லிம் திருமணங்களில் ஆவணங்களில் மணமகளது கையொப்பத்திற்கோ அல்லது விரல் அடையாளத்திற்கான ஏற்பாடோ காணப்படவில்லை. நிக்கா (திருமணம்) வைபவத்திலும், திருமணப் பதிவிலும் மணமகளின் சார்பாக ‘வலி’யினது சம்மதம் (மற்றும் ஒப்பம்) மட்டுமே தேவைப்படுத்தப்படுகின்றது.

இஸ்லாமிய சட்டத்தில் சம்மதம் என்பதன் “தேவைப்பாடுகள்” உண்மையாக மத்ஹப்களின் அடிப்படையில் வேறுபடுகின்றன. மத்ஹப் என்பது சுன்னி பிக் (இஸ்லாமிய வாதம்) சிந்தனை ஒன்றாகும். தற்போது முக்கியமாக 10ம் நூற்றாண்டில் நான்கு இமாம்களால் உருவாக்கப்பட்ட நான்கு சுன்னி மத்ஹப் சிந்தனைகள் காணப்படுகின்றன. இது அபூ ஹனீபா (ஹனபி சிந்தனை) மலிக் (மலிகி சிந்தனை) ஷாபி (ஷாபி சிந்தனை) மற்றும் அஹமட் (ஹன்பலி சிந்தனை) என்பனவற்றை உள்ளடக்கும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் அடிப்படையில் ஷாபி மத்ஹப்பின் கீழ், மணமகள் திருமணம் செய்வதாயின் தனது வலியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஹனபி மத்ஹப்பின் கீழ் வயது வந்த பெண்ணொருவரின் திருமணத்தின் போது (புத்தி சுவாதீனமானவர்) ‘வலி’ யின் அனுமதி இல்லாமல் அவள் சட்ட ரீதியாகத் தகுதி வாய்ந்த (கு.ஃ.பு) ஒருவரை திருமணம் செய்தால் அது வலிதானதாகும். எப்படியோ இந்தப்பிரிவின் ஏற்பாடுகள் அல்லது இதிலுள்ள தெரிவு பற்றிய அறியாமை அல்லது பொதுவாக வலி செயற்பட்டு வரும் வழக்காற்று முறையானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மணப்பெண் ஹனபி, ஷாபி அல்லது வேறு ஏதாவது மத்ஹப்பினைச் சேர்ந்தவர் என்ற எந்த அடையாளப்படுத்தலும் இன்றி வலியே மணப்பெண் சார்பாக சம்மதத்தினை வழங்குவதுடன் அவள் சார்பான ஒப்பத்தினையும் இடுகின்றார்.[27]

இந்த நடைமுறையானது ஷியா பிரிவினரின் தாவூதிபோரா சமூகத்தில் வேறுபடுகின்றது. அதாவது இந்த சமூகம் திருமணத்திற்கான வித்தியாசமான படிவம் ஒன்றினை கொண்டுள்ளதுடன் அப்படிவத்தில் மணப்பெண் உத்தியோகபூர்வமாக தனது சம்மதத்தினை தெரிவிக்கும் வகையில் தனது ஒப்பத்தினை இடும் பகுதி ஒன்று காணப்படுகின்றது.

---

25 “வலி அல்லது வலிதாரர் என்பது திருமணத்தைப் பொறுத்தளவில், திருமண பாதுகாவலர். பொதுவாக சில சிந்தனைப் பிரிவுகள் இதனை திருமணத்துக்கு மணமகள் சார்பாக சம்மதம் வழங்கும் அதிகாரம் கொண்ட தந்தை அல்லது தந்தை வழி பாட்டன் என அங்கீகரிக்கிறது. : Women Living Under Muslim Law 2006, *Knowing our Rights: Women, Family and Law in the Muslim World* http://www.mediterraneas.org/IMG/pdf/kor_2006_en.pdf)

26 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 47(3) – ஒரு பெண்ணுக்கு வலிதாரர் இல்லாத போது (பெண் தலைமை, ஆண் உறவினர் இன்மை, இஸ்லாத்துக்கு மதம் மாறியமை) காதி அத்திருமணத்துக்கு ஒப்புதல் அளிக்க முடியும்.

27 Marsoof, Saleem 2012, *Muslim Matrimonial Law – Some Grey Areas* https://www.academia.edu/9905307/Muslim_Matrimonial_Law_-_Some_Gray_Areas

**சம்பவ கற்கை:** கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 15 வயதான சிறுமியொருவர் தனது கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஆணினால் அவரைத் திருமணம் செய்யும்படி தொடர்ச்சியாகத் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார். அச்சிறுமி தொடர்ந்தும் அதனை மறுத்து வந்தாள். பாடசாலைக்கு சென்று வந்ததனால் அவளுக்கு திருமணம் செய்வதில் ஆர்வம் இருக்கவில்லை. ஒரு நாள் தனியாக வீட்டில் இருந்த போது இந்த நபர் அவளது வீட்டினுள் நுழைந்து அவள் உடைமாற்றும் வேளையில் பலாத்காரம் செய்ய முயற்சி செய்துள்ளான். அவள் கூச்சலிட்டு கத்தவும் அயல்வீட்டில் இருந்தவர்கள் ஓடிவந்து இந்த நபரை அவ்வறையில் கண்டதுடன், அச்சிறுமியைக் காப்பாற்றியுள்ளனர். சிறிது நேரத்தின் பின்னர் அவர்கள் அந்த சிறுமியையும், அந்நபரையும் பள்ளிவாசல் குழுவிடம் அழைத்துச் சென்றுள்ளனர். பள்ளிவாசல் குழு அந்த சிறுமிக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாயும், அதனால் வேறு எவரும் அவளை திருமணம் செய்ய முன்வரமாட்டார்கள் என்று தெரிவித்து குறித்த நபரையே திருமணம் செய்யும் படியும் வற்புறுத்தியுள்ளது. இதனை சிறுமி மறுத்த போதும் பள்ளிவாசல் சபை கட்டளையிட்டதனால் அவளது குடும்பத்தனரால் அதனை எதிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் அவள் திருமணம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டாள். திருமணத்தின் பின்னர் அந்த நபர் அவளுடன் ஒரு மாத காலமே இருந்ததுடன் அதன் பின்னர் அவளை கைவிட்டுச்சென்றான். பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்ட சிறுமி தற்போது தனிமையில் வாழ்ந்து வருவதுடன் கடந்த இரண்டரை வருட காலமாக தனது குடும்பத்தின் சிறு உதவியுடன் தனது வாழ்வினை நடத்தி வருகின்றாள்.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின்படி முஸ்லிம் பெண்கள் தமது சுயாதீனமான விருப்புடன் சுயமாக திருமணத்தினை புரிய இடமில்லை என்பதுடன் ஆண் பாதுகாவலர் ஒருவரது அனுமதி தேவைப்படுத்தப்படுகின்றமையானது பராயமடைந்த முஸ்லிம் பெண்கள் கூட பராயமடையாதோராய் கருதப்படும் நிலையைக் காட்டுகின்றது. 'வலி' என்ற விடயம் குடும்ப விடயங்களில் பெண்களின் தனிப்பட்ட மற்றும் சமமான முகவராண்மையையும், சுயாதீனத்தையும் மட்டுப்படுத்துகின்றது. இந்த ஏற்பாடு தாதை வழி ஆதிக்கத்தினூடாக வருவதுடன் திருமணம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் பெண்களது தகுதி அவர்களது குடும்ப ஆண் உறுப்பினர்களினாலும், சமூகத்தினராலும் மட்டுப்படுத்தப்படுகின்றது.

தங்களுக்கு காணப்படும் சட்ட ரீதியிலான அதிகாரங்களை கொண்டு 'வலி'யாக இயங்க அதிகாரம் படைத்தோர் தமது அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து பெண்கள் மற்றும் சிறுமிகளை அவர்களது இளவயதில் கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்த சந்தர்ப்பங்களையும் இந்த ஆய்வு கற்கையின் மூலம் அறியமுடிந்தது. ஒரு சம்பவத்தில் முல்லைத்தீவில் விவாகரத்து பெற்ற ஒரு இளம்பெண் தெரிவிக்கையில் தான் 14 வயதாக இருக்கும் போது 'வலி'யால் கட்டாயப்படுத்தப்பட்டு திருமணம் செய்து கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார். தனது சித்தியினது மகளுக்கே திருமணம் என ஆரம்பத்தில் அவருக்கு தெரிவிக்கப்பட்டதுடன் அவர் முதலிரவுக்காக அறை ஒன்றினுள் விடப்பட்டு பூட்டப்படும் வரை அவருக்கே திருமணம் என்ற எதுவித அறிவிப்புகளும் சொல்லப்படாமல் இருந்தது. இவர் இன்னும் இந்த அனுபவத்தின் பாதிப்பினைக் கொண்டிருந்தார். நடைமுறையில் மணமகளது விருப்பத்தினை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான ஏற்பாடுகள் இன்மையானது அவர்களுக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ பெண்கள் மற்றும் சிறுமிகளை திருமணத்திற்குள் பலவந்தமாக தள்ளப்படும் அல்லது கட்டாயப்படுத்தும் சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றது.

பெண்கள் ஏன் திருமணச் சான்றிதழில் கையெழுத்துப் போட முடியாமல் இருக்கின்றது என்பதற்கு திருமண பதிவாளரினால் அல்லது காதியினால் கூறப்படும் வழமையான காரணம், நிக்கா சடங்குகள் பெரும்பாலும் பள்ளிவாசல்களில் இடம்பெறுவதுடன், அநேகமாக இந்த இடங்களில் பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அணுகுதலே உள்ளது என்பதாகும். ஆயின், மணமகளின் விருப்புக்கான கையெழுத்தினை பெற்றுக்கொள்வது தொடர்பாக சமயத்தலைவர்கள், பதிவாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உண்மையான கரிசனையோடு

நோக்கின் மேற்சொன்ன விடயமானது வெறும் இடம் சார்ந்த ஒரு பிரச்சினை மட்டுமே என்பதனைக் காணமுடியும். போரா சமூகத்தைப் பொறுத்தளவில் பெரும்பாலான அவர்களது நிக்கா சடங்கானது இருபாலாரும் கலந்து கொள்ளத்தக்கவாறு அவர்களது வீடுகளில் அல்லது தனியார் இடங்களில் இடம்பெறுவதுடன், 'இஸ்லாத்தில் மணப்பெண்ணின் சம்மதம் கட்டாயமானது' என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்த சமூகத்தின் திருமணப்பதிவாளர் நீண்ட வருட காலமாக மணமகளும் திருமணப் பதிவுப் பத்திரத்தில் கட்டாயம் ஒப்பமிடவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார். ஹனபியாக இல்லாத மணப்பெண்கள் தமது நிக்கா சடங்கின் போது தமது சம்மதத்தினை தெரிவிக்கவும், கையொப்பம் இடவும் வழியில்லை. தனது திருமணப்பதிவில் தான் கையொப்பமிட வேண்டும் என்று கூறிய ஷாபி மணப்பெண்ணை, மணப்பெண் தன்னை ஹனபியாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கூறி அதன்படி ஒரு ஹனபி திருமணப்பதிவாளரினால் அம்மணப்பெண்ணின் கையொப்பம் இடப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை இக்கள ஆய்வு சந்தித்தது. எவ்வாறெனினும் இது மிக அரிதான வழக்கமாகும்.

"பெற்றோரது ஆசீர்வாதம்" மற்றும் அங்கீகாரம் என்பது நம்பிக்கை அல்லது இனம் என்ற வேறுபாடு இல்லாமல் பொதுவாக அனைத்து தம்பதியரின் கரிசனையில் உள்ள ஒரு விடயமாக இருக்கும் அதேவேளை பொது திருமண பதிவு கட்டளைச்சட்டத்தின் கீழ் திருமண பந்தத்தில் இணைவதற்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளர்ந்த மணமகனுக்கும், மணமகளுக்கும் சமமாக வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் நிலமை இதுவன்று.

இதனால்தான் இலங்கையின் பிரசையாக தனிநபர் உரிமைகளுக்கும், சம்மதம் என்பதற்கும் இடையிலான தொடர்பினை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சுயாதீனமாக தனது திருமணத்திற்கான சம்மதத்தைத் தெரிவிக்கும் பெண்ணினது உரிமையினை மறுப்பதானது பெண்களது 'தனிநபருக்கான' உரிமையையும், பிரசைகள் என்பதற்கா உரிமையினையும் கூட மறுப்பதாக அமைகின்றது.

இலங்கையில் எந்தவொரு சட்டரீதியாகப் பிணிக்கும் ஆவணத்திற்கும், நடபடிக்கும் ஒரு கையெழுத்து அல்லது விரல் அடையாளம் என்பது அடிப்படையான தேவைப்பாடாகும். மேலும் இஸ்லாமிய நூல்கள் மற்றும் வழக்காறுகள் என்பன வரலாற்றிலே பெண்கள் தமது சுயவிருப்பின் அடிப்படையில் ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கான தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களை தாமே கொண்டிருந்தார்கள் என்பதனை விளம்புகின்றன. மணப்பெண்ணினது கையொப்பம் இடப்படுவதனை உறுதிப்படுத்துவதானது கட்டாயப்படுத்தி அல்லது வலுக்கட்டாயமாக பெண்களை திருமணத்தில் நுழைக்கவில்லை என்பதனை உத்தரவாதப்படுத்தாது என்றாலும் ஆகக்குறைந்தது பெண்களுக்கு தாம் சட்டரீதியாக ஒரு திருமண பந்தத்தில் இணைகின்றோம் என்பதனை தெரிந்து கொள்ள உதவும்

**கோரிக்கை**: முஸ்லிம் பெண்களும் இலங்கை நாட்டினது பிரஜைகள் என்ற வகையில் அவர்கள் தமது திருமண பந்தத்தில் இணைவதற்கான தீர்மானம் எடுப்பதற்கு சுயாதீனமும், தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் உடையவர்கள் என்பதோடு திருமண பந்தத்தில் இணைந்து கொள்ள ஆண் உறவினரினதோ அல்லது காதியினதோ அனுமதியினை பெறக் கட்டாயப் படுத்தப்படக் கூடாது. அவர்களது கணவர்களைப் போன்று தமது சம்மதத்தினைத் கொள்கையளவிலும், ஆவணத்திலும் வெளிப்படுத்த சம உரிமை உடையவர்களாக இருத்தல் வேண்டும். திருமணத்திற்கான உத்தியோகபூர்வமான சகல ஆவணங்களிலும் மணமகன், மணமகள் இருவருமே கையெழுத்து அல்லது விரல் அடையாளத்தினை இடுவதனைக் கட்டாயமாக்க வேண்டும்.

### 3. கைக்கூலி (சீதனம்)

கைக்கூலி என்னும் ஒரு வகை சீதனமானது இலங்கை சோனகரினால் பின்பற்றப்படுகின்ற பழக்கம் என்பதுடன் இது இஸ்லாமிய சட்டத்திற்கு புறம்பானதாகும். இந்த வழக்காறானது சிங்கள மற்றும் தமிழ் மக்களது திருமண பழக்க வழக்கங்களிலானால் முஸ்லிம்களிடையே செல்வாக்குச் செலுத்தியதாக யூகிக்கப்படுகின்றது. இச்சீதனமானது மணமகளது குடும்பத்தினால் மணமகள் சார்பாக நம்பிக்கையின் அடிப்படையில் வைத்திருக்கும் படி மணமகனிடம் வழங்கப்படுகின்றது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் கைக்கூலியாக பொன் அல்லது பணம் போன்ற அசையும் சொத்துக்கள்[28] மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆயின் நடைமுறையில் வீடு, காணி, வாகனங்கள் போன்றனவும் மணமகள் தரப்பிடம் இருந்து கேட்டு பெறப்படுகின்றன.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் பிரிவு 47 இன்படி, மணமகள் அல்லது மனைவி கைக்கூலியான அசையும் சொத்துக்களினை திருமணத்தின் போது அல்லது திருமணம் குலைந்த பின்னர் காதியிடம் ஒரு விண்ணப்பத்தினை செய்வதன் மூலம் மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.[29] ஆயினும் காதிக்கு அசையா சொத்துக்கள் தொடர்பாக விசாரணை செய்ய நியாயாதிக்கம் கிடையாது. காணி அல்லது அசையாத சொத்தினை மீளப்பெற அப்பெண் மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றினைத் தொடர வேண்டும்.

**சம்பவக்கற்கை:**
தனது தாயாரையும், சகோதரனையும் அணுகி பெண் கேட்டு வந்த தனது மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆணுக்கு 16 வயது நிரம்பிய கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த சிறுமியொருவர் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். இந்த ஆண் மிகப்பெரிய அளவு கைக்கூலியினை (சீதனம்) கேட்டதனால் குடும்பத்தினர் தமக்கு இருந்த நிலத்தின் ஒரு பகுதியனை விற்று அவருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றினை வாங்கியதுடன் மிகுதியினை பணமாக கொடுத்தனர். திருமணத்தின் பின்னர் அவள் கணவனுடன் அவனது வீட்டில் வாழச்சென்றாள். திருமணம் நடந்த மூன்றாம் நாளின் பின்னர் அவன் அந்தப்பெண்ணிடம் குடும்பத்தவரை மிகுதியான நிலத்தினையும் விற்று பணத்தினை தனக்கு கொடுக்கும்படி கூறும்படி அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்தான். இதற்கு அவள் அதனை எதிர்த்து தனது குடும்பம் அவ்வாறு செய்தால் அவர்கள் வாழ்வதற்கு இடம் இல்லாமல் இருக்கும் என தெரிவித்தாள். இதன் பின்னர் அவன் அவளை கடுமையான உடல் ரீதியிலான சித்ரவதைகளை புரிய ஆரம்பித்ததுடன் திருமணமான 10ம் நாளில் மோட்டார் வாகன தலைக்கவசத்தினால் அவளைத் கடுமையாக தாக்கியதால் கடுமையான காயங்களுக்குள்ளாகி அவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. வைத்திய சாலையில் கூட தனக்கான வீட்டு வன்முறைகளை வேறு எவரிடமும் சொல்ல தயங்கி தான் தடுக்கி விழுந்ததனால்தான் குறித்த காயங்கள் ஏற்பட்டதாக கூறியிருந்தாள். இதன் பின்னர் கணவன் அவளை அவளது தாயார் வீட்டில் விட்டு விட்டு அவளை கைவிட்டுச்சென்றான். இப்பொழுது அவளுக்கு 18 வயது. சித்திரவதைப்படுத்தும் கணவனுடன் சேர்ந்த வாழ முடியாமல் பஸாஹ் விவாகரத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். மோட்டார் சைக்கிள் தவிர அவனுக்கு கொடுத்த கைக்கூலியினை இன்றளவும் மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** மணமகள் தரப்பிடம் சீதனத்தினை கோருவது இஸ்லாத்தைப் பொறுத்தளவில் ஹராம் அல்லது தடைசெய்யப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. ஆனால் இலங்கை சோனகர்களிடையே வழக்காறாக இருப்பதனால் இந்த நடைமுறையானது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் திருமணப்பதிவு பத்திரத்தில் கைக்கூலியினை பதிவு செய்வது என்பது விருப்பத்திற்குரிய

---

28 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 97

29 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 47 (1)(f)

தெரிவாக உள்ளது. அதனால் பல மணமகன்கள் பல சந்தர்ப்பங்களில் அதனை பதிவு செய்யாமல் விடுகின்றனர் அல்லது தொகையினை குறைவாகப்பதிவு செய்கின்றனர். இந்த நிலைப்பாடானது திருமணம் வெற்றிகரமானதாக இல்லாமல் போகும் போது பெண்களுக்கு கைக்கூலியினை மீளப்பெற்றுக்கொள்வதில் சவால்களைத் தோற்றுவிக்கின்றன. நிக்கா சடங்கின்போது அசையா சொத்துக்களை பதிவதற்கான ஏற்பாடுகள் இல்லை என்பதனால் அசையா சொத்துக்கள் பதிவு செய்யப்படாமலே விடப்படுகின்றன.[30]

பல சந்தர்ப்பங்களில் மணமகன்கள் அடிக்கடி கூறுவதாவது தாம் மணமகள் தரப்பிடம் கைக்கூலி கேட்கவில்லை எனினும் அவர்களே சுயவிருப்பத்துடன் வழங்கினார்கள் என்பதாகும். ஆனாலும் திருமணப் பொருத்தம் பார்க்கும் போதும், திருமணக் கலந்துரையாடலிலும் சமூக அழுத்தமும், நிர்ப்பந்தமும் ஒரு தாக்கத்தைச் செலுத்துகின்றது. குடும்பங்களுக்கிடையிலான அழுத்தங்களுக்கு, மருமகள்கள் மோசமாக நடத்தப்படுவதற்கு, வீட்டு வன்முறை மற்றும் விவாகரத்து போன்ற விடயங்களுக்குரிய பொதுவான ஒரு காரணமாக கைக்கூலி காணப்படுகின்றது. சீதனமாக வாக்களித்த தொகையை கொடுக்காமல் விட்டதற்காக அல்லது பெரிய சீதனத்தொகை கொடுக்க வேண்டும் என்ற கணவர்களின் தொடர்ச்சியான கோரிக்கையின் விளைவாக பெண்கள் விவாகரத்துச் செய்யப்பட்டிருக்கின்றார்கள். தலாக் அல்லது பஸாஹ் அடிப்படையிலான பல விவாகரத்துக்களில், காதியானவர் பெண்கள் தமது கைக்கூலியினை மீளவும் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதை அலட்சியப்படுத்துவது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் அசையும் சொத்துக்கள் தொடர்பாக தீர்மானிக்கும் நியாயாதிக்கம் தமக்கு உண்டு என்பதனைக் கூட அறியாதவர்களாக இருக்கின்றனர். திருமணப்பதிவில் கைக்கூலியானது பதிவு செய்யப்படாவிட்டாலும் காதிகள் வாய்மூலமான சாட்சியின் ஊடாக கைக்கூலியினை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் என்பது காதிகளுக்கும், பெண்களுக்கும் அநேகமாக தெரியாதுள்ளது.[31] நடைமுறையில் கணவன் கைக்கூலியினை மீளச் செலுத்த மறுக்கின்ற போது மனைவியிடம் கலந்தாலோசிக்காமல் அல்லது அவளுக்கான தெரிவுக்கு அல்லது மாற்றுத்தேர்வுகளுக்கு இடமளிக்காமல் சில காதிமார் கைக்கூலியின் ஆகக்குறைந்த தொகையினை செலுத்தும்படி கணவனுடன் பேரம் பேசுகின்றனர்.[32]

இலக்குகுழு கலந்துரையாடலின் போது, வெளிப்பட்ட ஒரு விடயம் பலதாரமணங்களுக்கான ஒரு முக்கிய காரணம் கணவன்மார் கைக்கூலியினை பெற்றுக்கொள்வதாகும். கணவன் மனைவியை தலாக் அல்லது விவாகரத்து செய்யும் போது, விவாகரத்து நடபடியின் ஒரு பகுதியாக மனைவியின் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட கைக்கூலியினை கணவன் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதனை பொதுவாக காதிகள் கவனத்தில் எடுப்பதில்லை. இதன் விளைவாக பல பெண்கள் தங்களுக்கு உரித்தான கைக்கூலியினை இறுதியில் இழந்து விட நேரிடுகின்றது.

**கோரிக்கை:** கைக்கூலி இஸ்லாத்துக்கு முரணான வழக்காறு என்பது மட்டுமன்றி மிகவும் பாரதூரமான வகையில் முஸ்லிம் பெண்களையும் அவர்களது குடும்பங்களையும் பாதிக்கின்றன. இது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலிருந்து நீக்கப்படல் வேண்டும். எவ்வாறெனினும் யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு இவ்வழக்காற்றை குறைக்கவும், இல்லாதொழிக்கவும் வழங்கப்படும் கைக்கூலி அனைத்தையும் (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்) கட்டாயமாக திருமணத்தின் போதே பதிவு செய்தல் வேண்டும். திருமணத்தின் எந்த நேரத்திலும், பிரிவினையின் போது அல்லது விவாகரத்தின் போது கைக்கூலியினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு தெளிவான நடபடிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

30 Case 42, Source: Gul, begam Safana, 2014. 'Is Equal Justice Possible', Islamikc Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka

31 P.18, Source: Gul, Begam Safana, 2014. 'Is EqualJustice Possible',Islamic Women's Association for Research and Empoerment (IWARE), Batticaloa, Sri Lanka

32 Case 52, Source: Gul, begam Safana, 2014. 'Is Equal Justice Possible', Islamikc Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka

## 4. விவாகரத்திற்கான சமத்துவமற்ற ஏற்பாடுகள்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் ஆணுக்கும், பெண்ணுக்கும் விவாகரத்தின் வகைகள், நிபந்தனைகள் மற்றும் நடபடிகள் தொடர்பாக வேறுபாடுகளை கொண்டுள்ளது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் கணவன்மார் தலாக் சொல்லி விவாகரத்து பெறுவதற்கான ஏற்பாடு காணப்படுவதுடன் மனைவிமார் பஸாஹ் விவாகரத்தினை பெறுவதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

காதிகள் சபையின்படி,[33] அதிகளவான மேன்முறையீடுகள் விவாகரத்து வழக்குகளில் காதிகள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அமைந்தனவாகவேயுள்ளன. ஆகக்கூடிய மேன்முறையீடுகள் கிழக்கு மாகாணத்தில் (விசேடமாக கிண்ணியா மற்றும் சம்மாந்துறை) மற்றும் கொழும்பு மாவட்டத்தில் இருந்து செய்யப்படுகின்றன.

### 4.1. தலாக் (கணவனால் கோரப்படும் விவாகரத்து)

**ஏற்பாடுகள்** : தலாக் (இதனை நேரடியாக மொழிபெயர்ப்பதாக இருந்தால் "நான் உன்னை விவாகரத்து செய்கின்றேன்" எனத் தெரிவிப்பதாகும்) என்பது கணவனால் முன்னெடுக்கப்படும் விவாகரத்து முறைகளில் ஒன்றாகும். தலாக் விவாகரத்தானது கணவனுக்கு விவாகரத்துக்கான அடிப்படை அல்லது காரணம் எதனையும் கொண்டிருக்கத் தேவைப்படுத்தவில்லை. மேலும் அவ்வாறான காரணம் ஏதுமிருப்பின் அதனை காதி பதிவு செய்வதனை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் அனுமதிக்கவில்லை.[34]

தலாக் விவாகரத்தில் கணவன் விவாகரத்தினை மீளப்பெறக் கூடியதாக அல்லது முடியாததாக கருதும் அல்லது கருதாது விடும் விசேடமான முறைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது " தலாக் அஹ்ஸன்" எனும் மீளப் பெற்றுக் கொள்ளும் விவாகரத்து முறையை அனுமதிக்கின்றது. இதில் "தலாக்" என்பது மூன்று முறை கணவனால் மூன்று மாதகால இடைவெளியில் (மாதம் ஒரு முறை என மூன்று மாதம்) கூறப்பட்ட பின்னர் விவாகரத்து வழங்கப்படும். கணவன் விவாகரத்துக்கான அறிவித்தல் கொடுத்த பின்னர் காதி 30 நாட்களுக்கான நல்லிணக்க செயற்பாட்டினை ஆரம்பித்தல் வேண்டும்.[35] நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போகுமிடத்து விவாகரத்தானது மூன்று மாதங்களின் இறுதியில் (இது இத்தாவுடைய காலம் என்றும் அறியப்படும்) முடிவாகும். அதேவேளை மனைவி கர்ப்பவதியாக காணப்படும் போது பிள்ளை பிறந்தவுடன் விவாகரத்து முற்றாகும்.[36]

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமானது தலாக் கோரும் கணவன் தனது மனைவி வாழும் பிரதேசத்திலுள்ள காதிக்கு அறிவித்தலை வழங்க தேவைப்படுத்துகின்றது. ஆனால் தலாக் சொல்லும் போது மனைவியின் பிரசன்னம் இருக்க வேண்டும் என்று தேவைப்படுத்தவில்லை. பல பெண்கள் காதி அறிவிக்கும் வரை அவர்களது கணவன்மார் அவர்களை விவாகரத்து செய்யவிருப்பதனை அறியாதவர்களாக இருந்த பல

33 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 60 (1) – காதியின் உத்தரவுக்கு எதிராக காதிகள் சபைக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

34 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- இரண்டாவது அட்டவணை

35 Kodikara, Chulani 1999. '*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women*'. Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML).

36 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு30

சந்தர்ப்பங்களை பெண்கள் குழுக்கள் அறிக்கையிட்டுள்ளனர். காதிகள் கட்டாயமாக செய்யப்பட வேண்டிய மத்தியஸ்தத்தினை எப்போதும் செய்வதில்லை. மட்டுமன்றி பல வழக்குகளில் காதிமார் இலஞ்சம் கொடுக்கப்பட்டு விவாகரத்தினை மிகவும் விரைவாக முடிக்கும் படி, அதுவும் சிலவேளைகளில் ஒரு நாளுக்குள் தீர்மானிக்கும் படியும் வேண்டப்படுகின்றனர்.

பலதாரமணத்தின் போது பல மனைவியரையும், குடும்பங்களையும் பராமரிப்பது பாரமாக வரும் சந்தர்ப்பங்களிலும் தலாக் கோரப்படுகின்றது. மனைவிமாரை, குடும்பத்தினை சரியாக பராமரிக்காத ஆண்களை தலாக் செய்யும் படி காதியே அறிவுறுத்திய எத்தனையோ வழக்குகளை தாம் எதிர்கொண்டதாக புத்தளத்தில் உள்ள பெண் தன்னார்வத்தொண்டர்கள் தெரிவித்தனர்.

தலாக் விவாகரத்தின் போது கணவன்மார் இத்தா காலத்தின் போது அல்லது கர்ப்பமாயுள்ள காலத்தில் மனைவிக்கு பராமரிப்பினை வழங்க தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். பிள்ளைப் பராமரிப்பு, கைக்கூலியினை திருப்பிச் செலுத்தல் அல்லது மஹரினை கையளித்தல் போன்ற எதனையும் தீர்மானிக்காமல் வெறுமனே தலாக் விவாகரத்தினை மட்டும் காதிகள் அனுமதித்து விடுகின்றமையானது பெண்கள் (மற்றும் சிறுமிகளை) பொருளாதார, சமூக ரீதியில் சிக்கலான, இலகுவாக பாதிப்புக்குள்ளாகப்படக் கூடிய நிலையில் விட்டுவிடுகின்றது.

### 4.2. பஸாஹ் (மனைவியால் கோரப்படும் விவாகரத்து)

சுன்னி பிரிவைச் சேர்ந்த மனைவியால் கணவனது சம்மதமின்றி கணவனது திருமணம் சார்ந்த தவறின் காரணமாக கோரப்படும் விவாகரத்து வகை பஸாஹ் ஆகும். பெரும்பாலான காதிகள் மற்றும் பெண்கள் தொடர்பாக பணிபுரியும் தன்னார்வத் தொண்டர்களினால் அறிக்கையிடப்பட்டதன் படி இது அதிகளவில் இடம்பெறும் விவாகரத்து வடிவம் ஆகும். கணவனின் இழிவான நடத்துகை, குரூரம், வீட்டு வன்முறை (இது வாய்மூல துஷ்பிரயோகத்தையும் உள்ளடக்கும்) பராமரிக்கத் தவறுதல், கைவிட்டு செல்லுதல் மற்றும் "முஸ்லிம் சட்டத்தின் கீழ் ஆளப்படும் மத்ஹப் பிரிவுகளின் கீழ் குறித்த விடயம் அந்த பிரிவின் கீழ் ''தவறாக'' இருக்கும்போது"[37] போன்றன பஸஹ் வழக்குக்கான அடிப்படைகளாக உள்ளன. திருமணத் தவறு அல்லாத மலட்டுத்தன்மை மற்றும் சித்த சுவாதீனமின்மை[38] போன்றவற்றுக்காகவும் பஸஹ் விவாகரத்தைப் பெற முடியும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டதன்படி, மத்தியஸ்தமானது பிழைக்குமாக இருந்தால் காதியானவர் இரண்டு பக்கத்தினையும், மூன்று முஸ்லிம் ஆண் யூரர்களையும் கொண்டு வழக்கைக் கேட்டல் வேண்டும்.[39] கணவன் தன் பிழையினை ஏற்றுக்கொள்ளாவிட்டால் மனைவியின் பக்கம் சாட்சிகள் (ஆகக்குறைந்தது இரண்டு) சாட்சியங்களைக் கொண்டு மனைவி தனது தரப்பை நிரூபித்தல் வேண்டும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பஸஹ் வழக்குகளில் குறித்த மத்ஹப் பிரிவைச் சேர்ந்த ஏற்பாடுகள் (எழுதப்படாதவையும்) பிரயோகிக்கப்பட முடியும். இதனால் குறிப்பிட்ட பிரிவு அல்லது மத்ஹப் மனைவியால் கோரப்படும் விவாகரத்துக்கான (பஸஹ்)

---

[37] முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 28

[38] Kodikara, Chulani 1999. '*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women*'. Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML).

[39] விதி 7 ன்படி காதி 3 ஆண் மதிப்பாளர்களை தனக்கு உதவியாக பஸாஹ் வழக்கின் போது கொண்டிருத்தல் வேண்டும். (Source: Kodikara, Chulani 1999. '*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women*'. Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML)

அனுமதியைக் கொண்டிருக்காதபோது கணவனின் எத்தகைய தவறு இருப்பினும் அப்பெண்களால் விவாகரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. இச்சந்தர்ப்பத்தில் கணவன் (தலாக்) விவாகரத்து செய்வது மட்டுமே அங்கீகரிக்கப்படும். இதன் விளைவாக எந்த சூழ்நிலையாக அல்லது சந்தர்ப்பமாக இருப்பினும் மனைவி விவாகரத்து செய்வதாயின் கணவனின் அனுமதியினைப் பெற வேண்டி இருக்கும். இதனால் விவாகரத்துக்கான ஏற்பாடுகள் கூட பிரிவுகள் அல்லது மத்ஹபுகள் அடிப்படையில் பெண்களுக்கு சமத்துவமற்றதாகவே காணப்படுகின்றன.

ஹனபி மத்ஹப்பின் கீழ் “பஸாஹ்” விவாகரத்திற்கு எவ்விதமான ஏற்பாடுகளுமில்லை என்பதனால் தன்னிடம் பஸாஹ் அடிப்படையில் வருகின்ற விவாகரத்து அனைத்தையும் ஷாபி முறைமையினை பின்பற்றுகின்ற காதி நீதிமன்றங்களுக்கு செல்லும் படி தான் வழிகாட்டுவதாக மேமன் சமூகத்தின் காதி தெரிவித்தார்.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** துஷ்பிரயோக, வன்முறையான திருமணத்துள் இருக்கும் பெண்கள் விவாகரத்தின் போது விசாரணையாளர்களின் முன் சான்றுகள், சாட்சிகள் மற்றும் வாக்குமூலம் அளிக்கும் போது மேலதிக முட்டுக்கட்டைகளை மற்றும் சவால்களை முன்நோக்குகின்றனர். மேலும் உணர்வு மற்றும் உளரீதியாக பாரிய துஷ்பிரயோகத்துக்குள்ளான பாதிப்பிலிருக்கும் பெண்கள் தமது விவாகரத்தின் போது சாட்சிகளை தயார்படுத்துவதில் அல்லது வழங்குவதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். மேலும் பராமரிப்பை செலுத்தாமையிலிருந்து பாரிய உடல் அல்லது பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றியதான பல்வேறு வகையான வழக்குகளை முன்வைக்கும் பெண்களும், சிறுமிகளும் தமது தரப்பை மதிப்பீடு செய்து தீர்ப்பினை வழங்க எதுவித தொழில்சார் பயிற்சிகளும் அற்ற முற்றிலும் ஆண்களை மட்டுமே கொண்ட ஒரு விசாரணை சபையிடம் முன்வைப்பதில் மேலதிகமான மனத்தாக்கங்களுக்கும், சிக்கல்களுக்கும் உள்ளாகின்றனர்.

பஸாஹ் வழக்குகளைப் பொறுத்தளவில் மிகவும் இறுக்கமான நடபடி பின்பற்றப்பட வேண்டியுள்ளதாக காதிகள் தெரிவித்தனர். தவறுமிடத்து விவாகரத்தானது செல்லபடியற்றது என்னுமளவு வெற்று வெறிதானதாகக் கூடும்(null and void). நடபடி தொடர்பான தவறுகள் (உதாரணமாக வழக்கு விசாரணை நடத்தல்) இருக்குமிடத்து கணவன் அதற்கெதிராக காதிகள் சபையில் மேன்முறையீடு செய்யலாம். இந்நடபடி தவறு நிரூபிக்கப்படின் பஸாஹ் விவாகரத்துக்கான உத்தரவு செல்லுபடியற்றதாகும். காதிகள் சபையின் ஒரு பிரதிநிதியின்படி, முன்னைய விவாகரத்து வழக்கு தீர்க்கப்படும் முன் ஒரு பெண் மறுதிருமணம் செய்து குழந்தைகளும் இருந்தால் அந்த திருமணம் வெறிதானது (செல்லுபடியற்றது) எனவும் அந்த பிள்ளைகள் நெறிமுறையற்றவர்கள் எனவும் கருதப்படும். மேலும் பஸாஹ் விவாகரத்தானது விண்ணப்பதாரர் அல்லது காதியின் மத்ஹப்பிலும் தங்கியுள்ளது.

பெண் செயற்பாட்டாளர்களின்படி, தலாக் விவாகரத்தினை பெறாமல் பஸாக் விவாகரத்து பெறும்படி மனைவிமாரை கணவன்மார் கட்டாயப்படுத்திய வழக்குகளும் காணப்படுகின்றன. புத்தளத்தில் தன்னார்வலர்களால் பகிரப்பட்ட வழக்கின்படி கணவன் அவரது மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற விரும்பினார். ஆனால் தான் தலாக் பெறும் போது கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ள மத்தாவினை (நஷ்டஈடு) கொடுக்க விரும்பவில்லை. இதன் காரணமாக கடுமையான வீட்டு வன்முறைகளை செய்து மனைவியை அடித்து பஸாஹ் விவாகரத்து பெற அவரை கட்டாயப்படுத்தினார். பஸாஹ் விவாகரத்தின் நிபந்தனைகளுக்கமைவாக அவள் நஷ்ட ஈடு பெற முடியவில்லை. அதே நேரம் கணவனுக்கெதிராகவும் எத்தகைய சட்ட விளைவுகளும் இடம்பெறவில்லை. பொது திருமண பதிவு கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒரு ஆண் தனது மனைவியை அவள் எந்தவொரு பொருளாதார நிலையில் இருந்தாலும் பராமரிக்க வேண்டிய கடப்பாடுடையவர். அவ்வாறே மனைவி போதுமானளவு வளமுள்ளவராக காணப்பட்டால் தனது

துணையை பராமரிக்க கடமையுள்ளவராகின்றார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் விவாகரத்து இடம்பெறும் வரை நிகழ வேண்டும். அதாவது விவாகரத்தின் ஓர் அங்கமாக நிரந்தரமான பராமரிப்பு தொடர்பாக கட்டளை ஒன்று ஆக்கப்படும் வரை இது தொடர வேண்டும்.[40]

**சம்பவ கற்கை:** ஷியா பிரிவில் உள்ள ஒரு பெண் அதே சமூகத்தை சேர்ந்த ஆணைத் திருமணம் செய்த முதல் இருமாதத்திலேயே உணர்வு ரீதியிலான துஷ்பிரயோகத்தினை அனுபவித்ததுடன் கணவனது கட்டுப்படுத்தும் நடத்தையையும், உடல் ரீதியிலான துஷ்பிரயோகத்தினையும் அனுபவித்தார். அந்த திருமணத்தில் தொடர்ந்து இருக்க முடியாமல் அவரது கணவரிடம் இருந்து பிரிந்து வாழ வேண்டியிருந்தது. நல்லிணக்க முயற்சிகள் இடம்பெற்ற வேளையிலும் அந்த பெண் தன் கணவனால் அனுபவித்த துஷ்பிரயோகங்களின் காரணமாக அந்த திருமண வாழ்வுக்குள் மீளச் செல்ல விரும்பவில்லை. ஆனால் அவருக்கு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பஸாஹ் விவாகரத்து பெறுவது கடினமாக இருந்தது. ஏனெனில் அந்த சட்டமானது மத்ஹப் மற்றும் பிரிவுகள் சார் சட்டத்தை அனுமதிப்பதனால் குறித்த ஷியா பெண்ணுக்கு விவாகரத்தைப் பெற கணவனின் சம்மதம் தேவையாக இருந்தது. இப்பெண் தனது குடும்பம், சமூகம், மதத்தலைவர்களிடம் இருந்து மிகுந்த ஆதரவினை பெற்றிருந்ததுடன் அவர்களால் கணவன் மீது விதிக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக, தனக்கு வழங்கப்பட்ட உரிமையைப் பயன்படுத்தி (எழுதப்படாதது) மூன்று வருடங்கள் இழுத்தடித்ததன் பின்னர் அக்கணவன் அப்பெண்ணுக்கு விவாகரத்தினை வழங்கினார்.

### 4.3 சுன்னி மத்ஹப்பின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள ஆனால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் இல்லாத விவாகரத்துகள்: முபாரத் மற்றும் குலா.

சுன்னி பிரிவின் சில மத்ஹப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முபாரத் விவாகரத்து என்பது பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையிலானதாகும். ஆனால் இது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டு உள்வாங்கப்படவில்லை. எவ்வாறெனினும் முபாரத் விவாகரத்தானது பிரிவு 98 ஆனது, 'எந்த ஒரு முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான விடயத்திலும் திறத்தவர்களின் பரஸ்பர உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை திறத்தவர்கள் சார்ந்துள்ள பிரிவின் படியான முஸ்லிம் சட்டத்திற்கமைய தீர்மானிக்கப்படும்' என்று குறிப்பிடுகிறது.

குலா என்பது ஒரு மனைவி திருமணத்தில் தான் மகிழ்ச்சியாக இல்லாது போனால் கணவனுக்கு இழப்பீட்டு தொகையை வழங்கி பெற்றுக்கொள்ளும் விவாகரத்து ஆகும். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 28(2) கீழ் குலா விவாகரத்துக்கு வழக்கிடலாம்.[41] ஆயின் அவள் இழப்பீட்டினை செலுத்துவதற்கு உடன்பட வேண்டும் என்பதுடன், கணவனது சம்மதமும் விவாகரத்துக்கு தேவைப்படுத்தப்படுகின்றதுடன், 'சமாதானமாகவும், அமைதியாகவும் திறத்தவர்களினால் ஒன்றாக வாழ முடியாது' என்பதனை நிரூபிக்க வேண்டும்.[42]

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** இந்த ஆய்வின் போது திருமணத்தவறு காரணமாக பஸாஹ் விவாகரத்தினை கோரும் பெண்களிடம், காதி முபாரத் விவாகரத்து செய்யும்படி கட்டாயப்படுத்துவதை அவதானிக்க முடிந்தது. இதற்கு கூறப்பட்ட காரணம் மனத்தாங்கல்களை அல்லது திறத்தவர்களிடையே பகைமையைக் குறைப்பதற்கு இது உதவும் என்பதாகும். காதி தெரிவித்த மற்றுமொரு காரணம் முபாரத் அடிப்படையிலான விவாகரத்துக்கு மேன்முறையீடு இல்லை என்பதாகும். பரஸ்பர உடன்பாட்டில் பிரிவதற்கான ஏற்பாடானது தந்தையினை தனது

---

40 Muttetuwagama, Ramani, 1997. *Parallel Systems of Personal Laws in Sri Lanka*. Muslim Women's Research and Action Forum (MWRAF)

41 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 28(2) – மனைவி விவாகரத்து வழக்கிடுகையில் தரத்தவரின் பிரிவின் படி அட்டவணை 3இன் படி செயற்படுத்தப்படும்.

42 Kodikara, Chulani 1999. '*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women*'. Muslim Women's Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML).

கடமைகளில் இருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடாக கருதப்பட்டு மனைவி தனக்கோ தனது பிள்ளைகளுக்கோ எந்தவிதமான பராமரிப்பினையும் பெற்றுக்கொள்ள முடியாத பல முபாரத் வழக்குகளும் காணப்படுகின்றன. எவ்வாறெனினும் தந்தை தனது பிள்ளைகளுக்குப் பராமரிப்பைச் செலுத்தாமல் விடுவதற்கான எத்தகைய விலக்களிப்பும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் இல்லை என்பதுடன் இது காதியால் மேற்கொள்ளப்படும் ஏதேச்சாதிகாரமான முடிவாகும்.

குலா விவாகரத்திற்கு கணவனது சம்மதம் தேவை என்பது மிகவும் பிரச்சினைக்குரியதாகும். வழக்குகளின் ஆய்வின் அடிப்படையில் சூளனி கொடிக்காரவினால் எழுதப்பட்ட "இலங்கையில் முஸ்லிம் குடும்பச் சட்டம்" என்ற நூல் குலா விவாகரத்தின் போது மஹர், இத்தா மற்றும் வேறு சொத்துக்களை இழப்பீடாக திருப்பி கொடுக்கும்படி உத்தரவிடப்படும் போது பெண்கள் எதிர்நோக்கும் மேலதிகமான சவால்களை எடுத்துக் காட்டுகின்றது.

**கோரிக்கை**: இஸ்லாமிய சட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட விவாகரத்து முறைகளை அனுமதிப்பதற்கும் மேலாக இத்தகைய வெவ்வேறு வகையான விவாகரத்துக்களினால் அவை எவ்வாறு பிரயோகிக்கப்படலாம், துஷ்பிரயோகிக்கப்படலாம், அவை வாழ்க்கைத் துணைகள், குடும்பங்கள் மீது செலுத்தும் தாக்கங்கள் பற்றிய சமூக விளைவுகள் பற்றியும் மதிப்பிடல் அத்தியாவசியமாகும். ஒரு தலைப்பட்சமான விவாகரத்து கணவனோ, மனைவியோ யார் செய்தாலும் அது துணைகளிலும், குடும்பங்களிலும் பாரிய விளைவை ஏற்படுத்துகின்றமையால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டதிலிருந்து இது நீக்கப்படல் வேண்டும். மேலும் பிரிவுகளதும், மத்ஹப்களதும் அடிப்படையில் வெவ்வேறு விதமான விவாகரத்துக்கு அனுமதி அளிப்பது பெண்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. இதனால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தமானது ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான காரணங்களைக் கொண்டதாக கணவன் மற்றும் மனைவிக்கான விவாகரத்துக்குரிய ஒருசீர்த்தன்மையைக் (uniformity) கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆண், பெண் என்ற பிரிவினை இன்றி அனைத்து முஸ்லிம்களுக்கும் வினைத்திறனுடன் செயற்படக்கூடியதான நடபடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 5. பலதார திருமணம்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் முஸ்லிம் ஆணுக்கு சமகாலத்தில் நான்கு மனைவி வரை சட்ட ரீதியாக திருமணம் செய்ய அனுமதிக்கின்றது. நான்கை விட கூடுதலாக செய்யப்படும் திருமணம் (சட்ட அங்கீகாரம் அற்றதுடன் தற்காலிகமாக வலிதற்றது) சட்டமுரண் என்பதன்றி ஒழுங்கீனமற்றதாகக் கருதப்படும். மலேசியா போன்ற நாடுகளில் கணவன்மார் பலதார மணம் செய்ய முடிவெடுத்தால் ஏற்கனவே இருக்கின்ற மனைவியரது சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும், கணவன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரையும், குடும்பங்களையும் பராமரிக்கவும், செலவளிக்கவும் தகைமையுடையவரா இல்லையா என்று காதி நீதிபதி விசாரித்துத் அதன் அடிப்படையில் பலதார மணத்தை செய்ய அனுமதிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தை வழங்குவார். ஆனால் இந்த தேவைப்பாடுகள் எதுவும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் இல்லை.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 24 ஆனது கணவன் தான் பலதாரமணம் செய்வதற்கான 30 நாட்களைக் கொண்ட அறிவித்தலை தனது மனைவி அல்லது மனைவிகளும், தான் மணம் செய்யவிருக்கும் எதிர்கால மனைவி வசிக்கும் இடத்திலுள்ள உள்ளூர் காதிக்கு வழங்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

காதி இந்த அறிவித்தலை அந்த பிரதேசத்திலுள்ள பிரதான பள்ளிவாசலில் (ஏனைய பகிரங்க இடங்களிலும்) காட்சிப்படுத்துவதற்குரிய பொறுப்பினைக் கொண்டுள்ளார். முஸ்லிம் விவாக மற்றும்

விவாகரத்துச் சட்டமானது திருமணத்தை கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும் என்கிறது.[43] எவ்வாறெனினும் திருமணப்பதிவுப் பத்திரத்தில் நடந்து கொண்டிருக்கும் அல்லது ஏற்கனவே நடந்திருக்கின்ற ஒருவரது திருமணங்கள் தொடர்பாக குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் இல்லை. திருமணப் பதிவு இடம்பெறும் போது மணமகன் தனது முன்னைய திருமணங்களை வெளிப்படுத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு வெளிப்படுத்தாமல் விட்டால் திருமணம் செல்லுபடியாகும் தன்மையில் எந்தவிதமான பாதிப்பினையும் ஏற்படுத்தாமல் ஆகக்கூடியது தண்டப்பணம் ரூபாய்.100. (நூறு) அல்லது 06 மாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

அறிவித்தலை வழங்கும் காதிக்கும், திருமணத்தை பதிவு செய்யும் பதிவாளருக்குமிடையே மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஒருங்கிணைப்பே காணப்படுகின்றது மட்டுமன்றி அநேக சந்தர்ப்பங்களில் பதிவாளர் காதியை விசாரிப்பதே இல்லை.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் காணப்படும் ஏற்பாடுகள் ஏற்கனவே இருக்கின்ற மனைவி, பிள்ளைகளது உள, சமூக, பொருளாதாரத் தாக்கங்கள் பற்றி எந்தவொரு விதமான கரிசனையும் இன்றி பலதாரமணம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையினை முற்று முழுதாக கணவனிடமே விட்டிருக்கின்றது. மட்டுப்படுத்தப்படாத ‘உரிமை’ என்னும் போது பல திருமணங்களை பராமரிக்க முடியதாத ஆண்கள் கூட இவ்வாறு திருமணங்களைச் செய்து கொள்வதாகும். இது பல பெண்களையும், சிறுவர்களையும் இக்கட்டான சூழலுக்குள் தள்ளி விடுகின்றது. அநேக முஸ்லிம் பெண்கள் தாம் பலதாரமணத்தில் இருக்கிறோம் என்பதே தெரியாமல் இருந்திருக்கின்றனர் என்பதுடன் இந்த விடயத்தில் அவர்களால் சுயமாக எதனையும் செய்ய முடியாதவர்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளின் கருத்துப்படி, ஒரு கணவனது திருமணம் தொடர்பான அறிவித்தலை பகிரங்கமாக பொது இடத்தில் காட்சிப்படுத்துவதன் நோக்கம் ‘பலதாரமணத்தில் நுழையும் கணவன் மீது சமூக அழுத்தத்தினை பிரயோகிக்கவாகும்.’[44] எனினும் புத்தளத்தில் உள்ள பெண்கள் தன்னார்வலர்களின்படி இத்தகைய அறிவித்தல்கள் சரியான வகையில் ஒட்டப்படுவதில்லை எனவும், சிலவேளைகளில் காதிமார் அக்கணவரையே அறிவித்தலை ஒட்டும்படி கேட்கும் போது அவர்கள் அதனை செய்யாமல் விடுகின்றனர் என்பது மட்டுமன்றி சிலவேளைகளில் பள்ளிவாசல்கள் இவ்வறிவித்தல்களை தமது வளாகத்தினுள் ஒட்டுவதற்கு அனுமதிப்பதில்லை.

இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் பொதுவாக முஸ்லிம் பெண்கள் குறிப்பிட்ட நேரத்தில் அல்லது காலத்தில் மட்டும் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பள்ளிவாசலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதாகும்.

பெண்கள், தம் கணவர்கள் இன்னொரு திருமணம் செய்ய இருக்கும் முடிவைப் பற்றி அக்கணவர்களுடன் பேசும் சந்தர்ப்பங்களில் மிக மோசமான நடத்துகைக்கும், வீட்டு வன்முறைக்கும், உளரீதியான பாதிப்புக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பெண்கள் கட்டாயப்படுத்தப்பட்டும், பயமுறுத்தப்பட்டும் பலதார திருமணத்துக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதுமட்டுமன்றி கணவன் வேறொரு திருமணம் செய்ய முற்படும் போது அநேக சந்தர்ப்பங்களில் காதிமாரும், குடும்பங்களும் பெண்களையே ஏசும் நிலை

[43] முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 16, 17

[44] Marsoof, Saleem, 2011. *‘The Quazi Court System in Sri Lanka and Its Impact on Muslim Women’,* Muslim Women’s Research and Action Forum (MWRAF)/Women Living Under Muslim Law (WLUML)

காணப்படுகின்றது. இந்நிலைமையில் பலதார திருமணத்தின் கீழான மனைவிமார் மற்றும் குழந்தைகளுக்கு பொருளாதார ரீதியிலும் தீவிரமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பலதார மணத்தினை செய்து கொள்ளும் கணவர்கள் அத்திருமணங்களைக் கொண்டு நடாத்துவதில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியினால் ஏலவே இருக்கின்ற மனைவியரை விவாகரத்து செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. இஸ்லாமிய மூலாதார நூல்களில் குறிப்பாக அல்குர்ஆனிலேயே மனைவியரை சமமாக, நீதியாக நடத்த வேண்டும் என்று பலதாரமணத்துக்கான நிபந்தனைகள் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளபோதும் இவை பின்பற்றப்படுவதில்லை.

புதிய மணமகளிடம் இருந்து கைக்கூலியினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஆண்கள் பலதார மணத்தினைச் செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வழக்கில் கணவன் மனைவியினது சொத்தினை தனது பெயரில் மாற்றிப் பதிவு செய்ததன் பின்னர் இரண்டாவது திருமணம் செய்து விட்டு தனது முதல் மனைவியை அவருக்குச் சொந்தமான வீட்டிலிருந்தே வெளியேற்றி விட்டார். இன்னுமொரு வழக்கில் கணவன் முதல் மனைவியை வேலைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு மனைவி அனுப்பிய பணத்தில் வீட்டைக் கட்டிக் கொண்டு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் தனது முதல் மனைவியின் உழைப்பில் குடும்பம் நடத்தி வந்திருக்கிறார். இன்னும் சில சந்தர்ப்பங்களில், இலங்கையில் முஸ்லிம் கணவன்மார் பல மாவட்டங்களிலும், சிலபோது ஒரேமாதிரியான முஸ்லிம் குடும்பச் சட்டத்தைக் கொண்ட மாலைதீவு போன்ற அயல் நாடுகளிலும் மனைவிமாரையும், குடும்பங்களையும் கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை பலதார மணத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் மனைவிமார் தெளிவாக, கட்டாயப்படுத்தப்படாத, விபரங்களை அறிந்த பின்னர்தான் அத்திருமணத்திற்கான தமது தேர்வினை செய்கின்றார்கள் என்பது மிகவும் கேள்விக்குரிய விடயமாகும். முஸ்லிம் ஆண்கள் தமது நம்பிக்கையினதும், பால்நிலையினதும் விளைவாக தமக்குரிய “தெய்வீக உரிமையாக” பலதாரமணத்தைக் கருதுகின்றனர். அது மட்டுமன்றி பொதுத்திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆளப்படும் ஏனைய நம்பிக்கைகளைக் கொண்ட ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைச் செய்வதானது குற்றமாகக் கருதப்படும் அதேவேளை முஸ்லிம் ஆண்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ள ‘சிறப்புரிமையாகவும்’ இது பார்க்கப்படுகின்றது. இந்த கண்ணோட்டமானது பலதாரமணத்தில் இருக்க விரும்பாத பெண்கள் உட்பட பலதாரமணத்தை எதிர்க்கும் எவருக்கும், பாரிய சவாலை உண்டுபண்ணுகின்றது. பலதார மணத்தினை ஆதரிப்பவர்களுக்கு மத்தியில் நிலவும் பிரதான நியாயப்படுத்தல் என்னவெனில், இது ஒரு முஸ்லிம் ஆணுக்குரிய ‘தெய்வீக உரிமை’ என்பதாகும்.

ஏனைய சமூக ரீதியிலான நியாயப்படுத்தல் என்னவெனில் இது ஒரு ஏற்பாடு, அதாவது திருமணம் செய்யாத, வயது வந்த பெண்கள், குறைந்த வருமானம் உடைய சூழலில் உள்ள விவாகரத்தான, கணவனை இழந்த அல்லது நடுத்தர வயதுடைய பெண்கள் மற்றும் திருமணமாகாத, வயது கூடிய பெண்களுக்கு பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பினை வழங்கும் என்பது சமூக ரீதியிலான ஏனைய நியாயப்படுத்தல் ஆகும். ஆனால் நடைமுறையில் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் அவர்களது கணவன்மாரினால் கைவிடப்படல் மற்றும் பராமரிக்கப்படாமல் விடப்படுதலுக்கும், அதிகளவான விவாகரத்திற்கும் வழிவகுக்கும் பிரதானமான காரணியாக பலதாரமணம் காணப்படுகின்றது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட வெவ்வேறு நாடுகள் பலதாரமணம் என்பதனை பலவிதமான அணுகியுள்ளன. மலேசியா போன்ற நாடுகள் பலதாரமணத்திற்கு கணவனின் பொருளாதார நிலைமையை அப்பிரதேசத்தில் வசிக்கும் காதிநீதிபதி விசாரணை செய்தல், ஏற்கனவே இருக்கின்ற மனைவியரின் சம்மதம், அத்தகைய சம்மதம் வழங்குகையில் கணவனுடன்

நிபந்தனையுடனான ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம், போன்ற முன்கூட்டிய நிபந்தனைகளைக் கொண்டு பலதார மணத்திற்கான தேவைப்பாடுகளை இறுக்கமாக்கியுள்ளன. ஏனைய நாடுகளைப் பொறுத்தளவில், துருக்கி 1926ல் பலதாரமணத்தினை குற்றமாக சட்டமாக்கியதுடன், தூனீசியா 1956ல் பலதாரமணத்தை பழமையான பழக்கம் எனவும், நவீன காலத்தில் சாத்தியமற்றது அல்லது பொருத்தமற்றது எனக் கூறி தடை செய்துள்ளது.

**கோரிக்கை:** ஆண்களும், பெண்களும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படவில்லை என்பதற்கு பலதாரணம் ஒரு தெளிவான உதாரணம். இஸ்லாமியச் சட்டத்தில் பலதாரமணம் அனுமதிக்கப்பட்டுள்ள போதும் இது அல்குர்ஆனிலே கூறப்பட்ட வகையில் நிபந்தனைக்குரியது. ஏற்றுக்கொள்வதோ இல்லையோ பலதாரமணம் புரியும் ஆண்கள் எடுத்துக் கொள்ளும் சுதந்திரத்தின் அளவானது உண்மையிலேயே இஸ்லாமிய அடிப்படையில் அமைந்ததுதானா என்பது பெரிதும் கேள்விக்குரியது. உண்மையிலேயே பலதாரமணம் பெண்களதும், குடும்பங்களினதும் நலனுக்கு நன்மை பயக்கின்றதா, இல்லையா என்பதையும், இன்றைய நிலையில் இது பொருத்தமுடையதும், ஏற்புடையதும்தானா என்பதைப்பற்றியும் இலங்கை முஸ்லிம்கள் தீவிரமாகப் பிரதிபலிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் பலதாரமணம் என்ற ஏற்பாடு காணப்பட வேண்டுமாயின் திருமணத்தின் முன்னரேயே திருமணத் தம்பதிகள் இஸ்லாத்தில் உள்ளது போன்று திருமண நிபந்தனைகளைக் கொண்ட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான ஏற்பாட்டை சட்டத்திருத்தம் உள்ளடக்க வேண்டும். இது பலதாரமணத்தை தெரிவு செய்வதற்கான அல்லது விடுவதற்கான நிபந்தனையை அனுமதித்தல் வேண்டும். ஒரு பெண் தனத திருமணத்தின் முன்னரேயே தனது கணவன் பலதார மணத்தினை செய்ய முடியுமா இல்லையா என்பது தொடர்பாக தீர்மானிக்கலாம் என பெண்ணுக்கு தெளிவாக்கப்படல் வேண்டும். பலதாரமணத்தை செய்ய முன்னர் ஏலவேயுள்ள மனைவி அல்லது மனைவிகள் மற்றும் வரவிருக்கின்ற மனைவி ஆகியோரின் சம்மதத்தை கட்டாயம் பெற வேண்டும். மேலதிகமாக மனைவியரை சமமாக (குறிப்பாக பொருளாதார ரீதியாக) நடத்தக்கூடிய தகைமையுடையவரா என்பது பற்றி காதி விசாரித்த பின்னரே அனுமதியளித்தல் வேண்டும். திருமணப்பதிவுப் பத்திரத்தில் நடைமுறையில் வலிதாக உள்ள சகல திருமணங்கள் பற்றிய விபரங்களும் குறிப்பிடப்பட வேண்டும்.

## 6. பராமரிப்பு

### 6.1. பிரிந்திருக்கும் காலத்துக்கான பராமரிப்பு

**மனைவியைப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகள்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 47ன் கீழ், கணவன் தன் கடமையை செய்யத் தவறும் (முடியாத அல்லது விருப்பமில்லாத) பட்சத்தில், மனைவி பராமரிப்பினைக் கோரி காதிக்கு விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய முடியும். பராமரிப்பிற்கு உரித்தாவதற்கு ஒரு பெண் தன் கணவனிடம் இருந்து "நியாயாமான காரணத்தினால்" பிரிந்திருக்க வேண்டும்.[45] காதிகள் மற்றும் காதிகள் சபை பிரதிநிதியின் கூற்றுப்படி, பராமரிப்பைச் செலுத்தாமல் இருப்பதே அதிகளவான மேன்முறையீடுகளின் அடிப்படைக் காரணியாக இருக்கின்றது.

**பிள்ளைப் பராமரிப்பிற்கான ஏற்பாடுகள்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் ஒரு ஆண் தனது குழந்தைகளைப் பராமரிக்கக் கடப்பாடுடையவர். (திருமணத்தின் மூலம் அல்லது திருமண உறவின்றி பிறந்தாலும் கூட). இச்சட்டத்தின் பிரிவு 35 இன்படி, ஒரு பிள்ளை தனது தந்தையுடன் வாழும் அல்லது தந்தையால் ஆதரவளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்பிள்ளை அல்லது அப்பிள்ளையின் சார்பாக எவரும் பராமரிப்பினைக் கோருவதற்கு உரித்துடையவராக மாட்டார். இதேவேளை பொது திருமணப்பதிவுகள் கட்டளைச்சட்டம் தந்தையானவர் பிள்ளைக்கு 21 வயதாக மட்டும் குழந்தைக்குப் பொறுப்புடையவர் என்று குறிப்பிட்டிருந்த போதும் முஸ்லிம்

[45] Kodikara, Chulani, 2011. "Muslim Family Law in Sri Lanka: Theory,Practice, and Issues ofConcern to women". Muslim Women's Research and Action Forum (MWRAF), Sri Lanka

விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் அது தொடர்பான வயதெல்லை எதனையும் குறிப்பிடவில்லை.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச்சட்டத்தின் பராமரிப்பு தொடர்பான நிபந்தனைகள் பிரச்சினைக்குரிய ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக மனைவி கணவனுடன் வாழ்ந்த/வாழ்ந்து வருகின்ற காலத்தில் அவர் பராமரிக்கப்படாவிட்டாலும் அக்காலத்தில் பராமரிப்பைக் கோரி வழக்கிட முடியாது. இது கணவனுடன் இருக்கும் காலத்தில் கணவன் மனைவியை ஒழுங்கான முறையில் கவனிப்பார் என்ற யூகத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது. இதன் விளைவாக, பொது திருமண பதிவுகள் கட்டளைச்சட்டம் போன்று அல்லாமல் இச்சட்டத்தின் கீழ், கணவனுடன் வாழும் காலகட்டத்தில் எந்தவிதமான பராமரிப்பையும் பெறாத பெண்கள் பராமரிப்பு வழக்கினை தாக்கல் செய்ய முடியாது. இரண்டாவதாக, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் நடபடியின்படி, மனைவிகள் தமக்கு பராமரிப்பு வழங்கப்படாத காலத்திலிருந்தன்றி தாம் வழக்கிட்ட நாளிலிருந்துதான் பராமரிப்பைக் கோர முடியும் என்பதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் சிறுவர்களது பராமரிப்பு தொடர்பான ஏற்பாடுகளுக்கும் பொருந்தும். அதாவது குழந்தையானது தந்தையுடன் வாழ்ந்து அவரால் சரியாக பராமரிக்கப்படாமல் விடப்படும் போது கூட குழந்தைகளாலும் அப்பராமரிப்பினை பெற வழக்கிட முடியாது.

பாதிக்கப்பட்ட பெண்களுடன் மிக நெருக்கமாக வேலை செய்யும் பெண்கள் உரிமைகளுக்கான நிறுவனங்களால் அவதானிக்கப்பட்ட விடயம், காதிமார் பராமரிப்புத் தொகையை மிகவும் ஏதேச்சதிகாரமான முறையில் தீர்மானிக்கின்றனர் என்பதாகும். அதிகமான சந்தர்ப்பங்களில் கொஞ்சம்கூட பராமரிப்புக்குப் போதாத தொகையினையே செலுத்தும்படி கட்டளையிடுவதுடன், மனைவியரினால் அத்தொகையை கூட்டித்தரும்படி செய்யும் விண்ணப்பத்தை அலட்சியப்படுத்துவதுடன், கணவன் குறித்த தொகையை செலுத்த மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதனைக் இன்னும் குறைத்துச் செலுத்தும்படியும் உத்தரவிடப்படுகின்றது. பொது திருமண பதிவுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ், கணவனினது வருமானத்தினை அடிப்படையாக கொண்டு மாதாந்த பராமரிப்பு தொடர்பான தொகையினை செலுத்தக்கூடிய தொகையினை நீதவான்களினால் தீர்மானிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் காதிகள் இந்த முறையினை பின்பற்றுவது இல்லை.

இதேவேளை காதிகள் பராமரிப்புத் தொகையினை கணவனிடம் இருந்து பெற்ற பின்னர் அதனை உரிய பெண்ணிடம் கையளிக்காமல் நிறுத்தி வைப்பதையும், சில சந்தர்ப்பங்களில் அப்பணத்தினைத் தனது சொந்த செலவுக்காக வைத்துக்கொண்டு அப்பெண்ணை வேறொரு திகதியில் வந்து பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிடுவதனையும் கூட சில வழக்குகளில் அவதானிக்க முடிந்தது.[46] நீதிச் சேவை ஆணைக்குழு போன்ற தரப்பினரால் காதிநீதிமன்றங்களில் பணம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பாக கண்காணிப்பதற்கு இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படாமையை இது சுட்டிக் காட்டுவதுடன் பொது நீதிமன்றங்களில் பின்பற்றப்படும் முறைகளில் இருந்து காதிநீதிமன்றில் எவ்வாறு முற்றிலும் வேறுபட்டு செயற்படுத்தப்படுகின்றது என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது.

**அமுலாக்கல் கட்டளைகள்:** பராமரிப்புத் தொகையினை கணவன் செலுத்தத் தவறினால், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 66, காதிகள் அமுலாக்கல் கட்டளையினை

---

[46] Case 13 - Gul, Begum Safana, 2014. *'Is Equal Justice Possible',* Islamic Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka

நீதவான் நீதிமன்றிடமிருந்து காதிகள் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்கின்றது. எவ்வாறெனினும் கணவன் கட்டாயம் பராமரிப்பை வழங்க வேண்டும் என்பதையோ, அவ்வாறு செலுத்தாது விட்டால் அமுலாக்கல் கட்டளைகளைப் பெறலாம் என்பதையே அறியாமல் கணவன் தன்னால் பராமரிப்பைச் செலுத்த வசதியில்லை என்று பொய்க் காரணம் சொன்னதை ஏற்றுக் கொண்ட அல்லது மிக சொற்பமான தொகையைத் தீர்த்த காதிகள் இருந்த வழக்குகள் கூட காணப்படுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்காய் பெண்களின் நிறுவனங்களே அமுலாக்கல் கட்டளையினை காதி பெற வேண்டும் என்று நிர்ப்பந்திப்பனவாய் உள்ளன.

அமுலாக்கல் கட்டளைகள் எப்படியோ கணவன் வசிக்கும் இடத்தில் உள்ள நீதவான் நீதிமன்றில் தான் பெறப்படுகின்றது. இது பெண்கள் மீது மேலதிக போக்குவரத்து சுமையினையும் ஏனைய சிரமங்களையும் சுமத்துகின்றது. நீதிமன்றங்கள் வேறு மாவட்டங்களில் இருக்கின்ற சந்தர்ப்பங்களில், சிறிய தொகையான ரூபாய் 3000 – 5000 வரையான பராமரிப்பினைக் பெற்றுக் கொள்ள பெண்கள் மிக நீண்ட தூரம் நியாயமான அளவு நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்து பயணம் செய்ய வேண்டியுள்ளது.பொதுவாக பெண்கள் அவர்களுக்கு உரிமையான பராமரிப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்கொள்ளும் இத்தகைய நடபடியினால் பெரிதும் விரக்தியடைந்துள்ளனர்.

**சம்பவக் கற்கை:** கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த முறையே 3 மற்றும் 11 மாதங்கள் வயதினை கொண்ட இரண்டு குழந்தைகளை கொண்ட திருமணமான இளம் பெண்ணொருவர் தனது திருமணத்தின் மூலமாக பாரதூரமான பிரச்சனைகளை எதிர்நோக்கினார். இரண்டாவது திருமணத்தை செய்த அவரது கணவர் இவருக்கோ அல்லது அவரது பிள்ளைகளுக்கோ எந்தவிதமான பராமரிப்புக்களையோ அல்லது பணரீதியிலான உதவியினையோ வழங்கவில்லை. இந்தப்பெண் உள்ளூரில் இருந்த காதி நீதிமன்றத்துக்குச் சென்று பராமரிப்பு வழக்கொன்றினை தொடுத்த போதிலும் அவரது கணவன் இவருக்கு பராமரிப்பினை செலுத்துவதற்கு மறுத்து விட்டார். இதேவேளை இந்தப்பெண் காதியிடம் தனது கணவர் தனது குடும்பத்துக்கு பராமரிப்பினை செலுத்தச் செய்வதற்கு வேறு ஏதாவது வழிவகைகள் இல்லையா என வினவியபோது, காதி அப்பெண்ணிடம், “வீட்டுக்குச் சென்று உனது குழந்தைகளின் கழுத்துக்களை நெரித்துக் கொல். ஆனால் பராமரிப்பு கேட்டு இங்கு இங்கு வராதே” எனப் பதிலளித்துள்ளார். இதன் பின்னர் இந்தப்பெண் இது தொடர்பாக சமூக மட்டத்தில் காணப்படும் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களில் அக்கறை காட்டுபவராக காணப்படும் பிரதேச செயலாளரிடம் இது தொடர்பாக முறைப்பாட்டினைச் செய்தார். பிரதேச செயலாளர் இந்தப் பெண்ணின் விடயத்தை கருத்தில் எடுக்கும்படி அறிவுறுத்தல் ஒன்றினை காதிக்கு வழங்கினார். ஆனாலும் காதி இந்த குறிப்பின் மூலம் மேலும் எரிச்சல் அடைந்து இந்தப் பெண்ணினை மிக மோசமாக ஏசியதுடன் உனது கணவரிடம் இருந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் பராமரிப்பினை உனக்குப் பெற்றுத்தர மாட்டேன் என்றும் கடுமையாகக் ஏசி அப்பெண்ணைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

## 6.2. விவாகரத்தின் போதும் அதன் பின்னருமான பராமரிப்பு

### 6.2.1. ‘இத்தா’ காலத்துக்கான பராமரிப்பு

இத்தா காலம் என்பது விவாகரத்தின் பின்னர் அல்லது கணவர் இறந்த பின்னர் பொதுவாக மூன்று மாதவிடாய் வட்டம் முடிவடையும் வரை அல்லது கர்ப்பிணியாக இருக்கும் வேளை அவரது குழந்தை கிடைக்கும் வரை காத்திருக்கும் காலத்தினைக் குறிக்கின்றது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரகாரம், இத்தாக் காலத்துக்கும், மகப்பேற்றுக்காலம் வரைக்குமான பராமரிப்பினைப் பெற மனைவிக்கு உரித்துண்டு.[47]

---

47 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்- பிரிவு 47(1)(d)

### 6.2.2. மத்தா (ஜீவனாம்சம்)

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் மனைவிக்கு மூன்று மாதங்களுக்கான இத்தா பராமரிப்பையும், மகப்பேற்றுக்காலத்துக்கான செலவுகளை மட்டுமே பெறுவதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சில காதிகள் தலாக் விவாகரத்தின்போது, ஏனைய இஸ்லாமிய நாடுகளில் காணப்படுவது போல் ஒரு தொகைப் பணத்தினை மொத்தமாக மத்தா எனும் நட்டஈடாகக் கணவனைக் கொடுக்கும்படி உத்தரவிடுகின்றனர். எவ்வாறாயினும் இதற்கான ஏற்பாடுகள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் இல்லை என்பதும் இது முற்றிலும் காதிகளின் எதேச்சதிகாரத்திலும், அவர்களின் தற்றுணிபிலுமே(discretion) உத்தரவிடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரச்சினைகளும், விளைவுகளும்:**

காதிகளின் கட்டளையினால் பணரீதியலான இழப்பீடுகள் மத்தா எனும் நட்டஈடாக பெண்களுக்கு அதுவும் குறிப்பாக தலாக் விவாகரத்தின் போது வழங்கப்பட்ட பல வழக்குகள் காணப்படுகின்ற போதிலும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் மத்தாவுக்கென ஏற்பாடுகள் இன்மையால் தனிப்பட்ட காதிகளின் ஏதேச்சதிகாரத்திலும், தற்றுணிபிலுமே பெண்கள் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவ்வாறு ஏற்பாடில்லாத காரணத்தினால் காதியின் தற்றுணிவில் வழங்கப்பட்ட மத்தாவுக்கான உத்தரவொன்றினை எதிர்த்து ஒரு பெண்ணின் முன்னாள் கணவன் வழக்கிட்டு தற்போது அவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.[48]

பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விவாகரத்து அல்லது பிரிவினை ஏற்படும் போது பெண்ணொருவர் நீதிமன்றின் தீர்ப்புப்படி மாதாந்த அல்லது வருடாந்த அல்லது மொத்தமான செலுத்துகையாக பணரீதியிலான இழப்பீடு அல்லது ஜீவனாம்சத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றார்.[49] பொதுச் சட்டத்தின் கீழ் துணைகளுக்குக் காணப்படும் இவ்வாறான பாதுகாப்பும், பொருளாதார ரீதியிலான ஆதரவும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் இல்லை.

தலாக் விவாகரத்துக்கள் இடம்பெற்ற பல சந்தர்ப்பங்களில் பெண்கள் தம்மை தம்முடைய கணவர்கள் விவாகரத்து செய்ய எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காதியின் அறிவித்தலின் ஊடாக அல்லது தலாக்கினை சொல்லும் போதுதான் அறிந்து கொண்டிருக்கிறார்கள். இது முற்றாக ஒரு பெண் தன்னை விவாகரத்துக்காக தயார்ப்படுத்தாத இக்கட்டான நிலைக்குள் தள்ளுகின்றது. அதுமட்டுமன்றி காதியின் கட்டளையை மீறி இத்தா பராமரிப்பை செலுத்தாத ஏராளமான வழக்குகள் காணப்படுகின்றன.[50]

இளவயது திருமணம், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பில் முஸ்லிம் பெண்களுக்கு இருக்கும் மட்டுப்பாடுகள் பொருளாதாரத்துக்காக தொடர்ச்சியாக பெண்களை அவர்களது கணவர்களிலேயே தங்கி வாழும் நிலைக்கு பங்களிப்புச் செய்கின்றன. இதன் விளைவாக விவாகரத்து செய்யப்பட்டவுடன் இப்பெண்கள் மிகவும் நலிவடைந்த ஒரு சூழலில் விடப்படுகின்றனர். இது மூன்று மாதம் (அல்லது அவர் கர்ப்பிணியாக இருக்கும் வரை) இத்தா இருக்கும் பெண்களைப் பொறுத்தளவில் மிகவும் உண்மையான விடயமாகும். பொதுவாக இத்தா பராமரிப்பானது மிகவும் குறைந்த தொகையாகவே தீர்மானிக்கப்படுகின்றது. இத்தா காலமானது பெண்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியே செல்லாமலும், தமது நெருங்கிய

---

48 பாத்திமா மின்னாஹ் எதிர் துவான் முத்தலிப் SC SPI LA 174/13

49 குடியியல் நடபடிக் கோவை பிரிவு 615: (1)"*The court may, if it thinks fit, upon pronouncing a decree of divorce or separation, order for the benefit of either spouse or of the children of the marriage or of both, that the other spouse shall do any one or more of the following:- (a) make such conveyance or settlement as the court thinks reasonable of such property or any part thereof as he may be entitled to ; (b) pay a gross sum of money; (c) pay annually or monthly such sums of money as the court thinks reasonable; (d) secure the payment of such sums of money as may be ordered under paragraph (b) or paragraph (c) by the hypothecation of immovable property or by the execution of a bond with or without sureties, or by the purchase of a policy of annuity in an insurance company or other institution approved by court. (2) The court may at any stage discharge, modify, temporarily suspend and revive or enhance an order made under subsection (l)*"

50 Cases 2, 16, 17, 20: Gul, Begam Safana, 2014. 'Is Equal Justice Possible', Islamic Women's Association for Research and Empowerment (IWARE), Batticaloa, Sri Lanka

குடும்பத்தவர்களை தவிர ஏனைய நபர்களுடனான தொடர்பினை தவிர்த்தும் இருப்பதனை தேவைப்படுத்துகின்றது. மூன்று மாதத்தின் பின்னர் எதுவித பராமரிப்பும் இன்றி விடப்படும் பெண்கள் தமது பொருளாதார நிலை தொடர்பாக காதியிடம் கோரும் போது, பொதுவாக கூறப்படும் விடயம் ஒரு ஆண் இத்தா பராமரிப்பு மட்டும் செலுத்தினால் போதுமானது என்பதுடன் பெண்ணுக்கு விவாகரத்தான பின்னர் அவர் வேறொரு கணவரை மணமுடித்து தனது பராமரிப்பைத் தேடிக்கொள்ள முடியும் என்பதாகும்.

விவாகரத்தின் போது பெண் கர்ப்பிணியாக இருந்தால், குழந்தை பிறந்தவுடனே மனைவிக்கான பராமரிப்பு உடனடியாக நிறுத்தப்படும். உண்மையில் குழந்தை பிறந்தவுடன் வேலைக்குச் செல்ல முடியாமல் குழந்தையுடன் இருக்க வேண்டிய இத்தருணத்தில்தான் பொருளாதார உதவி அவசியமாகின்றது. குழந்தை பிறந்ததும் அல்லது விவாகரத்தானவுடன் வாழ்வாதாரத்திற்குரிய சந்தர்ப்பங்களைத் தேடுவதற்கு பெண்களுக்கு மிகவும் குறைந்தளவான சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன.

**கோரிக்கை:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் போது ஆகக் குறைந்தது சகல விதமான பராமரிப்புக்களுக்குமான இறுக்கமான நிபந்தனைகளையும், அவை எவ்வாறு கணிப்பிடப்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களையும் முன்மொழிதல் வேண்டும். இதன் ஊடாக காதிகளின் எதேச்சதிகாரமான தீர்ப்புகளுக்கு இடமில்லாமலாக்கப்படல் வேண்டும். பராமரிப்பானது வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட காலத்திலிருந்தன்றி பராமரிப்பு நிறுத்தப்பட்ட காலத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டை கொண்டு வர வேண்டும். இது பராமரிப்பு தொகையினை நியாயமாகக் கணிப்பிட வழிவிடுவதுடன் காதிகளது பக்கச்சார்பான, எதேச்சதிகாரமான உத்தரவை மட்டுப்படுத்த உதவும். மேலும் கணவன் அல்லது பிள்ளைகளின் தந்தை வெளிநாட்டில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பாராமரிப்பினை முறையாகப் பெற்றுக் கொள்ள வினைத்திறனான முறைமையினை உள்வாங்க வேண்டும்.

## 7. காதிமார்

முஸ்லிம்களின் சனத்தொகை அதிக அளவில் காணப்படும் பிரதேசங்களில் அதிகமான நீதிமன்றங்களைக் கொண்டதாக இலங்கையில் 65 காதி நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 12 "நன்னடத்தையும், நல்ல நிலைமையையும், பொருத்தமான அடைவுகளையும் கொண்ட ஒரு முஸ்லிம் ஆணை" குறித்த இடத்துக்குரிய காதியாக நீதிச் சேவை ஆணைக்குழு நியமிக்க அதிகாரமளிக்கின்றது. அண்மைக்கால உயர்நீதிமன்றத்தின் ஒழுங்குவிதிகளில் ஒன்று காதிகளுக்கான தகைமைகளாக சட்டத்தரணிகள், மௌலவிகள் அல்லது ஆலிம் (மார்க்க அறிஞர்), அலுவலர் தரத்திலுள்ள ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் அல்லது ஒரு பட்டதாரி என விதந்துரைத்துள்ளது.[51] எப்படியோ நடைமுறையில் காதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள பலர் இந்த தேவைப்பாட்டினை கொண்டவர்களாகவோ அல்லது பொருத்தமானவர்களாகவோ காணப்படவில்லை. மாறாக பல காதிகள் பள்ளிக் குழுக்களால் மற்றும் பள்ளிகள் சம்மேளனத்தினால் அல்லது அரசியல் ரீதியிலான தொடர்புகளின் ஊடாக பரிந்துரை செய்யப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

### 7.1. காதிகளுக்குப் பொருத்தமான தகைமை, கொடுப்பனவுகள் இன்மை

நீதிச்சேவை ஆணைக்குழு பிரதிநிதியின் கருத்துப்படி மிகவும் குறைந்த சம்பளம், ஏனைய வளங்கள் போதாமை என்பனவற்றின் காரணமாக காதிகளாக அமர்த்துவதில் குறிப்பிடத்தக்க சவால்கள் காணப்படுகின்றன. இது மட்டுமன்றி சில பிரதேசங்களில் முன்னர் காதிகளாக இருந்தவர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டமை, ஊழலில் ஈடுபட்டமை என்பதன் காரணமாக காதி என்ற பதவிக்கு சமூகத்தில் இருக்கும் குறைந்த மதிப்பு ஆகியவற்றால் தகுதியுடையவர்கள் காதியாக விண்ணப்பிக்க விரும்புவதில்லை. இது தகுதியற்றவர்களின் நியமனங்களுக்கு

[51] நீதிச் சேவை ஆணைக்குழு காதி நீதிமன்ற விடயப் பொறுப்பதிகாரியுடனான நேர்காணல், மார்ச், 2016

வழிவகுத்துள்ளது. உதாரணமாக காதி ஒருவரை நியமிப்பதற்கான பல முயற்சிகளின் பின்னர், கல்குடா என்னும் இடத்தில் முன்னைய காதியின் அலுவலக உதவியாளராக இருந்த ஒருவரை காதியாக உள்வாங்கியதைக் குறிப்பிடலாம்.

நீதிச்சேவை ஆணைக்குழு பிரதிநிதியின் வார்த்தைகளிலிருந்து:

*"சில மாதங்களுக்கு முன்னர் 6 பிரதேசங்களுக்கான காதிகளுக்குரிய பதவிக்கான விளம்பரம் ஒன்று வாத்தமானியில் வெளியானது. நாங்கள் இன்னும் அம்பாந்தோட்டை மற்றும் ஹற்றனில் இருந்து எந்த விண்ணப்பங்களையும் பெறவில்லை. சில இடங்களில் பொதுவாக எந்த விதமான போட்டியும் காணப்படுவதில்லை. இதனால் நீதிச்சேவை ஆணைக்குழு யார் காதியாக விரும்புகிறாரோ, பொருத்தமோ அவரை நியமிக்கின்றது. இங்கு பிரச்சனை என்னவெனில் சம்பளம் (மாதத்திற்கு ரூ.6000) குறைவு என்பதனால் தகுதி வாய்நத ஒருவரும் விண்ணப்பிப்பதில்லை. அது மட்டுமன்றி காதி அந்த பகுதியினைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதனையும் தேவைப்படுத்துவதால் பெரும்பாலானவர்கள் சொந்தக்காரர்களாயும், குடும்ப உறவினர்களாயும் இருப்பதனால் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதில்லை. சில இடங்களில் காதிகள் அல்லது அந்த முறைமை மிகவும் ஊழல் நிறைந்ததாக காணப்படுகின்றமையால் மரியாதையுடைய எவரும் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புவதில்லை."*

அம்பாந்தோட்டையில் காதிக்குரிய பதவியானது கடந்த ஒன்றரை வருடங்களாக வெறிதாக காணப்படுகின்றமையும், தெற்கு மற்றும் கொழும்பு பகுதிகளில் கடந்த 18 மாதங்களுக்குள் காதிகள் பல தடவைகள் மாற்றப்பட்டுள்ளமையும் இந்த ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. காதிகளுக்கென்று பணி ஓய்வு பெற்றுக் கொள்வதற்கான வயதெல்லை இல்லை என்பதனால் சில காதிகள் தமது முதுமையினாலும், சுகயீனங்களாலும் தொடர்ச்சியாக நீதிமன்றில் அமர்ந்திருக்க முடியாமலும், தமது கடைமையை வினைத்திறனாக செய்து முடிக்க முடியாத நிலையிலும் இருக்கின்றனர் என்பதுவும் நீதிச்சேவை ஆணைக்குழு பிரதிநிதியின் கருத்தாக இருந்தது.

## 7.2. காதிகளது கூருணர்வற்ற, பொருத்தமற்ற நடத்தையும், மனப்பாங்கும்

காதிநீதிமன்ற முறையினை பொறுத்தவரையில் பாரிய சிக்கலுக்குரிய பிரச்சனையாக காணப்படுவது காதிநீதிமன்றத்தை அணுகும் பெண்களிடம் அநேக காதிகள் நடந்து கொள்ளும் முறையும், அவர்களின் மனப்பாங்குமாகும். நீதிச்சேவை ஆணைக்குழு பிரதிநிதியின் நேர்காணலின் போது பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பாக காதிமாரினது பொருத்தமற்ற மற்றும் கூருணர்வுத்தன்மையற்ற நடத்தைகள் தொடர்பாக பெருமளவிலான முறைப்பாடுகள் கிடைப்பதாகத் தெரிவித்தார். விவாகரத்து மற்றும் பராமரிப்பு கோரும் பெண்களுக்கெதிரான காதிமார் பாகுபாடாக நடந்து கொள்வது தொடர்பான பல வழக்குகளை பெண்கள் நிறுவனங்களிடமுள்ளன.

சில காதிகள் பெண் அல்லது மனைவி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தத்தமது மனப்பாங்கில் ஊறிப் போன நிலையில் விவாகரத்துக்கு எதிர்ப்பானவர்களாக அல்லது பலதாரமணத்தை ஊக்குவிப்பவர்களாக இருக்கின்றனர். இந்த பக்கச்சார்பு மற்றும் தொழில் நிபுணத்துவம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படாமை என்பன பெண்களுக்கெதிரான பாரபட்சமான தீர்மானத்தை எடுப்பதற்கு வழிவகுக்கின்றது. எடுத்துக்காட்டாக பெண்கள் மற்றும் சிறுமிகள் கணவர்களால் குடும்ப வன்முறைக்கும், கொடூரமான நடத்தைக்கும் உட்படுத்தப்படுகையிலும் காதிகள் அவர்களது வழக்கை தள்ளுபடி செய்வதுடன் கணவனை அனுசரித்து நடக்கும் படி கூறி திருப்பியனுப்பப்படுகின்றனர்.

காதிகளுக்கென்று வேலை செய்வதற்கான (நாட்கள் மற்றும் மணித்தியாலங்கள்) குறிப்பிடப்படவில்லை. பெண்கள் நிறுவனங்களின் கருத்துப்படி, சில காதிகள் இரவில், பொருத்தமற்ற நேரங்களில் தமது வசிப்பிடங்களில் நீதிமன்றங்களை நடத்துகின்றனர். இது காதிநீதிமன்றை அணுகுவதில் பெண்களுக்கு மேலதிக சிரமத்தை ஏற்படுத்துகின்றது. வசதிபடைத்தவர்களுக்கு தகுந்த மாதிரி காதிநீதிமன்ற விசாரணை நேரத்தையும், இடத்தையும் காதிகள் மாற்றிக் கொள்வதும் அடிக்கடி நடப்பதொன்றாக இருக்கின்றது. மட்டக்களப்பினைச் சேர்ந்த பெண் செயற்பாட்டாளர் ஒருவர் கூறும் போது "ஏழையைப் பொறுத்தளவில் காதியை சென்று சந்திக்க வேண்டும். வசதி படைத்தவர்களைப் பொறுத்தளவில் அவர்களது அடையாளத்தையும், கௌரவத்தையும் பேண வேண்டும் என்பதற்காக காதி அவர்களைச் சென்று சந்திக்கிறார்."

**சம்பவ கற்கை :** 2014ம் ஆண்டு 14 வயதையுடைய கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த சிறுமி ஒருவர் திருமணம் முடித்து வைக்கப்பட்டதுடன், அவரது கல்வி நடவடிக்கைகளும் அத்துடன் நிறுத்தப்பட்டன. திருமணத்தின் ஒரு சில மாதங்களின் பின்னர் அந்தச் சிறுமி கணவனது கடுமையான பாலியல் ரீதியிலான சித்திரவதை காரணமாக பஸாஹ் விவாகரத்துக்கு விண்ணப்பம் செய்தாள். அவ்வேளையில் காதி அந்த வழக்கினை சரியான கூருணர்வுடன் கையாளத் தவறி இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அச்சிறுமியை பாலியல் வன்முறை அனுவங்கள் தொடர்பாக துருவித்துருவி விபரங்கள் கேட்டிருக்கிறார். அதன் விளைவாக குறித்த சிறுமி மேலும் உள ரீதியாக பெரிதும் பாதிப்பையடைந்து, பயங்கரமான மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டதுடன் தற்கொலை செய்து கொள்ள முயன்றிருக்கிறார்.

ஒரு மனைவியால் தொடுக்கப்பட்ட அண்மைக்கால வழக்கு ஒன்றில், காதி ஒருவர் எதிராளி ஒருவரை "அவர் வசதிபடைத்தவர்(கணவர்), பள்ளிவாசலுக்கு கூடுதலான பணம் கொடுப்பவர், அரசியல்வாதிகளிடம் செல்வாக்குள்ளவர், அதனால் அவரை காதி நீதிமன்றுக்கு அழைப்பது பொருத்தமற்றது எனக்கூறி அழைப்பு விடுக்க மறுத்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் காதி குறித்த பாதிக்கப்பட்ட மனைவிக்கு கணவரது பிழையான செயற்பாடுகளைப் பொறுத்துக் கொண்டு அவருடன் சேர்ந்து அனுசரித்து வாழும்படி அறிவுரை கூறியுள்ளார்.

தொடர்ச்சியான காதி நீதிமன்ற செயற்பாடுகளிலுள்ள குறைகள் பற்றி அரசினது மேற்பார்வையும், கண்காணிப்பு பொறிமுறையும் இன்மை தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை அளிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்பதும் உணரப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றையும் விட காதிகள் தமது நீதிமன்றின் முன் வரும் ஒரு தரப்பிடம் அல்லது இரண்டு தரப்பிடமும் இலஞ்சம் பெற்று அவர்களது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப தீர்ப்பினை வழங்கிய வழக்குகள் கூட காணப்படுகின்றன. நீதிச்சேவை ஆணைக்குழு பிரதிநிதியின் நேர்காணலின் போதும் இலஞ்ச அடிப்படையிலான குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவது பற்றித் தெரிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் நீதிச்சேவை ஆணைக்குழு உரிய விசாரணைகளின் பின்னர் குறித்த காதியினை இடைநிறுத்தம் செய்வதைத் தவிர குறித்த நடவடிக்கை தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. இவ்விடத்தில் நீதிச்சேவை ஆணைக்குழு எந்த மட்டத்தில் தமக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துகின்றது என்பதும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளை குறிக்கப்பட்ட காதி மீது எடுக்கின்றதா என்பது தொடர்பாக தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது.

### 7.3. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், அதன் நடபடி, நியாயாதிக்கம் தொடர்பான போதிய அறிவின்மை

இலங்கையின் பொது நீதிமன்றங்களில் பதவி வகிக்கும் ஏனைய நீதிபதிகளுக்கு காலத்துக்கு காலம் வழங்கப்படுவது போன்று முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய அல்லது நீதிபதிகளின் ஒழுக்க நடத்தைகள் பற்றி எதுவிதமான கட்டாயமான, ஒழுங்கமைக்கப்பட்ட, தொழில்சார் பயிற்சிகள் எதுவும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் காதிகளுக்கு வழங்கப்படுவதில்லை. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான முன்னறிவு அல்லது அனுபவம் என்பது ஒரு காதியாக வருவதற்கான தேவைப்பாடாக இல்லாமை பெரும் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும்.

முஸ்லிம் பெண்களுக்கான ஆய்வு மற்றும் செயற்பாட்டு நிலையம் போன்ற சிவில் சமூக நிறுவனங்கள் ஒவ்வொரு வருடமும் வருடத்துக்கொரு முறை அவ்வாறான பயிற்சிகளை நடத்தியிருக்கின்றன. எவ்வாறெனினும் காதிகள் அடிக்கடி மாறுவதனால் வழங்கப்பட்ட பயிற்களுக்குரிய தொடர் பயிற்சிகளில் ஏற்கனவே பயிற்சி பெற்ற பல காதிகள் மீண்டும் பங்கேற்க இருப்பதில்லை. இதன் விளைவாக பல காதிகள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட அறிவுடன் அல்லது எதுவித அறிவும் இன்றி தமது பதவிகளில் உள்வாங்கப்படுவதுடன், சேவையாற்றவும் ஆரம்பிக்கின்றனர். இதனால் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி சட்டத்தையும், அதன் நடபடியையும் முறையாக அமுல்படுத்த இவர்களால் முடிவதில்லை. அத்துடன் வழக்கு விபரக் கோவைகளைப் பேணுவதற்கோ அல்லது உத்தரவுகளை பதிவு செய்து வைப்பதற்கென்றோ அனைத்து காதிகளும் பின்பற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முறை ஒன்றும் இல்லை.

இதேவேளை இடமாற்றங்கள் அல்லது ஓய்வு பெறும் போது சரியான விதத்தில் பொறுப்புகள் கையளிக்கப்படுவதுமில்லை. தாம் காதியாகப் பொறுப்பேற்கும் போது தமக்கு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான பிரதி ஒன்று கூட அலுவலக ரீதியாக வழங்கப்படவில்லை என்று ஒரு காதி தெரிவித்தார்.

பெரும்பாலான காதிகள் தமது நியாயாதிக்கம், அதிலுள்ள மட்டுப்பாடுகள் பற்றி தெரியாமல் இருக்கின்றார்கள். சில காதிகள் பிள்ளைகளின் பாதுகாவல், சீதனத்தினை மீளப் பெற்றுக்கொடுத்தல், (அசையாத சொத்து) மற்றும் மத்தா (மனைவிக்கான இழப்பீடு) தொடர்பாக தமது நியாயாதிக்கத்துக்கு அப்பால் தீர்மானங்களை வழங்குகின்றனர்.

### 7.4. பெண்கள் பதவி வகிப்பதைத் தடை செய்யும் ஏற்பாடுகள்

இலங்கையில் முஸ்லிம் பெண்கள் அரச நீதிமன்ற முறைகளுக்குள் நீதி அலுவலர்களாகவோ அல்லது நீதிபதிகளாகவோ பணியாற்றுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. ஆனால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் படி அவர்களால் காதிகளாக, காதிகள் சபை உறுப்பினர்களாக, ஜூரிகளாக, விவாகப் பதிவாளர்களாக வரமுடியாது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் பிரிவு 8 இன்படி முஸ்லிம் விவாக பதிவாளர், பிரிவு 12 இன்படி காதிகள், பிரிவு 15 இன்படி காதிகள் சபை உறுப்பினர்கள் போன்ற பதவிகள் முஸ்லிம் ஆண்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது. இதன் விளைவாக தகுதி வாய்ந்த முஸ்லிம் பெண்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாமலுள்ளது.

#### 'பெண் காதிகள்' பற்றிய சிக்கலும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தமும்

முஸ்லிம் பெண்ணொருவர் காதியா இருக்கலாமா, இல்லையா என்பது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தில் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

பெண்கள் காதிகளாக வர முடியாது என்பதற்கு பின்வரும் காரணங்களை பழமைவாதிகள் முன்வைத்தனர்.

சில சமயத் தலைவர்கள் மற்றும் பழைமைவாதிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட “இஸ்லாமிய” அடிப்படையிலான காரணங்கள்:

1. இஸ்லாமிய வரலாற்றில் பெண் தலைவர்கள் தொடர்பாக சான்றாதாரங்கள் இல்லை.
2. ஆண், பெண் என்று பிரித்து வைத்திருப்பது பெண்களால் அவர்களுக்கு நெருக்கமான உறவில்லாத ஒரு ஆணுடன் தொடர்பாட முடியாது என்பதனாலாகும்.
3. இஸ்லாமிய சட்டத்தின் சில வகையான பொருள்கோடல்களால் பெண்களது சாட்சியம் ஆண்களின் சாட்சியத்தின் அரைவாசி என்ற அபிப்பிராயம்.
4. பெண்கள் தலைமைத்துவ பதவிகளை வகிப்பதற்கு மார்க்க ரீதியாகத் தடுக்கப்பட்டுள்ளார்கள் என்ற கருத்து.

பெற்றுக் கொள்ளப்பட்ட ‘‘உயிரியல்’’ அடிப்படையிலான காரணங்கள்:

> காதி ஒருவரின் நேர்காணலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது: “பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாயும், நியாயமாக யோசிக்க முடியாதவர்களாயும் இருப்பதனால் அவர்களால் சரியான தீர்ப்பினை வழங்க முடியாது.’’

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தக் குழு உறுப்பினர் ஒருவரது கருத்துப்படி ‘‘முழுமையான திருத்தச் செயற்பாட்டினையும் முடக்கி வைத்துள்ள ஒரு விடயமாக இது கருதப்படுகின்றமையால் பெண்காதிகள் தொடர்பான விடயத்திற்கு அத்தனை முன்னுரிமை வழங்கத் தேவையில்லை’’ என்பதாகும்.

இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் தமது குடும்பச் சட்டத்தில் இஸ்லாத்திலுள்ள தெரிவுகளைக் கொண்டு பெண்களை காதிகளாக உள்வாங்கியுள்ளன. ஆயின் இது “இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்புடைத்தானது” அல்ல என புறந்தள்ளப்படுகின்றது. குறித்த ஒரு உலமாவின் கருத்துப்படி இந்த நாடுகளில் பெண்கள் காதிகளாக இருப்பது “மேற்கத்தேய செல்வாக்கு” அல்லது இந்நாடுகள் ஆங்கிலச் சட்டத்தைப் பின்பற்றுகின்றன என்பதனாலாகும். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் வெவ்வேறு மத்ஹப் பிரிவுகளை அங்கீகரிப்பதுடன், அதன் படி செயலாற்றவும் அனுமதி அளித்துள்ள அதே சந்தர்ப்பத்தில் ஹனபி பிரிவின் கீழ் பெண்கள் காதிகளாக வருவதற்கு எதுவித தடையும் இல்லை எனினும் இதனை உள்வாங்க சட்டத் திருத்தம் மறுப்பதானது பாரியதொரு முரண்பாடாகும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் சில ஏற்பாடுகள் உதாரணமாக பராமரிப்பு கட்டளையினை அமுல்படுத்துவதற்கான கட்டளை, கைக்கூலி அல்லது மகரை மீளப் பெற்றுக்கொள்ளலுக்கான மேன்முறையீடு, பிள்ளைகளுக்கான பாதுகாவல் என்பனவும் அத்துடன் முஸ்லிம் மரண சாசனமில்லா வழியுரிமைச் சட்டத்தின் கீழான (1931) வழியுரிமை தொடர்பான வழக்குகள் பொது நீதிமன்றங்களிலேயே கையாளப்படுகின்றன. இங்கு வழக்கை விசாரித்துத் தீர்க்க பெண் நீதிபதிகள் காணப்படுகின்றனர். வழியுரிமை தொடர்பான வழக்கை (ஆண், பெண், முஸ்லிம், முஸ்லிமல்லாத வேறுபாடுகள் இன்றி) எந்த ஒரு நீதிபதியும் இஸ்லாமிய சட்டத்தையும், வழியுரிமைச் சட்டத்தையும் பொருள்கோடல் செய்து அதன் அடிப்படையில் தீர்ப்பளிக்கின்றார்.

**கோரிக்கை:** முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச்சட்டத்தின் கீழ் காதி நீதிமன்றம் தொடர்பாகவுள்ள பதவிகளை பெண்களுக்குத் தடை செய்யக் கூடாது. பெண்களை காதிகளாக, ஜூரிகளாக, திருமணப்பதிவாளராக, காதிகள் சபை அங்கத்தவராக அனுமதிக்காமை முஸ்லிம் பெண்களுக்கு தாம் இலங்கை பிரசை என்ற வகையில் தமது தொழில் நிபுணத்துவத்துடன் சேர்ந்த வேலையினைத் தெரிவு செய்வதற்கான உரிமையினை மறுப்பதாகும். இவை அரச கொடுப்பனவுடன் கூடிய பொது மக்களின் வரியினால் இயங்கும் பதவிகளாகும். இவை பெண்களுக்கு மறுக்கப்படலானது பால்நிலை மீதான பாரபட்சம் என்பதுடன் இலங்கை முஸ்லிம் பெண்கள் மீது அரசு வெளிப்படையாகவே காட்டும் பாரபட்சமாகும். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச்சட்டத் திருத்தமானது ஜூரிகளில் ஆகக் குறைந்தது இரண்டு பேராவது பெண்களாக இருத்தல் வேண்டும் என்ற கட்டாய ஏற்பாட்டினைக் கொண்டு வரவேண்டும். காதி நீதிமன்றம் மற்றும் காதிகள் மற்றும் காதிநீதிமன்ற நடவடிக்கையினை கண்காணிக்க நீதிச்சேவை ஆணைக்குழுவினால் ஒரு முறைமை பின்பற்றப்பட வேண்டும்.

## 7.5. பால்நிலைசார் வன்முறை வழக்குகளில் காதி நீதிமன்றங்களின் தலையீடு

காதிநீதிமன்றங்களில் பாதிப்புக்குள்ளான பெண்கள் மற்றும் பிள்ளைகள் எவ்வாறு கையாளப்படுகின்றனர் என்பதை நோக்குகையில் முஸ்லிம் சமூகத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை கையாள்வது தொடர்பாக மேலதிக சிக்கல்தன்மை காணப்படுகின்றது எனலாம். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் அல்லது காதிநீதிமன்ற முறைமையில் குடும்ப வன்முறை, பாலியல் வல்லுறவு மற்றும் இரத்து உறவுக்குள் எழும் பாலியல் குற்றங்கள் போன்ற வழக்குகளைக் கையாள்வதற்கு எத்தகைய சட்ட ரீதியான கடப்பாடும் இல்லை. எவ்வாறெனினும் முஸ்லிம் பெண்கள் இத்தகைய வன்முறைகள் குற்றமாக இருந்தாலும் கூட, அரச நிவாரணங்களைப் பெறக் கூடாது அல்லது "முஸ்லிம் அல்லாத" நிறுவனங்களை அணுகக் கூடாது, ஏனெனில் இவற்றுக்கான தீர்வுகள் 'சமூகத்தினுள்ளேயே' பெறப்படல் வேண்டும் எனும் மனப்பாங்கு பெருமளவில் காணக் கூடியதாய் இருந்தது.

### 7.5.1. வீட்டு வன்முறைகளில் சமூகத்தின் தலையீடுகள்

தண்டனைச்சட்டக் கோவையின் படி உடல் ரீதியிலான வன்முறையானது ஒரு குற்றமாகும் என்பதுடன் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க வீட்டு வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறை என்பது உணர்வு ரீதியிலான துஷ்பிரயோகம் உட்பட ஏனைய வகையான வீட்டு வன்முறைகளையும் இதன் கீழ் அங்கீகரிப்பதுடன் பாதுகாப்பு கட்ளையின் ஊடாக சிவில் நிவாரணத்தையும் வழங்குகின்றது.

வீட்டு வன்முறை தொடர்பான தலையீடுகள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வானது பாதிக்கப்பட்ட பெண்களில்[52] ஒரு தொகையினர் வீட்டு வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கட்டளையினைப் பெற்றுக் கொள்ள முன்வருகின்றனர் என்பதையும், அவற்றுள் முஸ்லிம் பெண்களின் அளவு மிகவும் குறைவாக காணப்படுகின்றமையையும் குறித்துக் காட்டுகின்றது.

சமூக மட்டத்தில் பெண்கள் மத்தியில் பணிபுரியும் நிறுவனங்களின் கருத்துப்படி பெண்கள் காதி நீதிமன்றத்துக்கு பஸஹ் விவாகரத்துக் கோரி போவதன் அடிப்படைக் காரணம் கொடூர நடத்துகையும், வீட்டு வன்முறையுமாகும். காதிகள், விவாகரத்து வழக்குகளில் மத்தியஸ்தம் செய்ய வேண்டிய கடமையினை கொண்டுள்ளனர். ஆயின் பொதுவாக அதனை பள்ளிவாசல்

[52] Chulani, Kodikara, '*Domestic Violence Intervention Services in Sri Lanka: An exploratory mapping 2009-2011*'. International Center for Ethnic Studies, Colombo, Sri Lanka.

சபைகளுக்கு அல்லது பள்ளிவாசல் சம்மேளனத்திற்கு அல்லது, மற்றும் வேறு உளவளத்துணைக் குழுக்களுக்கு மத்தியஸ்தத்திற்காக அல்லது சாத்தியமான நல்லிணக்கத்துக்காக பரிந்துரை செய்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் இதே பள்ளிவாசல் சபை அல்லது சம்மேளன உறுப்பினர்கள் யூரர்களாக காதிக்கு வழக்குகளில் ஆலோசனை சொல்பவர்களாகவும் செயற்படுகின்றனர்.

பள்ளிவாசல் சபை அல்லது சம்மேளனம் ஆண்களை மட்டுமே கொண்டுள்ளதுடன் “குடும்ப நல்லிணக்க குழு”வினையும் ஸ்தாபித்துள்ளது. சகல வகையான குடும்ப பிரச்சனைகள், வீட்டு வன்முறைகள் என்பன இங்கு மத்தியஸ்தத்துக்காகக் கொண்டு வரப்படுகின்றன என்பதை மட்டக்களப்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள வழக்குகள் தெரிவிக்கின்றன. வன்முறை இடம் பெற்றதற்கான ஆதாரம் தெளிவாக இருப்பினும் பொலிஸ் மற்றும் வீட்டு வன்முறை தொடர்பாக விசேடமாக பணிபுரியும் நிறுவனங்கள் எவையும் வன்முறையின் முதலாவது பரிந்துரைக்குரிய இடமாக இப்பெண்களுக்குக் காட்டப்படுவதில்லை என்பது பெண்கள் நிறுவனங்களினால் அவதானிக்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் உள்ள ஒரு பள்ளிவாசல் சபையின் சார்பாக உரையாடிய உறுப்பினர், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள் மத்தியில் ‘எது இஸ்லாம்? எது இஸ்லாம் அல்ல’ என்பது தொடர்பாக வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன என்பதுடன் இதன் காரணமாக தன்னிச்சையான முடிவுகள் எடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சரியான முறையில் தகவல்கள் வழங்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றதா, இல்லையா என்பது தொடர்பான தீவிர கரிசனை காணப்படுவதுடன் வன்முறையின் விஸ்தீரணம் மற்றும் அளவு என்பற்றின் அடிப்படையில் பொலிஸ் தலையீடு தேவையா அல்லது நல்லிணக்கத்திற்காக உளவள ஆலோசனைக்கு அனுப்புவதா போன்றவற்றை தீர்மானிப்பதற்குரிய முடிவுகளை யார் எடுப்பது என்பன தொடர்பாகவும் கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

சில காதிகள் வழக்குகளை முஸ்லிம் பெண்கள் தலைமை தாங்கி நடத்தும் உளவளத்துணை முன்னெடுப்புக்களை மார்க்கத்தோடு தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அல்லது ஏனைய குழுக்களுக்கு பரிந்துரை செய்கின்றனர். உரிமை சார்ந்து செயற்படும் நிறுவனங்களுக்கு பாதிக்கப்பட்ட பெண்கள் செல்லும்போது ஆலோசனையாளர்கள் பெண்களுக்கு பொலிஸிற்கு செல்ல வேண்டுமா அல்லது குடும்ப வன்முறை தடுப்புச்சட்டத்தினை அணுக முடியமா போன்ற தேர்வுகளை வழங்குகின்றன. கொழும்பில் உள்ள அகில இலங்கை ஜம்மியதுல் உலமா பெண்களுக்காக உளவள சேவையினை வழங்கியுள்ளனர். அவர்களது உளவள ஆலோசகர்களின்படி குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் போன்ற சட்டப்பொறிமுறைகளுக்கு செல்லாமல் குடும்பத்தினுள் வைத்தே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக தெரிவித்தனர். குறிப்பிட்ட ஆலோசனை குழுவில் உள்ள பெண்கள் தாம் காதி நீதிமன்றங்களில் இருந்து பரிந்துரைக்கப்பட்டு, விசேடமாக குடும்ப பிரச்சனைகள், பராமரிப்பு விடயங்கள் என்பவற்றுடன் சில குடும்ப வன்முறைகள் உள்ளடங்கலான வழக்குகளையும் மத்தியஸ்தத்திற்காகவும், உளவளத் துணை ஆலோசனைக்காகவும் பெற்றிருப்பதாகத் தெரிவித்தனர்.

மேலே குறிப்பிட்ட காதி அல்லது சமூக நிறுவனங்களால் வழங்கப்படும் ஆலோசனை மற்றும் மத்தியஸ்தம் தொடர்பாகவுள்ள மேலதிக கரிசனை இவை தன்னிச்சையாகக் கையாளப்படுகின்றன என்பதாகும். அதுமட்டுமன்றி உடல்ரீதியான வன்முறை[53] மட்டுமே வன்முறையாகப்

[53] பெண் உளவளத்துணை ஆலோசகர் ஒருவர் தெரிவித்ததாவது: இஸ்லாத்தில் விவாகரத்தும், பிரிவினையும் காணப்படுகின்றமையால் உடல்ரீதியான வன்முறையை பொறுத்துக் கொள்ள வேண்டாம் என்றும், அதேசமயம் வாய்மூலமான வன்முறை அல்லது பொருளாதார வன்முறை, நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் என்பவற்றைப் பெண்களைப் பொறுத்துக் கொள்ளும்படி கூறுவதாகத் தெரிவித்தார்.

பார்க்கப்படுவதுடன் உணர்வுரீதியான அல்லது வாய் வார்த்தை மூலமான துஷ்பிரயோகங்கள் பொதுவாக அத்தனை தீங்கு விளைவிப்பனவல்ல என்ற விளக்கமற்ற தன்மையும் காணப்படுகின்றது.

### 7.5.2. குற்றங்களுக்கான சுருக்கமுறை நீதி: பாலியல் வல்லுறவும், இரத்த உறவுக்குள் நிகழும் பாலியல் குற்றங்களும்

தண்டனைக்குரிய குற்றங்களான பாலியல் வன்புணர்வு மற்றும் இரத்த உறவுகளுள் இடம்பெறும் பாலியல் குற்றங்களுக்கு சமூக மட்டத்தில் தலையீடு செய்யப்பட்டு சுருக்கமுறை நீதி வழங்கப்படுகின்றமை கரிசனைக்குரிய மற்றுமொரு விடயமாக அவதானிக்கப்பட்டது. இந்த ஆய்வில் சுருக்க முறை நீதி என்று குறிப்பிடப்படுவதானது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்காமல் சமூக அங்கத்தவர்களால் வழங்கப்படும் ஒரு வகை எழுந்தமானமான நீதியைக் குறிக்கின்றது.[54] வீட்டு வன்முறைகளுக்குப் போன்று, பாலியல் வல்லுறவு மற்றும் இரத்த உறவு முறைக்குள் இடம்பெறும் பாலியல் குற்றங்களுக்கு, இவற்றால் பாதிப்புக்குள்ளான பெண்கள் மற்றும் அல்லது அவர்களது குடும்பத்தவர்கள் பொலிஸை அணுகும் முன்னர் சமூகத்திற்குள்ளேயே தீர்வையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதனை பெண்களின் உரிமைகளுக்காக வேலை செய்யும் நிறுவனங்கள் அவதானித்துள்ளன. இது வழக்குகள் வரும்போது முதலில் தொடர்புகொள்ள கூடியவர்களாக இருக்கும் காதிகள், பள்ளிவாசல் சபைகள், சம்மேளனங்கள் போன்றவற்றின் தொடர்புகளைச் சுட்டி நிற்கின்றது. குறிப்பிட்ட ஒரு வழக்கில், பாலியல் வல்லுறவுக் குற்றம் புரிந்த ஒருவர் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டுத் தொகை ஒன்றை வழங்கும்படி பள்ளிவாசல் பள்ளிவாசல் சபையினால் தீர்க்கப்பட்டதுடன் இக்குற்றம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

துரதிஷ்டவசமாக இந்த சம்பவங்களால் சமூகத்தில் இருந்து எழக்கூடிய அவமானம் பற்றிய பயம், சமூகத்திலிருந்து வரக் கூடிய எதிர்ப்பு என்பவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்கள் அல்லது அவரது குடும்பத்தினர் இந்தச் சம்பவம் தொடர்பில் அமைதியாக இருப்பதையே தெரிவு செய்கின்றனர். அத்துடன் பொலிசுக்கு தெரியப்படுத்துவதைவிட உத்தியோகப்பற்றற்ற வித்தில் நடவடிக்கை எடுக்கவே விரும்புகின்றனர். பொலிஸ் நிலையங்களில் தமது மொழியைப் புரிந்து கொள்ளும் பொலிசார் இன்மையும், அதற்கான மொழிபெயர்ப்பாளர்களைத் தேடுவதற்கான அலைச்சலும், வழக்கிட வருபவர்கள் குறிப்பாக பெண்கள் வரும்போது விடயம் தொடர்பாக கூருணர்வற்ற வழக்கைக் கையாளுதல் என்பவற்றின் காரணமாகவும் பெரும்பாலும் பொலிஸ் நிலையம் செல்வதில் தயக்கம் காணப்படுகின்றது.

### 7.5.3. 'ஹத்' தண்டனைகள் - சோரத்திற்கான தண்டனை

'ஹத்' (ஹுதூத் என்பதன் ஒருமை) என்பது இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தின் கீழ் சிலவகையான குற்றச் செயல்களுக்காக[55] வழங்கப்படும் தண்டனை முறையாகக் காணப்படுகின்றது. இது திருமண உறவற்ற பாலுறவு, சட்டத்துக்கு முரணான பாலுறவு அல்லது சோரம், பிறரது முறையற்ற பாலுறவு தொடர்பில் ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தல் என்பவற்றையும் உள்ளடக்கும். இலங்கையின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் 'ஹத்' தண்டனைக்கு அமைவான குற்றங்களோடு தொடர்புடைய சட்டங்கள் அல்லது

---

54 Morgan, Rod, 2008. Summary Justice: Fast but fair?. Center for Crime and Justice,King's College London, UK http://www.crimeandjustice.org.uk/sites/crimeandjustice.org.uk/files/summary-justice.pdf

55 Oxford Islamic Studies Online, 2016. The Oxford Dictionary of Islam. http://www.oxfordislamicstudies.com/article/opr/t125/e757

தண்டனைகள் பற்றிய ஏற்பாடுகள் எவையும் இல்லை என்பதுடன் இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் படி சோரம் என்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமல்ல.

களரீதியான நேர்காணல்களை மேற்கொண்டதன்படி, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் காதி நீதிபதி ஒருவரின் பணிப்புரைக்கு அமைய 'ஹத்' அடிக்கும் தண்டனை முறை நிறைவேற்றப்பட்டுள்ளமை தெரிய வந்தது. குறித்த காதி நீதிபதியின் கூற்றின்படி, கணவன் அல்லது மனைவி காதி நீதிபதியிடம் விவாகரத்து அல்லது பராமரிப்புச் செலவு தொடர்பில் முறையிடுகையில், கணவனோ அல்லது மனைவியோ திருமணத்துக்கு வெளியே பாலுறவு கொண்டமை தெரிய வருகையில் அவர் சம்பந்தப்பட்ட ஆணையும் பெண்ணையும் வரவழைத்து, திருமணமாகாதோராயின் 100 கசையடிகளையும், திருமணமானோராயின் 110 கசையடிகளையும் வழங்க உத்தரவிடுவதுடன், அத்தண்டனையானது பள்ளிநிர்வாக சபையில் உள்ள நான்கு ஆண் சாட்சிகளின் முன்னிலையில் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

'சோரம்' என்பது தண்டனைக்குரிய குற்றமல்லாத இச்சந்தர்ப்பத்தில், அரச ஊழியரான காதி வழங்கும் 'ஹத்' தண்டனையானது கொடூரமான, மனிதத்தன்மையற்ற கீழான நடத்துகை என்ற அடிப்படையில் சித்திரவதை[56] என்பதாகவும், மனித உரிமை மீறலாக அமையும்.

திருமணத்துக்கப்பால் பாலுறவு கொண்டவர் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் 'ஹத்' தண்டனை வழங்கப்படுவது பள்ளிவாசல் சபையினால் அல்லது பள்ளிவாசல் சம்மேளனங்களினால் என குழுக் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது. எனினும், ஆண்கள் மற்றும் பெண்கள் மீது நிறைவேற்றப்பட்ட மேற்படி தண்டனைகளின் துல்லியமான நிலைமை மற்றும் எண்ணிக்கை அல்லது சம்பவங்கள் குறித்துத் தெளிவான தகவல்களைப் பெற முடியவில்லை[57]. இப்பகுதிகளில் வேலை செய்யும் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள், ஷரீஅத் சட்டத்தின் ஒருபகுதி என்ற வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் ஒரு பகுதி என்றும், சமூக நியமம் என்ற விதத்திலும், சட்டபூர்வமானது என தாம் நம்பி இருந்தாகவும் இதன் விளைவாக இத்தண்டனை முறைமை குறித்து எவ்விதக் கேள்விகளோ, எதிர்வினைகளோ முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவித்தன. இந்த ஆய்வின் முடிவுறும் கட்டத்தில், புத்தளத்தில் இடம்பெற்ற ஒரு வழக்கு[58] ஊடகங்களினால் வெளிச்சத்துக்கு வந்தது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட 25 வயதான இளம்பெண் ஒருவருக்கு, சோரம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் உள்ளூர் பள்ளிவாசல் நிர்வாக சபையினரால் 100 கசையடிகள் வழங்கப்பட்டிருந்தன. ஒரு வழக்கறிஞரின் துணையோடு அவர் வழக்குத் தொடுத்ததன் விளைவாகவும், நீதிபதியின் இடையீட்டினாலும் குற்றவாளிகளான 4 ஆண்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவ்வாறான சம்பவங்களை எதிர்கொள்ள நேரும் பெண்கள் துணிவோடு சட்டத்தின் துணையை நாடும்போது, அவர்கள் சமூகத்தில் பல்வேறு சிக்கல்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இத்தகைய தண்டனைச் சம்பவங்களை எதிர்கொள்ள நேரும் ஆணோ, பெண்ணோ தனிப்பட்ட ரீதியில் எதிர்கொள்ளும் உளவியல் மற்றும் உடல் சார்ந்த தாக்கத்துக்கு மேலதிகமாக, சமூகத்தில் 'அவமானம்' என்ற பாதிப்பு அவர்களது நல்வாழ்வில் பாரிய விளைவைச் செலுத்தக் கூடும். எனவே, இந்நடைமுறை இன்னும் தொடர்கிறதா, இல்லையா என்பது தொடர்பில் உரிய

---

56 அரசியலமைப்பமின் உறுப்புரை 11- 'ஆள் எவரும் சித்திரவதை, கொடூர, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்பட முடியாது'

57 பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியானது (MWRAF) 1999இல் தனது வெளியீட்டில் இதனைப் பற்றி கரிசனை எழுப்பியிருந்தது. இதில் தும்பினால் தண்டனை வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மூலம்: 'Between Two Worlds'

58 டெய்லி மிரர் பத்திரிகை- 24th October 2016. http://www.dailymirro.lk/article/four-remanded-for-beating-sexually-abused-woman-118021.html?fbrefresh=refresh

விசாரணைகளையும் அவ்வாறு தொடருவதாகத் தெரியும் பட்சத்தில் அதனை குற்றமாக ஆக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

**கோரிக்கை:** குற்றவியல் தண்டனைக் கோவை, வீட்டு வன்முறை தடுப்புச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களில் குற்றமாகக் கருதப்படும் விடயங்களை காதிகள் கையாளக் கூடாது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான தனிப்பட்ட விடயங்களுக்கு மட்டுப்பட்டதாகவே அமையும். இத்தகைய நடைமுறைகளின்போது குற்றச்செயல் இடம் பெற்றிருப்பதாகக் காதிநீதிபதி நியாயமாக சந்தேகப்படுவாராயின் உரிய அதிகார சபைகளுக்கு அதனை பரிந்துரை செய்தல் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

## ஏனைய தேசிய சட்டங்களின் கீழான சட்ட விதிவிலக்குகள் (LEGAL EXCLUSIONS UNDER OTHER NATIONAL LAWS)

1978ஆம் ஆண்டின் இலங்கை யாப்பின் உறுப்புரை 12 (2) கூறுவதாவது:

***"எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரஜைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது."***

எவ்வாறு இருப்பினும், யாப்பின் உறுப்புரை 16 (1) இந்த உறுப்புரையை மேவுகின்றது.

*''இப்போதுள்ள எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாக இருத்தல் வேண்டும்.''*

உறுப்புரை 16 வலுவிருக்கும் என்பதன் அர்த்தமானது, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினால் தமது எந்தவொரு அடிப்படை உரிமை மீறப்பட்டாலும் முஸ்லிம் பெண்களும், ஆண்களும் அதற்கான நிவாரணத்தைப் பெற முடியாது என்பதாகும். இது பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் நீதிமுறையான மீள்பார்வையை உறுப்புரை 80(3) இன் மூலம் தடை செய்யவதன் ஊடாக மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. ஆகவே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினால் எழும் எத்தனையோ பிரச்சினைகள் இருந்தாலும், தாம் பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படவில்லை என்றும் இச்சட்டத்தினால் அல்லது அதன் அமுலாக்கலினால் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதை சவாலுக்குட்படுத்த முடியாதுள்ளது மட்டுமன்றி தாம் பொதுச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான தெரிவையும் அற்றவர்களாக இருக்கின்றார்கள்.

எவ்வாறிருப்பினும், பொது திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்த முஸ்லிம் தம்பதிகள் இருக்கவே செய்கின்றனர். குறிப்பிட்ட காதி நீதிபதி ஒருவர் அத்தகைய திருமணங்கள் 1. குறித்த தம்பதியினர் தமது குடும்பத்தினரின் தலையீடு இல்லாமல் திருமணம் முடிக்க நாடும் போது (உ-ம்: ஓடிப் போய்த் திருமணம் முடித்தல்) 2. மணப்பெண் திருமண ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குத் தனக்கான 'வலி' எனும் பொறுப்புதாரியைப் பெற்றிராதபோது (உ-ம்: புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சந்தர்ப்பத்தில் குடும்பத்தின் ஒப்புதலின்மை) 3. திருமணப் பதிவாளர்களுக்கு முஸ்லிம்கள் பொது திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்ய முடியாது என்பது பற்றித் தெரிந்திராத போது அல்லது திருமணப்பதிவு நடவடிக்கையின் போது சமயம் பற்றிக் குறிப்பிடாமல் பதிவினை மேற்கொள்ளும் போது போன்ற சந்தர்ப்பங்களில் இடம் பெறுவதாக சுட்டிக் காட்டினார். பிரபல சட்ட நிபுணர் பேராசிரியர் சாவித்திரி குணசேகரவின்

கூற்றின்படி, இரு முஸ்லிம்கள் நாட்டின் பொதுச் சிவில் சட்டத்தின்கீழ் முஸ்லிம்களாக இருந்து திருமணம் செய்துகொள்ளும் பட்சத்தில், அத்திருமணம் வெற்று வறிதானதாகும். அவ்வாறெனில் விவாகரத்து, பாதுகாவல், பராமரிப்பு போன்ற விடயங்களில் மேற்சொல்லப்பட்ட தனிநபர்களின் திருமணம் அவர்களதும், அவர்களின் குழந்தைகள் விடயத்திலும் பல கேள்விகளை எழுப்புகின்றது. இந்த ஆய்வின்போது, அறியாமையால் அல்லது நடைமுறையில் பொதுச் சிவில் சட்டத்தின்கீழ் திருமணம் முடிக்கும் முஸ்லிம் தம்பதிகளின் சட்ட விளைவுகள் தொடர்பில் தெளிவில்லாமல் இருந்தது.

பிரதானமான நபர்களுடனான நேர்காணல்களில் அநேக முஸ்லிம் வழக்கறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், பரிந்துரைப்பவர்கள் ஆகியோர், பொதுச் சட்டத்தின் கீழ் அன்றி முஸ்லிம் திருமணங்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துக்கு அமைவானவையாகவே தொடர்தல் வேண்டும் எனும் கருத்தினை வெளிப்படுத்தினர்.

இக்கருத்தானது நாட்டின் ஏனைய பொறிமுறைகளுக்கு அமைவான வேறெந்த வகையான மாற்றீடுகளையும் அணுகாமல் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருப்பினும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துடன் இணைந்துதான் முஸ்லிம்கள் போகவேண்டும் என்ற கட்டாயத்தை தோற்றுவிப்பதனைக் காணமுடியும்.

## பகுதி 2:

## முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்கூறுவதிலும், சட்டத்திருத்தங்களை முன்னெடுப்பதிலும் சிவில் சமூகத்தின் தலையீடுகள் பற்றிய கண்ணோட்டம்

# PART 2:
# OVERVIEW OF CIVIL SOCIETY INTERVENTIONS ON ADDRESING MMDA RELATED ISSUES AND TOWARDS MMDA REFORMS

## சிவில் சமூகங்களின் தலையீடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

இலங்கையில் பெருமளவிலான சிவில் சமூக அமைப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறும் அமைப்புகள் சொற்பமாகவே உள்ளன. இந்த ஆய்வானது பொதுவாக முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் பற்றியும், குறிப்பாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பாக பணியாற்றிக் கொண்டிருக்கும் அமைப்புகள் பற்றி அவதானம் செலுத்தியுள்ளது. இவ்வமைப்புகள் நகர்ப்புற, கிரமப்புற வித்தியாசங்களுக்கு அப்பால் கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு, மன்னார் போன்ற பிரதேசங்களில் சவால்களுக்குள்ளும், மிகவும் அவதானத்திற்குரிய, வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளிலும் பணியாற்றி வருகின்றன. நீண்டகாலமாக இயங்கி வரும் இவ்வமைப்புகளின் முயற்சிகளை சமூக மட்டத்தில் வேலை செய்து வரும் அமைப்புகளும், பல சமூக மட்ட செயற்பாட்டாளர்களும் வலுப்படுத்தியதோடு, உறுதுணையாகவும் இருக்கின்றமை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் அமைப்புக்களினால் பின்பற்றப்பட்ட சில பிரதானமான மூலோபாயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 1.வலையமைப்பையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்பல்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) ஆரம்பத்தில் இருந்தே 'முஸ்லிம் சட்டத்தின் கீழ் வாழும் பெண்கள்' (WLUML) போன்று முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் ஒரே மாதிரியான பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச குழுக்களுடன் இணைந்து கடமையாற்றியது. இது வெவ்வேறு நாடுகளிலுள்ள முஸ்லிம் பெண்கள் தமது அனுபவங்களை பகிரக்கூடிய தன்மையை ஏற்படுத்தியிருந்தது. அலுவலக உறுப்பினர்களின் கருத்துப்படி, இவ்வனுபவங்களின் ஊடாக பல்வகைமைத்துவ சமூகங்களில் முஸ்லிம்கள் வாழ்வதனைக் கருத்தில் கொள்ளும் போது, MWRAF ஆனது "ஒரே வகையான இஸ்லாம் அல்லது முஸ்லிம் உலகம் என்பது ஒரு ஐதீகம்'' என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அத்தோடு இது ஆணாதிக்கக் கட்டுப்பாடு மற்றும் கருத்தியலானது பல்வேறு சந்தர்ப்பங்களையும் ஊடறுத்துச் செல்லுவது மட்டுமன்றி உலகத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் முகங்கொடுக்கும் ஒரே வகையான சமத்துவமற்ற தன்மைக்கும் காரணமாக இருக்கின்றது என்பதனை புரிந்து கொள்ளவும் உதவியது. அதுமட்டுமன்றி இவற்றை நிவர்த்திப்பதற்கான யோசனைகளை அனைவரும் பகிர்ந்து கொள்ளவும் உதவியது.

இஸ்லாமிய சட்டத்தின் கீழ் வாழும் இஸ்லாமிய பெண்கள் (WLUML) அமைப்பினுடனான வலையமைப்பின் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF) உள்நாட்டில் தனது செயற்பாட்டைக் கொண்டு செல்ல மற்றுமொரு கற்றலாக அமைந்த விடயம் அடிப்படையான அல்குர்ஆன் மற்றும் சுன்னா(நபி வழிகள்) மூலங்களிற்கு அப்பால், காலத்திற்கும், நாடுகளதும், சமூகங்களதும் முன்னுரிமையைக் கொண்டும் எத்தனையோ வகையான மாற்றீடான வழிகளில் முஸ்லிம் சட்டமும், சட்டவியலும் பொருள் கோடல் செய்யப்பட்டு அமுலாக்கப்படுகின்றன என்பதாகும். இது இவ்வமைப்பு (MWRAF) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் மீதான செயற்பாட்டு அடிப்படையிலான ஆய்வினை மேற்கொள்வதற்கு உதவியாக இருந்ததோடு, சர்வதேச மற்றும் உள்ளூர் அனுபவங்களிலிருந்து இலங்கையிலுள்ள குடும்பச் சட்டத்தினைத் திருத்துவதற்கான மூலோபாயங்களை நோக்கிப் பயணிக்கவும் உதவியது. இது யதார்த்த சூழல் மற்றும் நியாயமான சிந்தனையை நோக்கி இஸ்லாமிய சட்டவியலில் ''இஜ்திஹாத்''('*ijtihad*')[59] அல்லது ''புலமைசார் காரணங்கள்'' போன்ற எண்ணக்கருக்களின் வகிபங்கு பற்றியும், அவை எவ்வாறு சட்டங்களில் அல்லது சட்ட முறைமைகளில் உள்வாங்கப்படலாம் என்பதற்கான உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தியது.

---

[59] இஜ்திஹாத் நடைமுறையின் போது மனிதக் காரணங்களே திருமணச் சட்டங்களில் பால்நிலை பாரபட்ச பொருள்கோடல்கள் காணப்படுவதற்கான காரணமாக அமைந்திருந்தது. இதன் விளைவாக பெண்களின் நிலைப்பாடு பாதிப்புக்குள்ளாக்கப்பட்டது. இதனால், சமய பிரிவுகளிற்கு உட்பட்ட சட்டவாளர்களின் கருத்துக்களிற்கு அப்பாற் சென்று திருமணச் சட்டத்திற்கு பொருள் கொள்ள வேண்டிய அவசியம் பற்றி வாதிடப்பட்டது. இம்முயற்சி பெண்களிற்கு நபியவர்களின் காலத்தில் வழங்கப்பட்டிருந்த நிலையினை மீளப் பெற்றுக் கொள்ள முக்கியமானதாக இருந்தது. (மூலம்: காண் நூர் எப்ரோல், பெண்கள் மற்றும் சட்டம், ரவாட் வெளியீடு, ஜெய்ப்பூர், நியூடெல்லி, 2003)

சமூக மட்ட வலையமைப்பு மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பலில் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையம் (MWDT) – புத்தளம், மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் (MWDF) – மன்னார், முல்லைத்தீவு மாதர் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு ஒன்றியம் (MWDRF) – முல்லைத்தீவு போன்ற சமூகம் சார் அமைப்புகள் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினுடைய (WAN) அதாவது வடக்கு, கிழக்கிலுள்ள 8 அமைப்புக்களின் கூட்டிணைப்பில் இருக்கின்றன. பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பானது (WAN) தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்களின் போரின்போதான, போரின் பின்னரான காலத்திலான பிரச்சினைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பில் கூட்டு நடவடிக்கையினூடாக எடுத்துக் கூறி அதற்காக செயற்பட்டு வருகின்றது.

பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினால் (WAN) கையாளப்படும் ஒரு விடயமாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் (MMDA) கீழ் பாதிப்புக்குள்ளாகும் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் மீறல்கள் தொடர்பானதாகும். இதனால் காதிகளையும், பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகளையும், கையாள்வதில் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் (MWDT) மேற்கொள்ளும் அணுகுமுறைகளையும், அனுபவங்களையும் முஸ்லிமல்லாத அலுவலகர்களையும், உளவளத்துணை ஆலோசகர்களையும் கொண்டுள்ள மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் (MWDF) போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் கற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில் முஸ்லிம் பெண்களும், தமிழ் பெண்களும் எதிர்கொண்ட போர்ச் சூழலானது முக்கியமாக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவும், நீதிக்கான பொதுக் காரணியாகவும் இருப்பதனை செயற்பாட்டாளர்கள் அவதானித்துள்ளனர். இது முஸ்லிம் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை 'முஸ்லிம்களின் பிரச்சினை' என்றல்லாமல் பெண்களின் உரிமை மீறல் என்ற ரீதியில் நோக்க வைத்திருக்கின்றது.

## 2. அறிவுத் தளமொன்றை உருவாக்கல்

முஸ்லிம் பெண்களுடன் பணிபுரியும் அமைப்புக்கள் இலங்கையில் வாழும் முஸ்லிம் பெண்களின் அனுபவங்களை ஆய்வு செய்து அறிக்கையிடுவதின் முக்கியத்துவத்தை புரிந்துவைத்திருக்கின்றன என்பது மட்டுமன்றி சட்டங்களின் வரலாற்றுப் பரிணாமம், இஸ்லாமிய புலமைத்துவம் என்பவற்றுடன் தனிநபர் மற்றும் சமூக மட்டத்தில் எவ்வாறு சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பவற்றையும் அவதானித்து வருகின்றன. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF) யின் 2001 இற்கும் 2010 இற்கும் இடைப்பட்ட காதிகள் சபை சட்ட அறிக்கையிலிருந்து, ஆராய்ச்சி மற்றும் வலுவூட்டலுக்கான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் (IWARE) சம்பவக்கற்கைத் தொகுப்பு வரை – காதி நீதிமன்ற முறைமையின் மூலம் முஸ்லிம் பெண்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை சிறந்த முறையில் புரிந்துகொள்ள இவ்வெளியீடுகள் உதவியுள்ளன.

முஸ்லிம் குடும்பச் சட்டத் திருத்தங்களிற்காக வாதாடி அவற்றை மாற்றியுள்ள நாடுகளிலுள்ள முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் 'இஸ்லாமிய சட்டகத்தினுள்' இருந்து கொண்டு பால்நிலை சமத்துவம், திருமணம், விவாகரத்து, பெண் தலைமைத்துவம் போன்ற தலைப்புக்களில் மாற்றீடான உரையாடல்களைச் செய்திருக்கிறார்கள். 'இஸ்லாமிய சட்டகம்' எனும் போது அது குர்ஆனிய வசனங்களிற்கு மாற்றீடான பொருள்கோடல்கள் மட்டுமன்றி பிக்ஹ் (இஸ்லாமிய சட்டவியல்) சட்டத்திலுள்ள தெரிவுகள், வெவ்வேறுபட்ட அனைத்து இஸ்லாமிய சிந்தனைகள் (மத்ஹப்) என்பவற்றை ஆய்வு செய்வதும் ஏனைய முஸ்லிம் சூழல்களில் பின்பற்றப்படும் இஸ்லாமிய சட்டவியலை ஒப்பீடு செய்வதும் அடங்கும்.

இலங்கையில் தமிழில் இத்தகைய தலைப்புகளில் வெளியீடுகளில் இருந்த இடைவெளியை இனங்கண்ட பின் இலங்கையின் அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் சங்கம் (SDJF) 2015 இல் வணக்க வழிபாடுகள், திருமணம், விவாகரத்து, பலதாரமணம், கல்வி மற்றும் பொருளாதாரம், பெண்களின் சாட்சியம், நெருங்கிய துணையின் மீதான வன்முறை மற்றும் முஸ்லிம் விவாக

மற்றும் விவாகரத்துச் சட்டம் ஆகிய தலைப்புகளை உள்ளடக்கி இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் என்ற இரண்டு வெளியீடுகளைக் கொண்டு வந்தது.

இவ்விரு வெளியீடுகளும் இஸ்லாமிய சட்டம் பற்றிய பிழையான எண்ணக்கருக்களை அகற்றவும் சமுதாயத்தை பாதிக்கும் பால்நிலை சார்ந்த பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவும் உதவியுள்ளன. மார்க்க நிலைப்பாட்டிலிருந்து கொண்டு சமுதாயத்தை கலந்துரையாடலில் ஈடுபடுத்துவதற்கு இவ்வெளியீடுகள் சிறந்த பயனுள்ள கருவியாக இருக்கின்றன. ஆராய்ச்சி மற்றும் வலுவூட்டலுக்கான இஸ்லாமிய பெண்கள் ஒன்றிம் (IWARE) போன்ற அமைப்புக்கள் இஸ்லாமிய பெண்கள் கல்வி கற்கும் வட்டங்களில் இவ்வெளியீடுகளை பயன்படுத்த ஆரம்பித்திருப்பதோடு, ஒவ்வொரு தலைப்பினையும் கலந்துரையாடலிற்கான விடயமாக தெரிவு செய்து ஆழமான கலந்துரையாடல்களில் ஈடுபடச் செய்வதோடு அல்குர்ஆன், சுன்னா அடிப்படையில் வேறுபட்ட பொருள்கோடல்களைப் புரிந்து கொள்வதன் மூலம் அவை பெண்களில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுகின்றனர்.

### 3. பெண்களுக்கான ஆதரவளிக்கும் சேவைகள் மற்றும் அவர்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்

பெண்கள் அமைப்புகள், சமுதாய மட்டத்தில் தமது பணிகளின் ஊடாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய சட்ட ஆலோசனை வழங்குமளவு சமூக மட்டத்திலுள்ள பெண்களுக்கு சட்டம் பற்றிய அறிவை வழங்கி அவர்களது திறன்களை கட்டியெழுப்புகின்றன. வழக்குகளிற்கான வசதிப்படுத்தல், காதிகள் சபைக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கும் மேன்முறையீடுகளை (உ+ம்: அமுலாக்கற் கட்டளைகள்) பெண்கள் முன்னெடுப்பதற்கான உதவிகளை வழங்குவதன் மூலம் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணியானது (MWRAF) தமது வேலைத் திட்டத்தில் சட்டத்துக்கென்ற பிரிவொன்றையும் ஸ்தாபித்தது.

புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக மட்டத்தில் பெண்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய அறிவினையும், காதிநீதிமன்ற நடைமுறையினையும் பற்றிய அறிவை விருத்தி செய்வதன் ஊடாக அவர்களது திறன்களை விருத்தி செய்ய முறையே முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையம் (MWDT) மற்றும் இஸ்லாமிய பெண்கள் ஆராய்ச்சி மற்றும் வலுவூட்டல் ஒன்றியம் (IWARE) ஆகியன பணியாற்றி வருகின்றன. இப்பெண்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பெண்களிற்கு ஆலோசனைகளையும், முக்கிய சட்டத் தகவல்களை வழங்கக் கூடியவர்களாக உள்ளனர். சத்தியக் கடதாசி போன்ற ஆவணங்களை தயாரித்தும், காதி நீதிமன்றங்களிற்கு பெண்களுடன் துணையாக சென்றும், காதி நீதிமன்ற வழக்குகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்பில் தொடர் கண்காணிப்பினை செய்தும் இப்பெண்கள் உதவுகின்றனர். அனைத்திற்கும் மேலாக பெண்களிற்கான அமைப்புக்கள் நாடு முழுவதிலுமுள்ள நூற்றுக்கணக்கான பெண்களுக்கு தமது ஆதரவையும், உதவியையும் வழங்கியுள்ளன. இது தனிப்பட்ட அவசரநிலையின் போதான உதவி வழங்கல், உளவியல் ரீதியாக வலுப்படுத்தல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பல் என்பவற்றோடு காதி நீதிமன்ற செயற்பாடுகளின் போது அவர்களுடன் சென்று உதவிகளை வழங்குவதையும் உள்ளடக்குகிறது.

### 4. தற்போதுள்ள காதி நீதிமன்ற செயற்பாடுகளை வலுப்படுத்தும் திட்டங்கள்

பெண்கள் அமைப்புக்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், அதன் நடபடி தொடர்பாக பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக காதிகளுடன் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றன. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF) 2011இல் காதிகளுக்கான பயிற்சி தொடர்பாகவும், காதிகளுக்கான ஒழுக்கக் கோவை என்பவற்றை[60] வெளியிட்டுள்ளது.

காலப்போக்கில், புத்தளம், மட்டக்களப்பு, மன்னார் போன்ற மாவட்டங்களிலுள்ள சமூக மட்டத்தில் வேலை செய்யும் பெண்கள் அமைப்புகள் சமூகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. புத்தளத்தில் காதி நீதிமன்றத்தை அணுகுவதற்காக குறிப்பிடத்தக்க முயற்சிகள்

---

60 காதி பயிற்சிக்கான தொகுப்பு, 2011. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி(MWRAF)

நீண்ட காலமாக எடுக்கப்பட்டதன் அடிப்படையில் சில காதிகள் வழக்குகளின் போது, குறிப்பாக பெண்ணுக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பெண் உளவளத் துணை ஆலோசகர்கள் மற்றும் சில தன்னார்வத் தொண்டர்களை அனுமதித்திருந்தனர். இவ்வாறான பெண்களின் ஆதரவுடன் செல்லும்போது காதி நீதிமன்றத்தை அணுகும் பெண்கள் தாம் வேறுவிதமாக நடத்தப்படுவதனை அவதானித்திருக்கின்றனர்.

புத்தளம், மட்டக்களப்பு, மன்னார் போன்ற பிரதேசங்களில் உள்ளூர் பெண்கள் அமைப்பில் முஸ்லிம் சட்டம் தொடர்பில் பயிற்சி பெற்ற முஸ்லிம் பெண் தொண்டர்கள், உளவள ஆலோசகர்கள் வழக்கு நடவடிக்கையில் உதவி செய்து தரும்படியும், தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பெண்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுத் தரும்படியும் சில காதிகளாலேயே அழைக்கப்பட்டும் இருக்கின்றனர். குறிப்பிட்ட நிகழ்வுகளின் போது காதி, தொண்டர்களிடமிருந்தும் ஆலோசகர்களிடமிருந்தும் குறிப்பிட்ட வழக்குகள் தொடர்பாக, உதாரணமாக பராமரிப்பிற்கான நியாயமான தொகை போன்றன தொடர்பாக அவர்களின் கருத்துக்களையும் கேட்பதுண்டு. முஸ்லிம் பெண்கள் இவ்வமைப்புக்களினால் பயிற்றப்பட்டிருப்பதினால் அவர்கள் காதிகளாவதற்கான அறிவு, திறன் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்கின்றனர். ஆயின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள பால்நிலை பற்றிய ஏற்பாடே இவர்களுக்குத் தடையாக உள்ளது.

*முஸ்லிம் சட்டம் தொடர்பான எனது அறிவின் மீதிருக்கும் மரியாதை, நம்பிக்கையும் மற்றும் காதி நீதிமன்றங்களில் முஸ்லிம் பெண்களிற்கு உதவி செய்யும் என் நேர்மையான பணியின் காரணமாகவும், பல சமுதாய உறுப்பினர்களும், சில பள்ளிவாசல் சபை உறுப்பினர்களும் கூட நான் ஒரு காதியாக வருவதை ஆதரிக்கின்றனர். எவ்வாறிருப்பினும், சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள வரையறையின் காரணமாக அவர்கள் ஒரு யோசனையை முன்வைத்திருந்தனர். அதாவது எனது கணவரை இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் படியும் அனைத்து தீர்மானம் எடுத்தலிலும், தீர்ப்பு வழங்கலிலும் என்னை அவரிற்கு உறுதுணையாக இருக்கும் படி கூறினர். இது மிகவும் நியாயமற்ற ஒரு சூழல்.*

*- ஜுவைரியா மொஹிதீன், ஸ்தாபகர், MWDT, புத்தளம்*

### 5. வாதாடுபவர்களாயும், ஆதரவாளர்களாயும் முஸ்லிம் ஆண்கள்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தை நோக்கிய செயல்வாதம் அடிப்படையில் முஸ்லிம் பெண்களினாலேயே முன்னெடுக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், சட்டத் திருத்த நடவடிக்கைகளில் காதிகள் உள்ளடங்கலாக முஸ்லிம் ஆண்களும் பங்களிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருந்தது. காலப்போக்கில் செல்வாக்குள்ள ஆண்களான முன்னாள் வழக்கறிஞர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ ஜப்பார், நீதியரசர் சலீம் மர்ஸூப், நீதியரசர் ஏ.எம்.முஹமட் மக்கி போன்றோர் தமது சட்ட நிபுணத்துவத்தின் மூலம் ஈடுபட்டிருந்தனர். மேலும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், அதன் நடபடி தொடர்பான திருத்தம் பற்றிய உரையாடல், ஆய்வுகள், பரிந்துபேசல் என்பவற்றிற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் சங்கம் (SDJF) போன்ற ஏனைய ஊடகங்கள் பிரதான தமிழ் ஊடகங்களில், வானொலி நாடகங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகை ஆக்கங்கள் என்பவற்றின் ஊடாக முக்கியமான தலைப்புகளில் குறிப்பாக விவாகரத்து மற்றும் பலதாரமணத்தின் விளைவாக எழும் சிக்கல்கள் பற்றிய கலந்துரையாடல்களை ஆரம்பிக்க முயற்சி செய்தன. இதற்கு முன்னர் நடந்திராதபடி, முஸ்லிம் சமூகத்தில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சொல்லிக் கொள்ளுமளவு கலந்துரையாடல் ஒன்றினை எடுத்துச் செல்ல இது உதவியது. இம்முயற்சிகள் இது தொடர்பாக முஸ்லிம்களிடம் இருக்கும் பல்வேறுபட்ட வினாக்களையும், தவறான கருத்துக்களை அறியவும், குறிப்பாக மதத் தலைவர்கள் மற்றும் குழுக்களிடமுள்ள கண்ணோட்டத்தையும், அதன் விளைவுகளையும் அளவிடுவதற்கும் இலங்கையின் அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் சங்கம் (SDJF) போன்ற அமைப்புக்களிற்கு இம்முயற்சி பெருந்துணையாக இருந்தது.

## 6. வாதாடுபவர்களாயும், ஆதரவளிப்பவர்களாயும் முஸ்லிமல்லாத பெண்கள்

“நான் ஒரு முஸ்லிமல்ல என்பது என் வேலையைப் பாதிப்பதில்லை. எங்கள் அணியிலுள்ள அனைவரும் இதனை பெண்களின் பிரச்சினைகளாகக் கருதுகின்றனரே தவிர எவருமே முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளை ‘முஸ்லிமல்லாத கண்ணோட்டத்துடன்’ அணுகாமல் பெண்கள் உரிமைகள் என்ற கண்ணோட்டத்துடனேயே நோக்குகின்றனர். காதி கூட எங்களது பணியை மரியாதைப்படுத்துகின்றார்.”

-குருசாந்தன் மகாலக்ஷ்மி, ஒருங்கிணைப்பாளர், MWDF மன்னார்

முஸ்லிம் பெண்களின் காதி நீதிமன்ற விடயங்களில் செயற்பட ஆர்வம் காட்டும் முஸ்லிமல்லாத தனிப்பட்டவர்களும், அமைப்புக்களும் சொற்ப அளவாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டது. இது முக்கியமாக போருக்குப் பிந்திய மன்னார், மட்டக்களப்பு மற்றும் வவுனியா போன்ற இடங்களின் யதார்த்த நிலையாகும். குடும்பம் மற்றும் சமுதாயத்துடன் தொடர்புபட்ட முஸ்லிம் பெண்களின் விடயங்கள் ‘முஸ்லிம்களின் பிரச்சினைகளாக’ அன்றி ‘பெண்களின் பிரச்சினைகளாகவே’ கருத்தில் கொள்ளப்பட்டன. தாமாக முன்வந்து உணர்ந்து கொள்ளவும், பணியாற்றவும் விரும்பும் முஸ்லிமல்லாத அமைப்புகளதும், ஆதரவாளர்களதும் நேர்மறையான தாக்கத்தை சித்தரிக்கும் அமைப்பிற்கு உதாரணமாக மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தைக் ((MWDF ) குறிப்பிடலாம். அது மட்டுமன்றி இவர்கள் கலாச்சாரத்துடன் தொடர்புடைய நிலைப்பாட்டில் இருந்து விலகி பெண்களிற்கான நலனில் அக்கறை செலுத்தும் அணுகுமுறையிலேயே செயற்பட்டும் வருகின்றனர்.

உதாரணமாக மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் (MWDF) ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் அப்பகுதியில் வாழும் முஸ்லிம் பெண்களிடமிருந்து முறைப்படுகளையும், உதவிக்கான கோரிக்கைகளையும் பெற்றது. மேலும் புத்தளம், முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையம் (MWDT) போன்ற சகோதர அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் (MMDA) பற்றிய தேவையான அறிவையும், தகவல்களையும் பெற்றதோடு முஸ்லிம் பெண்களின் வழக்குகளில் உதவவும் ஆரம்பித்தது. இதே போன்று முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் (MWDT), இஸ்லாமிய பெண்கள் ஆராய்ச்சி மற்றும் வலுவூட்டல் ஒன்றியம் (IWARE), போன்று மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் (MWDF) ஊழியர்களும், ஆலோசனைகள் வழங்கல், அவசரத்தின் போதான உதவி வழங்கல் உள்ளடங்களாக காதி நீதிமன்றத்திற்கு துணையாக செல்லுதல் மற்றும் தீர்ப்பினை பின்பற்றல் போன்ற உதவிகளை முஸ்லிம் பெண்களிற்கு வழங்குகின்றனர். பெண்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டோ அல்லது நியாயமற்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டோ இருப்பின் அதற்கெதிராக முறைப்படுகளை மேற்கொள்ளவும் இந்நிறுவனம் பல சந்தர்ப்பங்களில் துணை நின்றுள்ளது.

இதே போன்று மட்டக்களப்பினை அடித்தளமாகக் கொண்டியங்கும் நன்கு விஸ்தரிக்கப்பட்ட அமைப்பாகிய சூர்யா பெண்களிற்கான அபிவிருத்தி நிலையம்[61] முஸ்லிம் பெண்களின் விடயங்களை பெண்களிற்கான உரிமை விடயங்களாக அணுகுவதோடு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழான குறிப்பிடத்தக்க வழக்குகளில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF) போன்ற அமைப்புக்களோடு நெருங்கி செயற்பட்டு வந்திருக்கின்றது. சமூகத்துகள் இடம்பெறும் வன்முறைகள் பற்றிய தமது கரிசனையை வெளிப்படுத்துவதில் (எதிர்விளைவுகளின் அச்சம் காரணமாக) முஸ்லிம் பெண்கள் சிரமங்களை எதிர்கொள்வதனை சூர்யாவினுடைய முகாமையாளர் அவதானித்திருப்பதுடன் இது போன்ற வழக்குகளை கையாளும்படி இவர்கள் சூர்யா அமைப்பை நாடியிருப்பதுடன், இவ் வழக்குகளை இந்நிறுவனம் ஈடுபாட்டுடன் கையாண்டிருக்கின்றது.

61 சூர்யா பெண்களிற்கான அபிவிருத்தி நிலையம். வலைப்பின்னல் http://suriyawomen.org/about/

## 7. முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினை நோக்கிய திட்டவட்டமான செயற்பாடுகள்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திருத்த நடவடிக்கைகளில் MWRAF போன்ற அமைப்புக்கள் பல வருடங்களிற்கு மேலாக கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தன. அத்துடன் 1990ம் ஆண்டின் முஸ்லிம் குடும்பச் சட்டத் திருத்தக்குழுவிலும், 2009இன் நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான திருத்தக் குழுவிலும் இவ்வமைப்பின் இரு உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். MWRAF அங்கத்தவர்கள் இந்தக் குழுவிற்கு சாட்சியங்களையும், அறிக்கைகளையும் வழங்கியதுடன் அந்தந்த குழுவிற்கு தகவல்களையும், வளங்களையும் கூட வழங்கியிருந்தனர். திருத்தங்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் எதுவித செயற்பாடுகளும் இடம் பெறாமையினால் மக்கள் முயற்சியோடு 2005 இல் MWRAF முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்திற்கென சுயாதீனக் குழு (Independent Committee for Muslim Personal Law Reforms - ICMPLR) ஒன்றினை ஸ்தாபித்தது. இது அரசால் 1990 இல் உருவாக்கப்பட்ட டாக்டர். ஷகாப்தீனினால் தலைமையேற்கப்பட்டு "ஷகாப்தீன் குழு"என்றழைக்கப்பட்டு, திருத்தப் பரிந்துரைகளை முன்மொழிந்த குழுவினைப் பின்பற்றி இருந்தது. முஸ்லிம் தனியார் சட்டத்திருத்தத்திற்கான சுயாதீனக் குழு (ICMPLR) பலதரப்பட்ட பகுதியினருடன் பரந்த ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், சட்டத் திருத்தம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றினையும் தயாரித்திருந்ததாகவும் MWRAF குறிப்பிட்டது.[62] மேலும் MWRAF இன் கருத்துப்படி 2009 இல் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு தொடக்க ஆவணமாக பங்களிப்பு செய்ததுடன் முன்னோடியாக இருந்ததும் இவ்வறிக்கையேயாகும்.

சட்டத்திருத்தங்களின் ஆரம்ப முயற்சி 1954 இல் இருந்து தொடங்கப்பட்டதாயினும் 1980 களின் நடுப்பகுதியிலேயே திருத்த நடைமுறைகள் குறிப்பிட்டுச் சொல்லும் படியான கணிசமான வேகத்தை பெற்றிருந்தது. பல ஆண்டுகளிற்கு மேலாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் வெவ்வேறு அம்சங்கள் வெவ்வேறு குழுக்களினால் திருத்தங்களிற்காக குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. எவ்வாறிருப்பினும் குறிப்பான ஏற்பாடுகள் MWRAF இனால் பரிந்துரைக்கப்பட்டது. இவ்வமைப்பு 1984 இலிருந்து ஆலோசனையளித்து வருவதுடன் மிகத் தீவிரமாக சட்டத்திருத்தத்திற்காக இயங்கும் அமைப்பாகும். ஆயினும் 2011 இலிருந்து ஏனைய சமூகம் சார் அமைப்புக்கள் மேலதிக ஏற்பாடுகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்பதை தெளிவாக புலப்படுத்திருந்தன. பெண்கள் செயற்பாட்டு வலைமைப்பு (WAN) போன்ற குழுக்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின்[63] திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதிற்கான அதிகார எல்லையை நீக்கவும், முஸ்லிம்கள் உள்ளடங்களாக அனைத்து பிரஜைகளிற்குமான திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது 18 ஆக இருக்க வேண்டுமெனவும் பரிந்துரைக்கின்றன.

2016 பெப்ரவரியில் வடக்கு, கிழக்கு மற்றும் புத்தளத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் அரசியலமைப்புத் திருத்தத்திற்கான மாவட்ட மட்ட மக்கள் பிரதிநிதித்துவ குழுவின் முன் சமூகமளித்து அரசியலமைப்புத் திருத்தத்தின் போது அரசியலமைப்பிலிருந்து உறுப்புரை 16(1)இனை நீக்கக் கோரியிருந்தனர். இதற்கான காரணம் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் கீழ் பாரபட்சம் காட்டப்படாதிருத்தல், சமத்துவம் என்பவை காணப்பட்டாலும் அதனுடன் தெளிவாக முரண்படுகின்ற முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது வலுவுடையதாகவும் அமுலிலும் இருக்கின்றமையாகும்.

அண்மையில் குறிப்பாக அரசியலமைப்பு சீர்திருத்த நடைமுறைகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த செயற்பாட்டுக் குழு (Muslim Personal Law Reforms Action Group -MPLRAG)[64] போன்ற முஸ்லிம் பெண் ஆர்வலர்களை கொண்ட

---

62 எப்.ஸக்கரியா, சி. கொடிகார 2011. பெண்கள் கோரும் உரிமைகளும் தளமும்: இலங்கையில் முஸ்லிம் சட்டத்தை திருத்துவதற்கான செயல்வாதம். இஸ்லாமிய பெண்களிற்கான ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF). கொழும்பு, இலங்கை

63 பெண்கள் செயற்பாட்டு வலைமைப்பு, ஏப்ரல் 2016 அறிக்கை: இலங்கையின் பழைமை வாய்ந்த ஆகக் குறைந்த வயது முஸ்லிம் திருமணச் சட்டத்தை நீக்குக. WAN, கொழும்புத் தந்தி., செய்திக் கதைகள். https://www.colombotelegraph.com/index.php/scrap-sri-lankas-archaic-underage-muslim-marriage-law-wan/?platform=hootsuite

64 முஸ்லிம் தனியார் சட்ட திருத்த செயற்பாட்டு குழு (MPLRAG) www.mplreforms.com

திருத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் புதிய தலைமுறை தோற்றம் பெற்றுள்ளது. இத்தகைய குழுக்கள் திருத்தத்திற்கான வழமையான அழைப்பிற்கு அப்பால் சென்று, இலங்கையின் அனைத்து பிரஜைகளிற்கும் அமைவாக சமத்துவத்தையும், பாரபட்சமின்மையையும் உறுதிப்படுத்தும் வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தைத் திருத்த பரிந்துரைக்கின்றது.

இந்த ஆய்வின் இறுதிக் கட்டத்தின் போது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் மற்றும் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் பற்றிய கலந்துரையாடல் பிரதான கலந்துரையாடலில் இடம் பெறுகின்றதையும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திருத்தத்திற்கு ஆதரவும், அரசியலமைப்பு ரீதியாக முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளிற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கான ஆதரவும் முஸ்லிம் சமூகத்துக்குள்ளும், வெளியிலும் இருந்து அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## பகுதி 3: முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தைத் திருத்துவதில் உள்ள தடைகளும், சவால்களும்

# PART 3:
# Barriers and challenges to reform of MMDA

## திருத்தங்களிற்கான போராட்டம்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் நடைமுறைக்கு வந்த செயற்பாடு, அதன் பின்னர் நடபடியில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் என்பன முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன[65]. குறிப்பிடத்தக்க ஒரு திருத்தமானது 1964ம்[66] ஆண்டில் கொண்டுவரப்பட்ட, காதிகளின் நியமனம் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடம்பெறவேண்டும் என்பதாகும். 1956 இலிருந்து பல குழுக்கள் வழக்காற்றுச் சட்டங்களைத் திருத்துவதற்காகவும், அனைவருக்குமான பொது சிவில் கோவை ஒன்றிற்கான சாத்தியப்பாட்டை நோக்குவதற்காகவும் அமைக்கப்பட்டபோதும் முஸ்லிம் சமூகத்திடம் இருந்து பலத்த எதிர்ப்பை எதிர்கொண்டன. பின்னர் விசேடமாக முஸ்லிம் குடும்ப சட்டத் திருத்தங்கள் தொடர்பில் பல குழுக்கள் உருவாக்கப்பட்டன. அவையாவன,

1. 1970 இல் - டாக்டர். H.M.Z. பாரூக்கினால் தலைமை தாங்கப்பட்ட குழு. இது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் நடபடி தொடர்பிலும், திருமணத்திற்கான[67] ஆகக் குறைந்த வயதெல்லையை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளையும் வழங்கியிருந்தது.
2. 1984 இல் - ஒரு குழு உருவாக்கப்பட்டு திடமான ஒரு முன்னேற்றம் இன்மையால் கலைக்கப்பட்டது.
3. 1990 இல் - டாக்டர். A.M.M. ஷஹாப்தீன் அவர்களினால் உருவாக்கப்பட்டு, தலைமையேற்கப்பட்ட குழு இரண்டு வருடங்களிற்குள் அறிக்கையினை தயாரித்து அரசிடம் ஒப்படைத்தது என்ற வகையில் இன்றைக்கு வரைக்கும் வெற்றிகரமான ஒரு குழுவாக காணப்படுகின்றது. எவ்வாறெனினும் துரதிஸ்டவசமாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தமானது முஸ்லிம் தலைவர்களிற்கோ, அரசிற்கோ அரசியல் முக்கியத்துவமிக்கதாக காணப்படாததால் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வறிக்கையானது சட்டமாக நிறைவேறாமல் நிறைவிற்கு வந்தது.
4. 2009 இல் - முஸ்லிம் குடும்ப சட்டத் திருத்தத்துக்கான 18 உறுப்பினர்களைக் கொண்ட குழு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சலீம் மர்சூப் அவர்களின் தலைமையில் அப்போதிருந்த நீதி அமைச்சரினால்[68] உருவாக்கப்பட்டது.

2009 குழு இன்றளவும் தொடர்ந்தும் செயற்பாட்டிலுள்ளது. இந்த ஆய்வினை எழுதும் போது இக்குழு தனது அறிக்கையினை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் பல்வேறு ஊடக அறிக்கைகள் இக்குழு தனது அறிக்கையை முற்றுப்படுத்தும் என 2016 இல் பல்வேறு திகதிகளை[69] காலாகாலத்துக்கும் வெளியிட்டு வந்தன. அண்மையில் பலதரப்பட்ட குழுக்களால் வழங்கப்பட்ட அழுத்தங்களினை உணர்ந்த இக்குழு, தனது இறுதி அறிக்கையினையும், பரிந்துரைகளையும் சமர்ப்பிக்க நவம்பர் 2016[70] இல் தயாராக உள்ளதாக தெரிவித்தது.

அதே நேரம் இந்த ஆய்வினை இறுதிப்படுத்தும் போது, இன்னுமோர் அமைச்சரவை உபகுழு[71] தற்போதைய நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கபிர் காசிம் (பொது முயற்சி அபிவிருத்தி அமைச்சர்), ரவூப் ஹக்கீம் (நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அமைச்சர்), ரிஷாத் பதியுதீன் (தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்), பைசர் முஸ்தபா (மாகாண மற்றும் உள்ளூராட்சி

---

65 எப்.ஸக்கரியா, சி. கொடிகார 2011. பெண்கள் கோரும் உரிமைகளும் தளமும்: இலங்கையில் முஸ்லிம் சட்டத்தை திருத்துவதற்கான செயல்வாதம். முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு முன்னணி (MWRAF). கொழும்பு, இலங்கை

66 1965 இன் 1 இலக்க சட்டம்

67 S.குணசேகர, 2000. *இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டம்* - குடும்ப உறவுகளில் சட்டத்தின் சில அம்சங்கள். முஸ்லிம் பெண்களிற்கான ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு அமைப்பு (MWRAF). கொழும்பு, இலங்கை

68 கட்டுரை – *சட்டசபை, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தம், காதி முறையை மேம்படுத்தும் திட்ட முன்மொழிவையும் அங்கீகரித்தது.*

69 Muslim law reforms to be finalized http://nation.lk/online/2016/07/02/muslim-law-reforms-report-finalized.html

70 இம்தியாஸ், சஹ்ரா *நவம்பரில் இஸ்லாமிய தனிப்பட்ட சட்ட சீர்திருத்தத்திற்கு நீண்டநாள் காத்திருப்பு.* Daily News, October 4. 2016 http://www.dailynews.lk/2016-10-03-193000/local/94818

71 இம்தியாஸ், சஹ்ரா,. *இஸ்லாமிய திருமண சட்டத்திற்காக உப குழு நியமிக்கப்பட்டது.* **Daily News October 27, 2016** **http://dailynews.lk/2016/10/27/local/97245#**

அமைச்சர்), M.H.M. ஹலீம் (இஸ்லாமிய விவகார மற்றும் தபால் சேவைகள் அமைச்சர்), சந்திராணி பண்டார (பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்) மற்றும் டாக்டர். சுதர்சினி பெர்ணான்டோ புள்ளே (நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பிரதியமைச்சர்) ஆகியோர் உள்ளடங்குவர். இக்கட்டத்தில் இக்குழுவின் ஆணை பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. மேலும், இக்குழு நீதிபதி சலீம் மர்சூப் குழுவினால் நிலுவையிலுள்ள அறிக்கை பற்றி அக்கறை கொள்ளுமா அல்லது புதிதாக ஆரம்பித்து புதிய பிரதிநிதித்துவங்களிற்கு அழைப்பு விடுக்குமா என தெளிவில்லாமல் உள்ளது.

**திருத்தத்திற்கான தடைகளும், சவால்களும்**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பாக புரிந்து கொண்ட விடயம், சட்டம் மற்றும் மார்க்க விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதாகும். இதுவே சட்டத்திருத்த நடைமுறையை சிக்கலானதாகவும், கடினமானதாகவும் ஆக்குகின்றது. எவ்வாறிருப்பினும் பல துறைகளிலான வல்லுனர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளபோதும் இலங்கையின் சூழலில் மேலதிகமான தடைகளும், சவால்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த ஆய்வினூடாக அடையாளம் காணப்பட்ட பிரதான காரணங்கள் பின்வருமாறு,

**1.அரசு: தலைமைத்துவக் குறைபாடும், பொறுப்புக்கூறலை மீறலும்**

இலங்கை அரசாங்கம் அதனுடன் தொடர்புடைய அமைச்சுக்களுடனும் முகவர்களுடனும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்துடன் தொடர்புடைய விடயங்களை முன்னெடுப்பது பற்றி சிறியளவிலான முயற்சிகளையே மேற்கொண்டுள்ளதுடன் இச்சட்டத்தின் விளைவாக முஸ்லிம் பெண்களும், சிறுவர்களும் முகங்கொடுக்கும் விடயங்கள் பற்றி பெரும்பாலும் அலட்சியத்துடன் இருக்கின்றது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான கரிசனைகள், விசேடமாக திருமண வயது, விவாகரத்து, குற்றவியல் கோவையிலுள்ள நியதிச்சட்ட பாலியல் வல்லுறவு தொடர்பான ஏற்பாடு போன்றவை தொடர்பில் இலங்கை சிவில் சமூக அமைப்புக்களினால் சீடோ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிழல் அறிக்கையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், அரசு திருத்தத்திற்கான பொறுப்பினை மீளவும் முஸ்லிம் சமூகத்தின் மீது சுமத்தி விட்டு பேசாதிருந்தது. உதாரணமாக, சீடோ குழுவிற்கான இலங்கையில் இது தொடர்பான விடயங்கள் அடங்கிய மூன்றாம் மற்றும் நான்காம் இணைந்த அறிக்கை, தனிப்பட்ட சட்டங்களில் பாகுபாடுகள் இருப்பதனை ஒப்புக் கொண்டதோடு, எவ்வாறிருப்பினும் *''பாகுபாட்டு அம்சங்கள் கலாசார மற்றும் சமய நம்பிக்கைகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மத பன்மைவாத மற்றும் இன நம்பிக்கைகளின் உணர்திறன் அழைப்பு விடுக்கும் சூழலில், இந்த விடயங்களை முன்னெடுப்பதில் சாத்தியமில்லை. பாதிக்கப்பட்ட சமுதாயங்களிற்கிடையில் மாற்றத்திற்காக அழைப்பு விடுக்கும் போது அது கண்டிப்பாக சீர்திருத்தத்திற்காக வசதிப்படுத்தும்''*[72] என குறிப்பிடும் சட்டத்திற்கு பொறுப்பெடுக்காமல் அரச கடமையிலிருந்தும் பின்வாங்குகின்றது.

கடந்த பல தசாப்தங்களாக முஸ்லிம் சமூகத்துக்குள்ளிருந்து திருத்தத்திற்காக குரல்கள் எழுப்பப்பட்ட போதிலும், வழமையாக தாம் சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக உரிமை கோரும் பழமைவாதம் பேசும் அல்லது இஸ்லாமிய கண்ணோட்டம் பற்றி வாதிடும் ஆண் இடைத்தரகர்களிற்கு அப்பால் யாரிடமும் பேச அரசு தயங்கி வந்திருக்கிறது. முஸ்லிம் பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கான தீர்வுகளுடன் வரும்படியும், திருத்தம் பற்றிய ஒருமித்த கருத்தை கட்டியெழுப்பும் படியும் அரச தரப்பினர் பொறுப்பினை முஸ்லிம் சமூகத்திடமே விட்டுவிட்டனர். இஸ்லாமிய சட்டவியல் மற்றும் பொது மக்கள் அபிப்பிராயம் தொடர்பில் முஸ்லிம் சமூகத்திற்கிடையிலான வேறுபட்ட கருத்துக்கள் அரசால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

---

72 CEDAW/C/LKA/3-4. பெண்களிற்கெதிரான பாகுபாட்டினை ஒழிப்பதற்கான குழு (CEDAW) 1999, 18ஆம் சரத்தின் கீழ் அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை பரிசீலனை செய்யும் பெண்களிற்கெதிரான பாகுபாட்டிற்கான அனைத்து படிவங்களிற்குமான மாநாடு. http://www.un.org/womenwatch/daw/cedaw/cedaw26/lka3-4.pdf)

இது பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள் அல்லது மனித உரிமைகள் என்பன தொடர்பிலான தேசிய செயற் திட்டங்களிலிருந்து முஸ்லிம் பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை மிக சௌகரியமாக அரச பிரதிநிதிகள் விலக்களித்துள்ளமையையே சுட்டிக் காட்டுகின்றது. சமூகக் குழுக்களினால் பெண்களிற்கு எதிராக வன்முறைகள் இழைக்கப்படும் போது சட்ட அமுலாக்கல் மற்றும் உள்ளூர் அரச முகவர்கள் அவற்றுக்கு எதிராக தமது பார்வையைத் திருப்பிக் கொள்கின்றனர். குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை போன்ற பொதுச் சட்டங்கள் 16 வயதிற்குக் குறைந்த முஸ்லிம் பெண்கள் நியதிச்சட்ட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதற்கு விதிவிலக்குகளை கொண்டிருக்கின்றதுடன் வேறும் பல உதாரணங்களுக்கு மத்தியில் இலங்கை முஸ்லிம் பிரசைகளுக்கு மட்டும் சட்டரீதியாக சிறுவர் திருமணங்களை அனுமதித்துள்ளது.

அதே நேரம், நீதியமைச்சு, முஸ்லிம் விவகார அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, பெண்களிற்கான தேசிய ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பெண்களிற்கான பாராளுமன்ற உட்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய அரச துறைகள் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு கூட, முஸ்லிம் பெண்களை நீதி மற்றும் சட்டரீதியாகப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பான போதிய விழிப்புணர்வு இருக்கின்றதா என்பதும் தெளிவில்லாமல் உள்ளது. அரச மேற்பார்வை உள்ளடங்களாக கண்காணிப்பு, அத்தியாவசியமான அறிக்கையிடல்கள், முறைப்பாடுகளிற்கு ஏற்ப கடுமையான தண்டனைகள் போதாமை காரணமாக காதி நீதிமன்ற மட்டங்களில் பல கடுமையான வன்முறைகள் இடம்பெற அனுமதிக்கப்பட்டுள்ளமை நிச்சயமான உண்மை. காதிகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக, இவை காதிகள் சபையினால் அனுப்பப்பட்டவையாக இருப்பினும் கூட, இடமாற்றம் வழங்கல் அல்லது சேவையை முடிவுறுத்தல் என்பவற்றுக்கு அப்பால் (உதாரணமாக: இலஞ்ச வழக்குகள்) எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது தொடர்பில் தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது.

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச மட்டத்திலான அழைப்பைக் கூட அரசு புறக்கணித்துள்ளது. உதாரணத்திற்காக 2010 நவம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச குழுவின் 54ஆவது கூட்டத் தொடரின் பகுதியின் போது முஸ்லிம் குடும்ப சட்டத்திருத்தம் தொடர்பான நடவடிக்கையினை எடுப்பதற்கு இலங்கை அரசிற்கு விடுக்கப்பட்ட அழைப்பினை அண்மைய உதாரணமாக காட்டலாம். பொருளாதார, சமூக மற்றம் கலாசார உரிமைகளிற்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 16 மற்றும் 17 இன் கீழ் அரச தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் கருத்திற்கு, குழு உறுதியான இறுதியான அவதானிப்புகளை[73] மேற்கொண்டது.

குறிப்பாக குழுவினால் கூறப்பட்ட முக்கிய அம்சம் யாதெனில், இலங்கை அரசு உடனடி பொறுப்பினை ஏற்று பெண்களிற்கான சமத்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், அதற்காக **"அவர்களின் சட்டத்தை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட சமூகத்திடம் அவர்களின் சம்மதம் பெறப்படல் வேண்டும் என்ற நிபந்தனைகளை விதிக்கக் கூடாது"** என்றும் தெரிவித்துள்ளது. இந்த இறுதி அவதானிப்புகள் மனித உரிமைகள் சபையின் செயற்பாட்டுக் குழுவின் 14 ஆவது அமர்வில் இலங்கை[74] மீதான உலகளாவிய காலமுறை மீளாய்வில், 2012 ஆகஸ்ட் இல் குறிப்பிடப்பட்டது. அது பின்வருமாறு:

> 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் 12 வயதினையுடைய இளம் சிறுமிகள் திருமணத்தினை அனுமதிக்கும் முஸ்லிம் தனியார் சட்டம் போன்ற பெண்கள் மற்றும் சிறுமிகளிற்கு எதிரான பாகுபாட்டினை கொண்டுள்ள நியதிச்சட்டங்ளையும், தனியார் சட்டங்களையும் நீக்கும்படியும், 1998 இலிருந்து உடன்படிக்கைகளின் கீழான அமைப்புக்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் இன்றளவும் அரசால் கவனத்தில் கொள்ளப்படாமையையிட்டும்,

[73] E/C.12/LKA/CO/2-4. இலங்கைக்கான பொருளாதார, சமூக மற்றம் கலாசார உரிமைகளிற்கான குழுவின் இறுதி அவதானிப்புகள். பொருளாதார, சமூக மற்றம் கலாசார உரிமைகளிற்கான குழு, 45 ஆவது பகுதி, ஜெனீவா,1-19 நவம்பர் 2010.
[74] A/HRC/WG.6/14/LKA/2 இலங்கை – 16/21 மனித உரிமைகள் சபையின் தீர்மானம் இணைப்பின் 5 ஆவது பந்திக்கு ஏற்றவாறு மனித உரிமைகளிற்கான உயர்ஸ்தானிகரினால் தயாரிக்கப்பட்ட தொகுப்பு - 13 ஆகஸ்ட் 2012 14 ஆவது உலகளாவிய காலமுறை மீளாய்வு செயற்பாட்டு குழு.

குடும்பத்திலும், சமுதாயத்திலும் இருந்து வருகின்ற ஆண்களிற்கும் பெண்களிற்குமான வகிபங்கு, ஆணாதிக்க கலாசாரம், நடத்தைகள், சமூகத்திலுள்ள மனப்பாங்கு என்பவற்றை மாற்றுவதற்கும் மிக சொற்பமானளவு நடவடிக்கையினையே எடுத்துள்ளமையையிட்டும் கரிசனை கொள்கின்றது. தனியார் சட்டங்களை சமூகங்கள் தாங்களாகவே திருத்திக் கொள்ளும் என்று அரச தரப்பு நம்பியிருப்பதிலும், பெண்களிற்கான சட்டமூலம் அனைத்து சமூகங்களிலும் இளவயது மற்றும் கட்டாயத் திருமணங்களிலிருந்து சிறுமிகளையும், பெண்களையும் பாதுகாக்கவில்லை என்பதையிட்டும் இக்குழு ஆழ்ந்த கரிசனை கொள்கின்றது. (உறுப்புரை. 3)

ஆண்களும், பெண்களும் அனைத்து பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிப்பதற்கு சம உரிமை வழங்கப்படுவது அரச தரப்பினரிற்கான உடனடி பொறுப்பாக இருப்பதோடு இது, சம்பந்தப்பட்ட சமூகத்திடம் அவர்களின் சட்டத்தை திருத்துவதற்கு அவர்களின் சம்மதத்திற்காக காத்திருக்கும் நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்பதனையும் இக்குழு அரச தரப்புக்கு நினைவூட்டுகின்றது. ஆகையினால், பெண்களிற்கெதிராக பாகுபாட்டினை ஏற்படுத்தும் சட்டங்களை நீக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் படியும் முஸ்லிம் தனியாள் சட்டத்தினைத் திருத்துவதற்கும் சிறுவயது திருமணத்தினை சட்டவிரோதமாக்கும் நோக்கோடு தேசிய சட்டத்திற்கு ஏற்புடையதாக்க அரச தரப்பை இக்குழு அழைக்கின்றது. மேலும், சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பெண்களிற்கும், ஆண்களிற்கும் இடையே சமத்துவத்தை ஏற்படுத்த தீவிரமாக ஊக்குவிக்க இலக்கிடப்பட்ட கல்வித் திட்டங்கள் மற்றும் வெகுஜன ஊடக பிரசாரங்கள் உள்ளடங்கலாக பெண்களை அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிக்கத் தடையாக இருக்கும் ஒரே மாதிரியான விடயங்களிற்கு எதிராக செயற்பட வைக்க அரச தரப்பிற்கு இக் குழு ஊக்கமளிக்கின்றது. இக் குழு ஆண் பெண் சமத்துவம் என்பதற்கான பொதுக் கருத்து இல.16 (2005)இல் குறிப்பிடப்பட்டுள்ளதனையிட்டு அரச தரப்பினை அவதானிக்கும் படி கூறுகின்றது.

## 2. பெண்களின் கரிசனைகள் தொடர்பில் முஸ்லிம் தலைவர்கள் காட்டிய அரசியல் விருப்பின்மையும், போதிய அக்கறையின்மையும்

கடந்த சில தசாப்தங்களிற்கு மேலாக, அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்து வந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முன்னின்று முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியிருந்திருக்க முடியும். இதற்கு பொதுவாக காட்டப்படும் உதாரணம் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவரும் அமைச்சருமாகிய ரவூப் ஹகீம் அவர்கள். முஸ்லிம் சமூகத்தின் அங்கத்தவராகவும், அரசியல் கட்சியின் தலைவராகவும், 2012 – 2014 காலப்பகுதியில் ரவூப் ஹகீம் அவர்கள் நீதியமைச்சராக இருக்கும் போது ஒரு தீரனான இச்சட்டத் திருத்தத்தை செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் சட்டத்திருத்தத்துக்காக வாதாடுபவர்களிடம் காணப்பட்டது. இவர் பல சந்தர்ப்பங்களில் சமயத் தலைவர்கள் அனுமதி அளிப்பின் தான் திருத்தத்தை முன்னெடுப்பதாக கூறியிருப்பதனை செயற்பாட்டாளர்கள் அவதானித்துள்ளனர். எவ்வாறிருப்பினும், அத்தகையவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவோ, திருத்த நடவடிக்கையைத் துரிதப்படுத்தவோ, அதற்கான ஒரு முடிவைக் காணவோ பகிரங்கமாக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளும் கூட தமது தொகுதிகளை பாதிக்கும் இவ்விடயங்கள் பற்றி மிக நன்றாகத் தெரிந்திருந்தும் இக்கரிசனைகள் தொடர்பாக பகிரங்கமாக வெளிப்படுத்தவோ, தமது ஆதரவைத் தெரிவிக்கவோ இல்லை. இது சமயத் தலைவர்களினதும், வாக்காளர்களினதும் ஆதரவை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாகவோ அல்லது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினைப் பற்றி பேசுவது இலங்கையில் முஸ்லிம்களது அரசியல் அடையாளத்தை நலிவடையச் செய்துவிடும் என்ற நம்பிக்கை காரணமாகவோ அல்லது தனிப்பட்ட நம்பிக்கைகள் காரணமாகவோ அல்லது நிலைமையை இவ்வாறே பேணுவதில் மிகவும் ஆர்வம் காட்டுவதன் காரணமாகவாவோ இருக்கலாம்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் பொதுவாக உலாமாக்கள் (சமய அறிஞர்கள்) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று சொல்லி அதனை கடந்து செல்கின்றனர். ஒருவேளை வேறுபாடுகளை நீக்கும் நோக்கோடு அரசியல் தலைவர்களுக்கும், சமயத் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை அல்லது கலந்துரையாடலின் உண்மையான முயற்சியின் அனுபவத்தின் அடிப்படையில் இப்பயம் உருவானதா அல்லது ஒன்றுமே செய்யாமல் இருந்து கொண்டு வெறும் நொண்டிச் சாக்காக இக்காரணம் சொல்லப்படுகின்றதா என்பது பெரும் கேள்விக்குரிய விடயம்.

அதேபோல், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பாக அல்லது திருத்தங்கள் மீதான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள அரசியல்வாதிகள் தமது தொகுதிகளுடன் போதியளவு ஈடுபட்டனர் என்பதற்கும், கரிசனைகள் பெறப்பட்டன என்பதைக் கூறுவதற்கும் இந்த நேரத்தில் இங்கு சாட்சியங்கள் இல்லை. பெயரளவிலான செயற்பாடுகளிற்கும் அப்பால், ஆண்களிற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட பழமைவாதம் பேசும் ஆண்களதும், சமய கட்டமைப்புக்களினதும் அனுமானங்களையும், பகுப்பாய்வையும் மட்டும் கருத்தில் கொள்கின்றனரே தவிர முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது தொகுதியில் உள்ள பெண்களுடன் ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியாக இது தொடர்பாக ஆலோசிப்பதற்கு எத்தகைய முக்கியத்துவமும் வழங்கவில்லை. இவ்விடயம் தொடர்பாக பெண்களுக்கு கூறப்பட வேண்டிய அரசியல் பொறுப்புக்கூறல் பற்றி அலட்சியப்படுத்தப்படும் அதேவேளை இனரீதியான எல்லைகளை பாதுகாப்பதில் அக்கறை காட்டுகின்றனர். உதாரணமாக, முஸ்லிமல்லாத அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் அல்லது பொது அரங்கில் முஸ்லிம் பெண்கள் தொடர்பான விடயங்கள் பற்றிக் கேள்விகளை எழுப்பும் போது அவற்றை முஸ்லிம் அரசியல்வாதிகளோ, முஸ்லிம் ஊடகங்களோ நேர்மறையான கண்ணோட்டத்துடன் நோக்குவதில்லை. மாறாக அவை தாக்கப்பட்டு மௌனிக்கப்படுகின்றன. இனவாத எல்லைகளைத் தாண்டி பெண்கள் ஒன்றுபடுவதும் கூட தாழ்வாகப் பார்க்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆதரித்து வாதாடுபவர்கள், செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட சமூக அங்கத்தவர்கள் என்போரால் திருத்தத்தைக் கோரி நேரடியாக அழைப்புக்கள் விடுக்கப்பட்டபோதும் இந்த தலைவர்களிடமிருந்து திருத்தம் தொடர்பில் அரசாங்கத்துடன் நிலையான தொடர்ச்சியான செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

அரச தரப்புடன் சிவில் சமூகம் ஏற்படுத்திய வரையறுக்கப்பட்ட, எழுந்தமாதிரியான செயற்பாடுகள் கூட அரசாங்கமானது எதுவுமே செய்து தரப்போவதில்லை என்ற நம்பிக்கையீனத்தின் விளைவானது என்பதுடன் வார்த்தையளவில் வாக்குறுதியை தந்துவிட்டு எதுவிதமான உறுதியான நடவடிக்கைகளையும் எடுக்காத அரசியல்வாதிகளை அணுகுவதிலிருக்கும் கரிசனையாகவும் இருக்கக் கூடும்.

### 3. அரசுக்கும், முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையிலான இடைத்தரகர்கள் திருத்தம் தொடர்பாக முஸ்லிம் பெண்களது கண்ணோட்டத்தையும், அனுபவங்களையும் உள்ளடக்குவதில்லை என்பதுடன் சமத்துவ அடிப்படையில் அத்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதனை ஊக்குவிப்பதில்லை

முஸ்லிம் சமுதாயத்தின் பிரதிநிதிகள் எனவும் முஸ்லிம் சமுதாயத்தின் குரல் எனவும் பொதுவாக கருதப்படும் இடைத்தரகர்கள் என்பது பிரதானமாக முஸ்லிம் ஆண் அரசியல்வாதிகள், சமூக அந்தஸ்து, நன்மதிப்பு மற்றும் தொழில் ரீதியில் அடைந்த வெற்றிகள் காரணமாக செல்வாக்கான சட்ட மற்றும் ஏனைய தொழிலிருப்பவர்கள், தேசிய அளவிலான சமயத் தலைவர்கள் மற்றும் சமூகத்தினுள் அமைந்த அமைப்புக்கள் போன்றோரை அடிப்படையாக கொண்டுள்ளது.

பிரதான இடைத்தரகர்களுக்கிடையே சில மட்டுப்பாடுகளுடன் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தையும், காதி நீதிமன்ற முறைமையினைத் திருத்துவதிலும், உடன்பாடிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயின், சமூகத்துள் முஸ்லிம் பெண்களின் ஸ்தானம், சமூக அந்தஸ்து தொடர்பாக ஆணாதிக்க அடிப்படையிலிருந்து ஊற்றெடுக்கும் பல காரணங்களினால், இந்த பிரதான இடைத்தரகர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் பிரச்சினைக்குரியவையாக உள்ளன. இவ்வகையில் இஸ்லாமியச் சட்டத்திற்கு மிகவும் பழைமைவாத பொருள்கோடலினை செய்யும் இடைத்தரகர்கள் திருத்தம் தொடர்பாக வரையறுக்கப்பட்ட கருத்தைக் கொண்டிருப்பதுடன், திருத்தத்தை எதிர்க்கவும் செய்கின்றனர். இவர்கள் தாம் திட்டமிட்டபடி, அரசியல்வாதிகளில் செல்வாக்குச் செலுத்தி திருத்தத்தை இழுபறி நிலையில் வைக்க அல்லது தாமதிக்கச் செய்வதுடன், பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டத்தின் முன் ஆண்களையும், பெண்களையும் சமமாகக் கருதும் சமத்துவம் மற்றும் பாரபட்சம் காட்டாமை என்பதனைக் கூட அங்கீகரிக்காத ஒரு சில திருத்தங்களுக்கு மட்டும் இவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர்.

### 3.1 முஸ்லிம் ஆண் அரசியல்வாதிகளும், இடைத்தரகர்களாக செல்வாக்குச் செலுத்தும் தனிநபர்களும்

> *"வரலாற்றுப் பின்னணியிலிருந்து மட்டுப்பாடுகளையும், தடைகளையும் நோக்கும் போது அது ஒன்றில் முஸ்லிம் சமய செல்வாக்குள்ளவர்களாகவோ அல்லது அரசியல் செல்வாக்குள்ளவர்களாகவோ இருப்பதனைக் காணலாம்'*
>
> – பைசுன் ஸக்கரிய்யா
>
> - பைசான் சஹாகியா

பெண்களது கரிசனைகள் தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகள் காட்டும் அரசியல் விருப்பின்மை மற்றும் போதியளவு கவனம் இன்மை என்பவற்றுடன் மேலதிகமாக முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் எனக் கூறும் செல்வாக்குமிக்கவர்கள் கூட 'பாதுகாப்பானது' என்று கருதும் தமது கண்ணோட்டங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் திருத்தத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்த போதும் இவர்கள் கூறும் விடயங்கள் சமூகத்தில் முகங் கொடுக்கப்படும் பிரச்சினைகளின் அடிப்படையில் அமைந்தனவாக இல்லை. மாறாக இந்த விடயம் முஸ்லிமல்லாத சமூகத்தால் அல்லது முஸ்லிம் அல்லாத தலைவர்களால் எவ்வாறு நோக்கப்படக்கூடும் என்ற வெளியிலான காரணங்களால் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருக்கின்றன. மேலும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட விடயங்கள் மீதான அதிகளவு கவனம் ஒருவேளை தீவிரவாத குழுக்கள் இச்சட்டத்தில் ஒரு கண் வைத்து முஸ்லிம் சமூகத்தின் மீது இனவெறியினைக் கட்டவிழ்க்க தூண்டுதலாக அமையுமோ என கரிசனை கொள்கின்றனர். அண்மைக் காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான கோஷங்களாலும், இனவறி சம்பவங்களாலும் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டமையினால் இக்கருத்து வலுப்பெற்றுள்ளதுடன், இச்சந்தர்ப்பத்தில் சட்ட மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பிப்பது இவர்களைத் தூண்டி விடுமே என்று இந்த இடைத்தரகர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இன்னும் சிலர் மிகவும் பிரச்சினைக்குரிய சட்டத் திருத்தங்களை இப்போது விட்டுவிட்டு பிறகு ஒரு 'பொருத்தமான' காலத்தில் மாற்றிக் கொள்ளுவோம் என்றும், இப்போதைக்கு பிரச்சினையாகாமல் சுலபமாக பாராளுமன்றத்தில் சட்டமாகக் கூடிய விடயங்களை மட்டும் திருத்திக் கொள்வோம் என்றும் கருதுகின்றனர். அதாவது நிர்வாக மாற்றங்கள், காதிநீதிமன்றத்தை தரமுயர்த்தல் போன்று அவர்கள் நம்பும் பிரச்சினையற்ற விடயங்களில் துண்டு துண்டாக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம் என நினைக்கின்றனர். கடந்த 30 வருடங்களான துண்டாகவோ, முழுமையாகவோ எந்தவொரு சட்ட மாற்றமும் வரவில்லை என்பதனைப் புறந்தள்ளிவிட்டு அவர்கள் இந்த வாதாட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

முதலாவது இடைத்தரகர்கள் குழுவானது வசதியாக அகில இலங்கை ஜாமியத்துல் உலமா போன்ற சமயக் குழுக்களை பலிக்கடாவாக்கி சட்டத் திருத்த தாமதத்திற்கு அவர்களை காரணம் காட்டுகின்றது. பெண் காதிகளை உள்வாங்கல் போன்ற பரிந்துரைகளை தாமதத்துக்கான காரணமாக இக்குழுவால் காட்டப்படுகின்றது. ஏனெனில் பரிந்துரைக் குழுவானது பழைமைவாத கண்ணோட்டங்களில் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாத நிலையில் உள்ளது.

### 3.2.இடைத்தரகர்களாக முஸ்லிம் சமயத் தலைமைகள்

வெவ்வேறுபட்ட சமுதாயங்களிலிருந்து அல்லது கருத்தியல் குழுக்களிலிருந்து எண்ணற்ற சமய அமைப்புகள் இலங்கையில் உருவாகியுள்ளன. அவற்றுள் ஒன்றான அகில இலங்கை ஜாமியத்துல் உலமாவானது "இலங்கை முஸ்லிம்களுக்கு சமய மற்றும் சமுதாய தலைமைத்துவத்தினை வழங்கும் இஸ்லாமிய இறையியலாளர்களைக்[75]" கொண்ட உச்ச அமைப்பாகக் கருதப்படுகின்றது. 1977 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தக் கலந்துரையாடல்களில் இவ்வமைப்பு ஈடுபட்டு வந்திருக்கின்றது. 2009ஆம் ஆண்டின் திருத்தக் குழுவின் உறுப்பினர்களாக இதன் தலைவரும், பொதுச் செயலாளரும் காணப்படுகின்றனர். இவ்வமைப்பு காதிகளுடன் அல்லது காதிகள் சபையுடன் சட்ட ரீதியான அதிகாரம் அல்லது உத்தியோகபூர்வமான இணைப்பினைக் கொண்டிருக்காதபோதும் காதிகளிற்கு சமய சம்பந்தமான அறிவுரைகளையும், அவ்வப்போது பயிற்சிகளையும் வழங்குகின்றது. 2009 இல் ஐக்கிய நாடுகளிற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியோடு காதிகளிற்கான இரண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தது.

தற்போது பிரதான முஸ்லிம் கருத்தியல் குழுக்களிற்கிடையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தேவையா இல்லையா என்பதில் வேறுபட்ட கருத்து நிலவும் அதேவேளை அகில இலங்கை ஜாமியத்துல் உலமா போன்ற பிரதான சமயக் குழுக்கள் சில குறிப்பிட்ட திருத்தங்களிற்கு ஆதரவாக உள்ளதுடன் ஏனையவற்றை இஸ்லாத்திற்கு முரண் என்ற அடிப்படையில் மறுக்கின்றன. உதாரணத்திற்கு, காதி நீதிமன்றங்களின் தரத்தினை முன்னேற்றுவதற்கு ஆதரவாக இருக்கும் அதேவேளை பெண்கள் காதிகளாக, திருமணப் பதிவாளர்களாக அல்லது ஜூரர்களாக வரமுடியாது என்றும் அவ்வாறான பதவிகளில் வருவதற்கான விதிகள் திருத்தத்திற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்ற கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். இந்த கண்ணோட்டத்தினையுடைய தனிநபர்கள் சமூகத்தில் குறிப்பிடத்தக்களவிலான சமூக-சமய செல்வாக்கினைக் கொண்டிருப்பதோடு முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற அரச தரப்புடன் அரசியல் செல்வாக்கினையும் கொண்டுள்ளனர்.

அகில இலங்கை ஜாமியத்துல் உலமாவானது சமய விடயங்களில் பிரதான இடைத்தரகர்களாக இருப்பதனால் சமூகத்தில் இடம்பெறும் பழக்கங்கள் மற்றும் அதன் விளைவுகள் பற்றி குறிப்பாக காதிநீதிமன்ற நடபடியும் அதன் விளைவாக பெண்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை அவர்கள் அறியாதிருப்பது சாத்தியமற்றது. இவ்விடயங்கள் தொடர்ச்சியாக இடம் பெறுவதுடன், வெளிச்சத்துக்கும் கொண்டு வரப்படும் இச்சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக இவ்வமைப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சொல்லப்பட்ட அறிவுரை என்ன என்பது பற்றிய கேள்விகள் எழாமல் இல்லை.

பல தசாப்தங்களாக சமூகத்துள் இடம்பெற்று வரும் மீறல்களை நிவர்த்திக்க தனது அரசியல் மற்றும சமூகச் செல்வாக்கைப் பயன்படுத்தி பாரிய முயற்சிகளை எடுத்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இவர்கள் உள்ளூர் சமயத் தலைவர்களுக்கும், தம்முடன் இணைந்துள்ளவர்களுக்கும் கலந்துரையாடல்கள் மூலம் விழிப்புணர்வூட்டி இதன் மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருக்க முடியும்.

## 4. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், அதன் திருத்தத்துக்கான தேவையும், சாத்தியப்பாடுகளும் பற்றி முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கும் பல்வேறு கண்ணோட்டங்கள்

இலங்கை முஸ்லிம்கள் இனரீதியாகவும், சட்டவியல் மற்றும் கருத்தியல் சிந்தனைகளிலும் மட்டுமன்றி முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் போன்ற விடயங்களில் அபிப்பிராயங்களாலும் பல்வேறு வகையானவர்கள். திருத்தத்திற்கான பிரதான சவால்களில் ஒன்று

[75] அகில இலங்கை ஜாமியத்துல் உலமா (ACJU) நாடு முழுவதும் 145 கிளைகளை கொண்டுள்ளது. இஸ்லாமிய சமூகத்திற்கு உதவிபுரியும் நோக்கம் உள்ளடங்கலாக இஸ்லாமிய சட்டவியல் விடயங்களை அக்கறையுடன் கையாளும், அறிவுரை வழங்கும் திறன் வாய்ந்தது. மூலம் : http://www.acju.lk/about-us

இத்தகைய பல்வேறு பட்ட கண்ணோட்டங்களாகும் என்பதுடன் அவற்றுடன் ஈடுபட்டு ஒருமித்த முடிவுக்கு வருவதென்பது பெரும் சிக்கலான இலக்காக உள்ளது.

### 4.1 தகவல்கள் மற்றும் விழிப்புணர்வு போதாமையின் காரணமாக கண்ணோட்டங்களில் உள்ள வேறுபாடு

முதலாவதாக, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றியும் அது எவ்வாறு முஸ்லிம்களில் பிரயோகிக்கப்படுகின்றது என்பது பற்றியும் முஸ்லிம் சமூகத்துக்குள் பாரிய புரிந்துணர்வின்மையும், அறியாமையும் காணப்படுகின்றது. அமைப்புக்களினதும், தனிப்பட்டவர்களினதும் விழிப்புணர்வு ஊட்டும் முயற்சி ஒருபுறம் இருந்தாலும் நுட்பமான விடயங்கள் மட்டுமன்றி அடிப்படை விடயங்கள் கூட பரந்தளவில் சமூகத்தில் ஊடுருவவில்லை. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பொதுவாக சமூகத்தில் கலந்துரையாடப்படுகின்ற விடயமல்ல. மேலும் திருமணத்திற்கு முன்னர் திருமணம் செய்யவிருப்பவர்களிடம் பேசப்படும் விடயமுமல்ல. அல்லது மார்க்கக் கல்வியோடு சொல்லிக் கொடுக்கப்படுவதுமல்ல. அண்மைக் காலம் வரை பரந்த எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களிடமிருந்து திருத்தத்துக்கான கோரிக்கைகள் எழுகின்றன என்பதனை குறித்ததொரு வட்டத்தைத் தாண்டி யாரும் அறிந்திருக்கவில்லை. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய அடிப்படையில் மற்றும்/அல்லது சட்ட முறைமையில் திருத்தம் பற்றிய கலந்துரையாடல்களோ அல்லது ஆய்வுகளோ செய்யப்படவில்லை.

இவ் விழிப்புணர்வு பற்றாக்குறை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பாக சில கட்டுக்கதைகளும் தவறான கருத்துக்களும் ஏற்பட வழிவகுத்தது. சில பழமைவாத பிரிவுகளின் விருப்பின் பேரிலும் இதே நிலைமை தொடர்கின்றது. உதாரணமாக, இது போன்ற அறியாமையானது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் உள்ளூர் கலாசார வழக்கங்களை உள்ளடக்கி உள்ளது என்ற தெளிவின்றியும், இவ்விடயத்தில் காணப்படும் செழிப்பான இஸ்லாமிய சட்டவியலினதும், நடைமுறைகளதும் அறிவின்றியும் தவறாக ஷரீஆவாக இச்சட்டத்தைப் பார்க்க வழிகோலியுள்ளது. இக்குழறுபடியால் 'ஷரீஆ அல்லது இஸ்லாமிய சட்டத்தில் கை வைக்க முடியாது' என்ற வாதம் எழுப்பப்படுவதோடு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பான கலந்துரையாடல்களைத் தடுப்பதாகவும் இது அமைகின்றது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள பாரபட்சமான ஏற்பாடுகள் நடைமுறையில் முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது ஏற்படுத்தும் பாரிய தாக்கங்கள் தொடர்பான போதியளவு புரிதல் இன்மைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்த சட்டம் தூய்மையாக ஷரீஆ சட்டத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்றும் ஆகையால் அதனை மாற்ற முடியாது எனவும் நம்புபவர்கள் இச்சட்டத்தால் ஏற்படுத்தப்படும் முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகளிற்கு எதிரான பாகுபாடு மற்றும் மீறல்கள் தொடர்பாகவும் எதுவும் கூற முன்வரமாட்டார்கள். இது முஸ்லிம் பெண்களுக்கு இஸ்லாத்தில் உரிய அந்தஸ்தும், 'பாதுகாப்பும்' வழங்கப்பட்டுள்ளமையால் ஷரீஆவினை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பாரபட்சமானதாக இருக்காது என்பதுடன் அதனை மாற்றத் தேவையில்லை என்பது இவர்களின் நம்பிக்கையாக இருக்கலாம். இது 'தெய்வீக சட்டம்' என வழங்கப்படுவதனால் அவர்களின் புரிந்துகொள்ளலில் காணப்படும் குறையாக இருக்கலாம். விழிப்புணர்வு இல்லாமை பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகின்றது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவானவர்கள் இது இஸ்லாமிய சட்டத்தையோ அல்லது ஷரீஆ சட்டத்தையோ திருத்துவதல்ல. மாறாக இச்சட்டம் எவ்வாறு கோவைப்படுத்தப்பட்டது, எவ்வாறு பொருள்கோடப்பட்டது, எவ்வாறு பின்பற்றப்படுகின்றது என்பவற்றையும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தீர்வு காண்பதற்கானது என்று தொடர்ச்சியாக விளக்கி வருகின்றனர். இவர்கள் தொடர்ச்சியாக ஆய்வுகளையும், சான்றாதாரங்களையும், ஏனைய பெரிய முஸ்லிம் நாடுகளில் எவ்வாறு பரந்த அடிப்படையில் பொருள்கோடல் செய்யப்பட்டு, சர்வதேச மனித உரிமை தராதரங்களைப் பேணும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற ஒப்பீட்டு உதாரணங்களையும் முன்வைக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் இந்த முயற்சிகள் சிறியதளவு சதவிகிதமான மக்களையே ஏற்றுக்கொள்ள வைக்க முடிந்ததுள்ளது. அதேசமயம், தங்களது சமய கட்டமைப்புக்கள் மற்றும் அதிகாரம் ஊடாக நிலைமையை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொள்ள முனைபவர்களின் வீச்செல்லை பாரியதாக உள்ளது. இவர்களது தீவிரமான எதிர்ப்பானது இத்திருத்தம் அவசியமானது என்று உணர்ந்துள்ள முற்போக்கான சிந்தனை உள்ளவர்களைக் கூட சட்டத்திருத்த நடபடியில் ஈடுபடுவதனை மட்டுப்படுத்தியுள்ளது.

சமயத் தலைவர்களும், சமூக பிரமுகர்களும் இத்தகைய தவறான கருத்துக்களை சவாலுக்குட்படுத்தாமல் அனுமதிப்பது மட்டுமன்றி திருத்தத்திற்கு ஆதரவானவர்களின் குரல்களை அமைதியாக்குவதற்கும், செல்லுபடியற்றதாக்குவதற்குமான அடிப்படையாக அடிக்கடி பயன்படுத்தியுள்ளனர்.

### 4.2.இஸ்லாமிய சட்டவியலுக்கிடையிலான மாறுபட்ட கண்ணோட்டங்கள்.

பரந்த முஸ்லிம் சமுதாயத்திற்கிடையில் தனது பன்முகத்தன்மையை அங்கீகரிக்காமையும், இத்தகைய பன்முகத்தன்மையை உள்வாங்கும் இஸ்லாமிய சட்டவியலின் செழுமையும் இதன் மூலம் சட்டத் திருத்தத்தை சாதகமாக செய்ய முடியும் என்பதனை அங்கீகரிக்காமையும் மற்றுமொரு தடையாக அவதானிக்கப்பட்டுள்ளது. இவை எதனையும் கவனத்தில் கொள்ளாமல் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது அனைத்து முஸ்லிம்களையும் ஒருகோட்டில் நிறுத்தியுள்ளது. அரசும் ஏனைய முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத சிவில் சமூகத்தினரும் இஸ்லாமிய சட்டவியலில் பல்வேறு வகையான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன என்பதற்கு போதிய அங்கீகாரம் வழங்கத் தவறியுள்ளன. எது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமாக தெரியப்பட்டு அடிக்கடி "கண்டிப்பாக ஷரீஆ சட்டம்" என இடைத்தரகர்களால் கூறப்படுகின்றதோ உண்மையிலேயே அது பல சட்ட சிந்தனைகளில் ஒன்று மட்டுமே. அதிக சந்தர்ப்பங்களில் மிக இறுக்கமான சட்ட சிந்தனையும் இதுவேயாகும்.

இஸ்லாத்தில் சுன்னிகள் மற்றும் ஷிஆக்கள் எனும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. சுன்னி பிரிவை எடுத்துக் கொண்டால் இது கி.பி 10 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்த 4 பிரதான இமாம்களினால் விஸ்தரிக்கப்பட்ட பிரதானமாக 4 மத்ஹப்(பிரிவு)களைக் கொண்டது. அவையாவன: இமாம் அபு ஹனிபா (ஹனபி சிந்தனை), இமாம் மாலிக் (மலிக்கி சிந்தனை), இமாம் ஷாபி (ஷாபி சிந்தனை), இமாம் இப்னு ஹன்பல் (ஹன்பலி சிந்தனை). இலங்கையின் பெரும்பாலான சுன்னி முஸ்லிம்கள் (உதாரணம்: சோனகர்கள், மலேயர்கள்) ஷாபி மத்ஹப்பின் இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் சிறுபான்மையாக ஹனபியினரும் (மேமன் சமூகம்) உள்ளனர். ஷியா தரப்பினர் இத்னா அஷரி, இஸ்மாயிலி (தாவூதி போராஹ்கள்) மற்றும் செய்யிதி[76] எனும் மூன்று துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரதான பிரிவுகள் மட்டுமன்றி அதன் கீழான மத்ஹப்புகள் கூட தங்களுக்குள்ளே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் உள்ள ஆகக் குறைந்த திருமண வயது, மணப்பெண்ணின் சம்மதம், வலிதாரர் தொடர்பான ஏற்பாடுகள், விவாகரத்தின் வகைகளும், நிபந்தனைகளும், காதிநீதிபதிகளாகப் பெண்கள், பராமரிப்பு தொடர்பான விடயங்கள் மற்றும் சிறுவர் பாதுகாவல் போன்ற இன்ன பிற விடயங்களிலும் வேறுபட்ட விளக்கங்களைக் கொண்டுள்ளன.

**முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள பிரச்சினைகளில் ஒன்றான பெண் காதிகள்[77] தொடர்பான மாறுபட்ட பல்வகையான கண்ணோட்டங்களையும், அவற்றின் தன்மையையும் விளக்கும் பொருட்டு சுன்னி மத்ஹப்களுக்கிடையேயுள்ள வேறுபட்ட கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

---

76 மர்சூப், சலீம் 2012, இஸ்லாமிய திருமணச் சட்டம் - சில gray பகுதிகள் https://www.academia.edu/9905307/Muslim_Matrimonial_Law_-_Some_Gray_Areas

77 மூலம்: டாக்டர். நிக் நொரியாணி நிக் பாதிஷா மற்றும் ஜஸ்மின் மஸிதி,2009. "நீதிபதிகளாக பெண்கள்". இஸ்லாத்திலுள்ள பெண்கள், மலேசியா. http://www.sistersinislam.org.my/files/downloads/women_as_judges_final.pdf

| ஷாபி, மலிகி, ஹன்பலி மத்ஹப் | ஹனபி மத்ஹப் | முஹம்மத் இப்ன் ஜரீர் அல்-தபரி மற்றும் அபூ முஹம்மத் இப்ன் ஹஸ்ம் (இஸ்லாமிய முன்னணி சட்டவியலாளர்கள்) |
|---|---|---|
| குர்ஆனிலுள்ள நிஸா எனும் நான்காம் அத்தியாயத்தின் 34 ஆவது வசனத்தில் ஆண்கள் 'பெண்களின் பாதுகாவலர்கள்' என்று கூறப்படும் வசனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடலின்படி பெண்கள் நீதிபதிகளாகத் தகுதியற்றவர்கள். ஆனாலும் மலிக்கிகள் மத்தியில் பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படலாம் என்ற சிறுபான்மைக் கருத்தும் காணப்படுகின்றது. ஷாபிகள் மத்தியில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள் நீதிபதிகளாக முடியும் என்ற அனுமதிக்கின்றனர். ஹன்பலி சிந்தனையின் கீழ் மட்டுமே பெண்கள் நீதிபதிகளாக முடியாது என்பதில் ஒருமித்த கருத்துக் காணப்படுகின்றது. | ஹனபி சிந்தனையின் சிறுபான்மையான கருத்தின்படி ஒரு சாட்சிக்குரிய தகுதியை அடையும் வரை ஒரு நீதிபதியின் அதிகாரம் வலிதானதாகாது.<br><br>ஹுதுத் குற்றங்கள், கொலை வழக்குகள் தவிர்த்து ஏனைய அனைத்து வழக்குகளிலும் பெண்கள் நீதிபதிகளாக கடமையாற்ற ஹனபி மத்ஹப் அனுமதிக்கின்றது. | முன்னணி சட்டவியலாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், குறித்த பதவிக்கான தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் எவ்வித விதிவிலக்குகளும் இல்லாமல் அனைத்து விதமான வழக்குகளுக்கும் பெண்கள் நீதிபதிகளாக முடியும். இது குர்ஆனின் தௌபா எனும் 9ஆம் அத்தியாயத்தின் வசனம் 71 இன் பொருள்கோடலான ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் "அவ்வலியா" (உற்ற பாதுவாகலர்களும் நண்பர்களுமாவர்) என்ற அடிப்படையில் அமைந்ததாகும். |

**திருத்தத்திற்கு அடிப்படையாக இவ்வாறான பன்மைத்தன்மைக்கு அங்கீகாரம் அளிப்பதனை விட்டுவிட்டு பிரதான இடைத்தரகர்கள் மிகவும் பழைமைவாதக் கண்ணோட்டங்களையே வலியுறுத்துகின்றனர்.**

இந்த வித்தியாசங்கள் மட்டுமன்றி பல்வேறு நிலைகளில் இருந்து திருத்தத்தைக் கோருபவர்கள் மத்தியிலும் கூட இத்தகைய வேறுபாடான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன. இவை சமயம் மற்றும் சட்டம் தொடர்பானவையாக இருப்பதுடன் இவற்றுடன் ஒரு சமநிலையைப்பேணி நன்மையை அடைந்து கொள்ள அனைவருடனுமான கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

ஆனால் இலங்கையின் பின்னணியில் இந்த வேறுபாடுகளானவை, (1). அனைவரையும் ஈடுபடுத்தல் சிக்கலானது என்பதனை ஒரு சாட்டாக முன்வைத்து பழைமைவாத ஆண் இடைத்தரகர்களிடமே மீண்டும் சென்று நிலைமையை தொடர்ந்தும் இப்படியே வைத்துக் கொள்ளும். (2) திருத்தத்தினை தங்களது போராட்டங்களுக்கு மத்தியில் வெவ்வேறு தளங்களிலிருந்து முயலுபவர்களுக்கிடையேயான அர்த்தமுள்ள இணைப்பைத் தடுக்கும். இதன் பெறுபேறாக மாறுபட்ட கருத்துக்கள் அரச தரப்பினரால் கவனித்தில் எடுத்துக் கொள்ளப்படுவது சாத்தியமில்லை என்பதுடன் 'இஸ்லாமிய கட்டமைப்பிற்கு' வெளியேயான எத்தகைய திருத்தமும் சாத்தியமில்லை என்று அடிக்கடி தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் இடைத்தரகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது இவர்களுக்கு சௌகரியமாக இருக்கின்றது.

அதாவது, அரச தரப்பினரும் மற்றும் முஸ்லிமல்லாத சிவில் சமூகமும் மேலே சொன்னவாறான வேறுபட்ட இஸ்லாமிய சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டவியலுடன் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள எண்ணற்ற கருத்துக்களை கவனித்திலெடுக்காமல் இத்தகைய ஆண் இடைத்தரகர்களின் கருத்துக்களுடன் இணங்க முனைகின்றனர்.

**வேறுபட்ட கண்ணோட்டங்களை எடுத்துக் காட்டுவதற்காக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திலுள்ள விடயங்களில் ஒன்றான ஆகக்குறைந்த திருமண வயது தொடர்பாக இந்த ஆய்வினூடாகத் திரட்டப்பட்ட பொதுவான மாறுபட்ட கண்ணோட்டங்கள்.**

| பழமைவாத முஸ்லிம் நோக்கு | திருத்தம் கோருபவர்களின் முஸ்லிம் நோக்கு | உரிமைகள் அடிப்படையிலான நோக்கு |
|---|---|---|
| **கண்ணோட்டம்** | | |
| • சுன்னாவிற்கும் (நபியின் வழிமுறை) பிக்ஹ்விற்கும் (இஸ்லாமிய சட்டவியல்) அமைவாக ஆகக் குறைந்த திருமண வயது இருக்கக் கூடாது.<br>• இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு இளவயதுத் திருமணம் ஒரு பிரச்சினையாக இல்லை.<br>• இள வயதுத் திருமண வழக்குகள் அரிதாகவே உள்ளன. | • இலங்கையிலுள்ள முஸ்லிம் சிறுமிகளுக்கு இளவயதுத் திருமணம் ஒரு பிரச்சினையாக உள்ளதுடன் இத்தகைய எத்தனையோ வழக்குகளும் காணப்படுகின்றன.<br>• ஷஹாப்தீன் குழுவின் பரிந்துரைக்கமைய ஆகக் குறைந்த திருமண வயது 16 ஆக உயர்த்தப்பட வேண்டும். | • வயது குறைந்த திருமணம் இலங்கையிலுள்ள அனைத்து சமூகத்தினருக்கும் ஒரு பிரச்சினையாக உள்ளது.<br>• திருமணத்துக்கான வயதெல்லை சிறுவர் உரிமைகள் தொடர்பானது மட்டுமன்றி சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய முதன்மைப் பொறுப்பு அரசினுடையது என்பதனால் இவ்வயதெல்லை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் நியாயாதிக்கத்திலிருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும்.<br>• அனைத்து பிரசைகளுக்கும் திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதாக 18 இனை நிர்ணயித்தல். |
| **முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் மீதான அபிப்பிராயங்கள்** | | |
| • விவாகம் மற்றும் விவாகரத்தை நிர்வகிக்கும் மத சார்பற்ற சட்டங்கள் தமது சொந்த சட்டத்தால் நிர்வகிக்கப்படும் முஸ்லிம்களை விலக்களித்தல் வேண்டும்.<br>• திருமணத்துக்கான வயதெல்லை நிர்ணயிக்கப்படக் கூடாது. ஏனெனில் வயதைக் கூட்டி நிர்ணயிப்பது இஸ்லாத்துக்கு முரணாக அமையும். | • வயதெல்லை உள்ளடங்கலாக விவாகம் மற்றும் விவாகரத்தை நிர்வகிக்கும் மத சார்பற்ற சட்டங்கள் தமது சொந்த சட்டத்தால் நிர்வகிக்கப்படும் முஸ்லிம்களை விலக்களித்தல் வேண்டும்.<br>• முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் ஆகக் குறைந்த வயதெல்லையாக பெண்களுக்கு 16 இனையும், ஆண்களுக்கு 18 இனையும் கொண்டுவரல் அல்லது இரு பாலாருக்கும் 18 வயதினைக் கொண்டு வரல். | • முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட நியாயாதிக்கத்திலிருந்து ஆகக் குறைந்த திருமண வயதினை நீக்குதல், வயதெல்லையை இருபாலாரிற்கும் அல்லது அனைத்து பிரஜைகளிற்கும் 18 வயதாக அல்லது அல்லது அதனை விட அதிகமாக்குதல்.<br>• முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட நியாயாதிக்கத்திலிருந்து வயதெல்லையினை நீக்குவதானது எதிர்காலத்தில் இச்சட்டத்தைத் திருத்த அமைக்கப்படும் குழு தன்னிச்சையாக வயதைக் கூட்டவோ குறைக்கவோ முடிவெடுக்க முடியாது என்பதனை உத்தரவாதப்படுத்தும். |

| யார் இப்படி சிந்திப்பது? | | |
|---|---|---|
| மேலே குறிப்பிடப்பட்டபடி உலமாக்கள் உள்ளடங்கலாக சில சமய அறிஞர்கள், சில அரசியல் தலைவர்கள், சில இடைத்தரகர்கள். | முஸ்லிம் பெண்களுடனும், சிறுமிகளுடனும் வேலை செய்யும் சில பெண்கள் அமைப்புகள். | சில முஸ்லிம் செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் முஸ்லிம் பெண்களுடனும், சிறுமிகளுடன் வேலை செய்யும் சில பெண்கள் அமைப்புகள் |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாறுபட்ட கருத்துக்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட திருத்தத்தைக் கோருபவர்களுக்கு (இஸ்லாமிய அடிப்படையில் அல்லது உரிமைகள் அடிப்படையில்) மத்தியில் வெவ்வேறு அணுகுமுறைகளுக்கு வழிகோலியுள்ளன.

**ஏனைய நாடுகள் முஸ்லிம் சட்டத் திருத்தத்திற்காக பிரயோகித்த யுக்திகள் பற்றிய குறிப்பு**

முஸ்லிம் குடும்பச் சட்டத் திருத்தமானது சில பாரிய திருத்த அணுகுமுறைகளை உள்வாங்கிய 1990களின் மத்திய கிழக்கு நாடுகளில் குடும்ப உரிமைகளிற்கான ஒட்டோமன் சட்டத்திலிருந்து பின்னோக்கிப் பார்க்கப்படக் கூடியதாக இருக்கின்றது. அதன்பின்னர் பல முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் தனியாகவும் அல்லது வெவ்வேறு அளவுகளில் கூட்டாகவும் இவ்வணுகுமுறைகளைப் பயன்படுத்த ஆரம்பித்தன. அவற்றில் உள்ளடங்குவன:

1. தக்காயூர் - வேறுபட்ட இஸ்லாமிய சட்ட சிந்தனைகளுக்கிடையில் விருப்பத் தெரிவைக் கொடுத்தல். (உதாரணமாக: நான்கு மத்ஹப்களுக்கிடையேயான தெரிவு) மற்றும் ‘பெண்கள் மற்றும் சிறுவர்களின் கண்ணோட்டத்திலிருந்து அதிக விருப்புக்குரிய’ விதியைத் தெரிவு செய்தல். உதாரணமாக மலேசியாவில் பெண்களும் காதிகளாக இருக்கலாம் என்பதனை நியாயப்படுத்த ஹனபி மத்ஹப்பினை உள்வாங்கியமை.
2. தல்பிக்[ழ] அல்லது ‘ஒட்டுப்போடுதல்’ - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வித்தியாசமான விதிகளை (அல்லது விதிகளின் பகுதிகளைக்) கருத்திலெடுத்து ஒரு கலப்பு விதியை உருவாக்கல். இவ்விதி இஸ்லாமிய சட்டத் தெரிவுகளில் இருந்து எடுக்கப்பட்டதாக இருப்பினும் எந்த ஒரு இஸ்லாமிய சட்ட சிந்தனைகளாலும் அங்கீகரிக்கப்பட்டதாகவோ, அங்கீகரிக்கப்படாததாகவோ இருக்கலாம்.
3. அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களுக்கு மீள்பொருள்கோடல் செய்தல்.
4. தலைப்பு அல்லது கருப்பொருளை (உதாரணம்:- திருமண வயது) நீதிமன்றத்தின் சட்ட அதிகாரத்திலிருந்து நீக்குதல். இதன் மூலம் மேலே கூறப்பட்டுள்ள எந்தவொரு தெரிவோடும் கலக்காமல் முற்றாக அதனை முஸ்லிம் குடும்பச் சட்டத்திற்கு அல்லது நீதிமன்ற முறைக்கு அப்பால் விட்டுவிடுவதற்கான தெரிவு.

*(மூலம்: நூர், சனாரியா, 2007. மலேசியாவில் பால்நிலை நீதி அல்லது இஸ்லாமிய குடும்ப சட்டம் சீர்திருத்தம். காஜியான் மலேசியா, ஜிட். ஒஒஏ, இல.2, டிசம்பர் 2007)*

## 5. இலங்கையில் காணப்படும் முஸ்லிம் சமூகத்தின் பன்மைத்தன்மையை போதியளவு அங்கீகரியாமையும், திருத்தங்களில் முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஈடுபடுத்தலும்

கடந்த சில தசாப்தங்களாக பல திருத்தவாதிகளின் அணுகுமுறையானது இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் ஒரு குழுவாகக் காட்டுவதாக அமைந்துள்ளது. முஸ்லிம் மேல்வர்க்கத்தனராலும், இடைத்தரகர்களாலும் காண்பிக்கப்படும் இலங்கையில் ‘முஸ்லிம் சமூகம்’ ஒரேமாதிரியானவை என்பதுடன் சமயம், சட்டம், நடைமுறை பற்றி ஒரே அபிப்பிராயம் கொண்டவர்கள் என்ற

பார்வையானது சமூகத்துக்குள் இருக்கும் பல்வகைப்பட்ட குரல்களை நசிக்கியுள்ளன. இதன் விளைவாக முஸ்லிம் சமுதாயத்தின் கலாசார, சட்ட வழக்காறுகளின் பன்முகத்தன்மை கலாசார மற்றும் சட்ட நடைமுறை தொடர்பாக (வெவ்வேறு மத்ஹப்பினருடைய சட்டவியல் உள்ளடங்கலாக) திருத்த நடைமுறைகளில் கவனம் செலுத்தப்படவில்லை. முஸ்லிம் சிறுபான்மையினரான மலேயர்கள், போராக்கள் மற்றும் மேமன் சமூகங்கள் மற்றும் தென், மத்திய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் பொதுவாக திருத்தத்தினை நோக்கிய முயற்சிகளின் கலந்துரையாடல்களிலிருந்தும் விலக்கப்பட்டிருக்கின்றனர்.

இது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்ட பாரபட்சங்கள் கவனத்தில் கொள்ளப்படாமையைக் குறிக்கின்றது. உதாரணமாக சுன்னி ஹனபி பிரிவிலும், ஷியாவின் சில பிரிவினரிலும் ஒரு பெண் தானாக விவாகரத்தைக் கோருவதற்கான ஏற்பாடுகள் இல்லை. மேலும் இச்சட்டத் திருத்த முயற்சிகள், பரிந்துரைகள், தீர்மானம் எடுத்தல், கலந்துரையாடல் போன்றவற்றில் மலேய சமூகம் உள்வாங்கப்படவில்லை. 'கைக்கூலி' வழக்காறானது முற்றாக இஸ்லாத்துக்கு முரண் என்ற வகையில் மலேயர்கள் கண்டிப்பதுடன் அது ஒரு போதுமே மலேயர்களின் திருமண நடைமுறையாக இருந்ததில்லை. எவ்வாறிருப்பினும் இக்கண்ணோட்டங்கள் திருத்தவாதிகளினால் வெளிப்படுத்தப்படவோ, அல்லது வாதிடப்படவோ இல்லை.

அதேபோல், முஸ்லிம் பெண்களின் புவியியல் அடிப்படையிலான அனுபவங்களும் அங்கீகரிக்கப்படவில்லை. தென் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள முஸ்லிம் பெண்கள் இந்நாட்டில் நடக்கும் உரிமை சார்ந்த செயற்பாடுகளில் பெருமளவில் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். இது இப்பிரதேசங்களில் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் தொடர்பில் செயற்படும் பெண்களிற்கான அமைப்புக்கள் குறைந்தளவில் உள்ளதையும் சுட்டி நிற்கின்றது. உதாரணமாக, கண்டி மாவட்டம் முஸ்லிம் சனத்தொகையில் (அம்பாறை மற்றும் கொழும்பிற்கு அடுத்ததாக) அதிகளவில் காணப்படும் இடங்களில் மூன்றாவது இடத்தினை கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும், நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு போன்று இப்பகுதியில் வாழும் முஸ்லிம் பெண்களின் கரிசனைகள் திருத்த நடவடிக்கைகளில் எழுப்பப்படவேயில்லை அல்லது அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன.

"இலங்கையில், சிறுபான்மையான முஸ்லிம் சமூகம் (பெரும்பான்மை சமூகத்தால்) சமய அடிப்படையில் ஒரேதன்மையான குழு என்று கருதப்படுகின்றது. உண்மையில் இவர்கள் இஸ்லாத்தின் பல்வேறு வகையான பொருள்கோடலை, விழுமியங்களை, நடைமுறைகளை அங்கீகரிக்கும் பல குழுக்களாகப் பிரிந்து காணப்படுகின்றனர். முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கும் இந்த பல்வகைமையையும், அதன் உள்ளக அரசியலையும் அறியாமையானது தனிநபர்கள் இச்சமூகத்திற்கு எதிராக பிழையான கற்பிதங்களைக் கொண்டிருப்பதற்கு பங்களிக்கும் ஒரு காரணியாக இருக்கக் கூடும்."

மூலம்: இலங்கை முஸ்லிம்களுக்கிடையே "முறிவடையும் சமுதாய உள்ளக உறவுகள்" இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மார்ச் 2016

புத்தளம் மற்றும் ஏனைய வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மாவட்டங்களில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், காதி நீதிமன்றங்கள் காரணமாக முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் மற்றும் பாரபட்சம் தொடர்பாக முக்கிய தகவல்களையும், சான்றாதாரங்களையும் பெண் ஆர்வலர்கள் சேகரித்திருக்கின்றனர். எவ்வாறிருப்பினும், தென் மற்றும் மத்திய மாவட்டங்களில் இந்த விடயங்கள் தொடர்பாக சிறிதளவிலோ அல்லது தகவல்களோ திரட்டப்படவில்லை. ஹம்பாந்தோட்டை மற்றும் ஹற்றன் போன்ற குறிப்பிட்ட சில பகுதிகளில் ஒன்றரை வருடங்களிற்கு மேலாக காதி மன்றங்களே இல்லை. இங்கு திருமணம், விவாகரத்து போன்ற விடயங்களில் நீதிக்காக அணுகி தமது குறைகளை நிரப்புவதற்கு பெண்கள் முகங்கொடுக்கும் கஷ்ட நிலைகள் பற்றி தெரியாதுள்ளது. ஒரு சில மாவட்டங்களிற்கு அப்பால் முஸ்லிம் பெண்களுடன் இச்சட்டத் திருத்த நடபடிகளில் ஈடுபடத் தவறியமையானது இத்திருத்தம் பற்றிய பிழையான கற்பனைகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பங்களித்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகளும், சவால்களும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பரந்த அடிப்படையிலான திருத்தத்திற்கான ஆதரவு பற்றி பெரியதொரு கேள்வியை

ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள இச்சட்டத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பெரிய சமூகம் இருக்கும் அதேவேளை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய முக்கியமான பரந்தளவிலான அறிவு இருக்கின்றதா இல்லையா, இதனால் இச்சமூக அங்கத்தவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு இருக்கின்றதா, முக்கியமாக சட்டத் திருத்தத்தை ஆதரிக்கின்றனரா என்பது கரிசனைக்குரியதாயுள்ளது.

## 6. வரையறுக்கப்பட்ட யுக்திகள் காரணமாக பரந்த முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத சிவில் சமூகத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டப் பிரச்சினைகள் உள்வாங்கப்படவில்லை.

கடந்த பல வருடங்களாக திருத்தங்களிற்காக வாதிடும் குழுக்களாலும், உரிமைகள் தொடர்பான ஆர்வலர்கள் குழுக்கள் மற்றும் பிரதான சிவில் சமூக அமைப்புக்களாலும் முஸ்லிம் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக கைக்கொள்ளப்பட்டுவரும் யுக்திகளின் மதிப்பீட்டின் அடிப்படையில், இந்த யுக்திகளும் இச்சட்டத்திருத்த நடபடியானது முன்னேறாமல் துணை செய்துள்ளது. முதல் குழுக்கள் மத்தியில் யுக்தியானது தனிமைப்படுத்திப் பாதுகாக்கப்படவும், பின்னர் கூறப்பட்ட குழுக்கள் மத்தியில் விலக்களிக்கப்பட்டதாயும், குழப்பகரமானதாயும் தோன்றுகின்றது.

### 6.1 திருத்தத்தைக் கோரும் முஸ்லிம் குழுக்களினால் கைக்கொள்ளப்பட்டு வரும் யுக்திகள் மீதான வரையறைகள்

#### *6.1.1 இஸ்லாமியக் கட்டமைப்புக்குள் செயற்படுவதிலுள்ள வரையறைகள்*

முஸ்லிம் சமுதாயங்களுக்குள்ளேயே பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடி, அதனைப் பெற்றுக் கொடுக்கும் அணுகுமுறையை பல முஸ்லிம் செயற்பாட்டாளர்களும், திருத்தத்தைக் கோரி வாதாடி வருகின்ற ஏனையவர்களும் பின்பற்றுகின்றனர். இந்த அணுகுமுறையானது முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளான மலேசியா, இந்தோனேசியா போன்றவற்றில் பலதாரமணத்தை நெறிப்படுத்தல், பெண்களை காதிகளாக நியமித்தல் என்பன போன்றவற்றில் ஓரளவிற்கு வெற்றிகரமாக அமைந்துள்ளது. அதேசமயம் தூனேசியா, துருக்கி போன்ற நாடுகள் திருத்தத்திற்காக மதச்சார்பற்ற வாதங்களிலும், உரிமை அடிப்படையிலான அணுகுமுறையிலும் தங்கியிருந்தது.

மத்ஹப்கள், இஸ்லாமிய சட்டவியல், மாற்றுப் பொருள்கோடல்கள், கருத்தியல் தாக்கங்கள் போன்றவற்றில் இஸ்லாமியக் கட்டமைப்பு சார்ந்திருப்பதுடன் இவற்றினாலேயே வரையறைக்கவும் படுகின்றது. உதாரணமாக, இஸ்லாமிய சட்டம் அல்லது சமய நூல்கள் பற்றிய மாற்றுப் பொருள்கோடல்கள் அறிஞர்களிடையேயும், சமயத்தலைவர்களிடையேயும் பாரியளவில் வேறுபட்டுள்ளன. இது அவர்கள் எங்கு பயிற்றுவிக்கப்பட்டார்களோ அதனதும், அல்லது அவர்களுடைய சிந்தனையையும், நடைமுறைகளையும் எந்த இஸ்லாமியக் கருத்தியல் செல்வாக்குச் செலுத்துகின்றதோ அதன் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. இது சமூகத்தில் செல்வாக்கு மற்றும் அதிகாரம் படைத்த தனிநபர்களதும், சமய விடயங்களில் பயிற்றுவிக்கப்பட்டவர்களதும் அபிப்பிராயங்களும், பொருள்கோடல்களும் ஏனையவர்களுடையவற்றையும் பார்க்க அதிக பெறுமதி வாய்ந்தது என்ற கருத்தையே தருகின்றது.

உரிமைகள் சார்பான விடயங்களை இஸ்லாமிய கட்டமைப்பிற்குள்ளேயே தீர்ப்பதற்கு செயற்படும்போது சமய அறிஞர்களுக்கும், முஸ்லிம் சமுதாயத்திற்குமிடையே **"யாருடைய விளக்கம் சரியானது? தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் யாரிடமுள்ளது?"** என எப்போதும் முடிவுறாத சிக்கலுக்குள் சிக்கியிருப்பதாக ஆர்வலர்கள் உணர்கின்றனர். இது குறிப்பாக இஸ்லாமிய இறையியல் அல்லது சட்டவியலைக் கற்றிராத சமுதாயத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும் குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. தங்களுடைய பதில்களையும், ஸ்தானத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 'இதனைப் பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது?' என்ற அவர்களுடைய கலாசார கூருணர்வும், நடுநிலையான கேள்வியும் மீண்டும் மீண்டும் சமூகத்தில் அதிகாரமும், செல்வாக்கும் உள்ளவர்களது கருத்துக்களையே வலுப்படுத்துவதை அவர்கள் அங்கீகரிக்கத் தவறுகின்றனர்.

### *6.1.2. முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்தின் மீதான வரையறைகளைக் கண்காணிக்கும் முஸ்லிம் பெண்கள் குழுக்களின் தலைவர்கள்.*

சமீப காலம் வரை இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்களிற்கான குழுக்கள் கூட முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தமானது முஸ்லிம்களால் மட்டுமே கையாளப்பட வேண்டிய ஒரு விடயம் எனக்கூறி வந்துள்ளனர். இதன் விளைவுகளில் ஒன்று ஏனைய சமூக அமைப்புகளை இச்சட்டத் திருத்தமானது 'சில முஸ்லிம் பெண்கள் அமைப்புக்களின் விடயப்பரப்பு' என்று கருதச் செய்தது மட்டுமன்றி இவ்விடயத்தோடு ஈடுபடாமல் அவர்களை அலட்சியமாகவும் இருக்கத் தூண்டியுள்ளது. இது காலப்போக்கில் முஸ்லிமல்லாத பெண்கள் குழுக்கள், முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தன்மையையும், பாரதூரத்தையும் புரிந்து கொள்ள முடியாத தூரத்துக்கு அப்பால் அவர்களை தள்ளிவைக்க இடமளித்துள்ளது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றித் தாங்கள் அறிந்திருந்த போதும் பல வருடங்களாக அநேகமானவர்களால் இது தம்மால் பெரிதாக நெருங்க முடியாததும் தீர்மானம் எடுத்தலில் பங்களிக்க முடியாததுமான, கொழும்பைச் சார்ந்த 'உயர் மட்ட' நடபடியாகக் கருதப்பட்டது என முஸ்லிம் சமுதாய மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். 'இச்சட்டத் திருத்தத்துக்கான செயல்வாதமே பல படிநிலைகளைக் கொண்டது' மட்டுமன்றி இது சமூக மட்டக் குழுக்களிடமிருந்து கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் அமைப்புகளை பிரித்து வைத்திருக்கின்றது என்பதுடன் இது கடந்த பல வருடங்களாக திருத்தம் தொடர்பாக சொல்லிக் கொள்ளுமளவான ஒன்றுபட்ட முயற்சிகள் இடம்பெறாமைக்கான குறிப்பிடத்தக்களவு தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என பெண்கள் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்[78]

## 6.2 'தாராளவாதிகளும்' முஸ்லிம் (சிறுபான்மை) குழு உரிமைகளுக்காக வாதாடும் சிவில் சமூக அங்கத்தவர்களும் உள்ளக சமூகப்பிரச்சினைகளை வெளிக்கொணர பின்வாங்கியிருக்கின்றனர்.

இந்த ஆய்வானது முஸ்லிம் அல்லாத நாட்டில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் சமூக, கலாசார, அரசியல் உரிமைகளுக்காக உயிர்ப்போடு செயற்படும் முஸ்லிம் 'தாராளவாதிகள்' , 'குழு உரிமைகளுக்காக வாதாடுபவர்களையும்' நேர்காணல் செய்தது. அவர்களது செயற்பாடுகள் மற்றும் வாதாட்டமானது ஏனைய பிரச்சினைகளுடன் சேர்த்து முக்கியமாக வடக்கு முஸ்லிம்களின் இடப்பெயர்வு, முஸ்லிம்களுக்கு எதிரான தீவிரவாதத்தைத் தூண்டும் பிரச்சாரங்களுக்கு பதிலளித்தல், சமூக, பொருளாதார மற்றும் சொத்து உரிமைக்காக வாதிடல், சமய கலாசார உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தல், அரசியலில் பங்குகொள்வதையும், பிரதிநிதித்துவம் செய்வதையும் மேம்படுத்தல் என்பனவாகும்.

**முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைச் சுட்டிக் காட்டுகையில் அரசினாலும், முஸ்லிம் பெண்களது உரிமைகளைச் சுட்டிக் காட்டுகையில் முஸ்லிம் சமூகத்தினராலேயும் சில சந்தர்ப்பங்களில் அறியாமலும், இன்னும் சில சந்தர்ப்பங்களில் தெளிவாகவும், அலட்சியப்படுத்தப்படுகின்றமை குறிப்பாக அவதானிக்கப்படக் கூடியதாயுள்ளது. ஏனெனில் பெரும்பான்மையினரால் ஆளப்படும் நாட்டுக்குள்ளே முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக முஸ்லிம் சமூத்தால் தெளிவாகவே பயன்படுத்தப்படும் தர்க்கத்தையும், நியாயத்தையும், சொந்த சமூகத்துக்குள் அதேபோன்ற ஆதிக்கத்தின் அழுத்தத்தை எதிர்கொள்ளும் முஸ்லிம் பெண்களுக்குப் பிரயோகிக்க மறுப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.**

இந்த முரண்பாடான நிலைமையானது, இந்த சமூகத்திற்குள்ளேயுள்ள முன்னணி 'மிதவாதிகள்' மற்றும் அனேகமான செயற்பாட்டாளர்கள் மத்தியில் உள்ளதால் இதன் காரணத்தை ஆராய வேண்டியுள்ளது. செயற்படுதிறனுடனான முஸ்லிம் சிவில் சமூகத்தின் கணிசமான பகுதியினர், அவர்கள் குழு உரிமைகளுக்காக வாதாடுபவர்கள், இச்சட்டத் திருத்தத்தில் இருந்து விலகி

---

78 இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் சமுதாயத்திற்கு அப்பால் இவ்விடயங்கள் எவ்வாறு சொல்லப்படுகின்றன என்பதிலிருந்து இவ் விடயம் துரதிஷ்டவசமாக பாரிய வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை.

இருப்பது, அல்லது முற்றாக பிரச்சினைகளைப் புறக்கணித்துவிடுவது முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கிறது. முஸ்லிம் சமூகத்திற்குள்ளே இருந்து முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட சீரமைப்பு பற்றி குரல் கொடுப்பதற்கு மிக சொற்ப அளவினரே (குறிப்பாக பெண்கள் அமைப்பினர்) பங்களித்துள்ளனர். இந்த தாராளவாதிகள் அல்லது மிதவாதிகள் அமைதியாக இருப்பதென்பதன் பொருள், இந்த சமூகத்தினுள்ளேயான உரையாடலில் பழைமைவாத கருத்துக்கள் மேலாதிக்கம் செலுத்துகின்றன என்பதாகும்.

### 6.3. உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட 'பிரதான' அமைப்புக்கள் 'முஸ்லிம் பிரச்சினைகளை' மனித உரிமைகளுக்கான பிரச்சினைகளாக பார்ப்பதற்கு தயக்கம் காட்டுகின்றன.

> (அனைத்தையும் உள்வாங்கல் என்பது) 'பெண்கள் வெவ்வேறு வகைகளிலும், பலதரப்பட்ட பாரதூர முறைகளிலும் அடக்குமுறைக்கு உள்ளாகின்றார்கள் எனும் பார்வையாகும். குலாசார நடைமுறைகளிலான அடக்குமுறையானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது மட்டுமன்றி சமூகத்திலிருக்கும் அனைத்து முறைமைகளினாலும் செல்வாக்குக்குள்ளாக்கப்பட்டதுடன், பின்னிப் பிணைந்ததுமாகும். இதற்கான உதாரணங்களுள் சாதி, இனம், பால்நிலை, வர்க்கம், இயலுமை என்பன அடங்கும்.
>
> கிம்பர்லி க்ரென்ஸோ(அறிஞர்)

இன அல்லது சமய (உதாரணங்களின்) அடிப்படையில் சில பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளுக்கும், அடக்குமுறை வடிவங்களுக்கும் இடையிலான தொடர்பு அல்லது ஒன்றுடன் ஒன்று பிணைந்த தன்மையானது அவர்கள் பெண்கள் என்ற வகையில் எதிர்கொள்ளும் அடக்குமுறையிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதது. ஏனெனில் இது அனைத்து பெண்களாலும் எதிர்நோக்கப்படுவதொன்று என்பதனை இலங்கையிலுள்ள உரிமைகளுக்காக வாதிடுபவர்களும், பெண் செயற்பாட்டாளர்களும் கூறி வரும் உரிமைகளுக்கான போராட்டங்களை காண்கையில் உணர முடியும். எவ்வாறெனினும் இலங்கையிலுள்ள பிரதானமான மனித உரிமைகளுக்கான மற்றும் பெண்கள் உரிமைகளுக்கான அமைப்புகள் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு முறையில் முஸ்லிம் பெண்களின் நீதிக்கான போராட்டங்களில் மௌனம் காத்து வந்துள்ளன. முஸ்லிமல்லாத ஒரு சில தனிப்பட்ட ஆதரவாளர்களைத் தவிர, முக்கியமாக இப்பிரச்சினைகள் தொடர்பாக ஈடுபடுவதில் இத்தனை காலமாக உணரப்பட்டு வந்த இன, சமய, கலாசார கூருணர்வினால் கவனிக்கத்தக்க அளவிலான தயக்கம் இருப்பதனைக் காணலாம்.

**"இது ஒரு முஸ்லிம் பிரச்சினை, ஆகையால் நாம் அதைப்பற்றி எதுவும் செய்வதற்கில்லை."**

'கலாசாரக் கூருணர்வுடன்' இருக்க முனைகையில் சமய, இன அல்லது கலாசாரக் குழுக்களுக்குள் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இது தொடர்பில் வேலை செய்யும் செயற்பாட்டாளர்கள், இதற்காக வாதாடுபவர்கள், மனித உரிமைகள் மற்றும் பெண்ணிலைவாதக் நோக்கில் பன்மைத்துவ கலாசாரம் உள்ள நாடுகளில், வேலை செய்கையில் இது விசேடமாக பொருத்தமுடையதாக இருக்கின்றது.

'பெண்ணிலைவாதமும், பன்மைத்துவ கலாசாரமும்: சில சிக்கல்கள்' என்ற ஆய்வுக்கட்டுரையில் பேராசிரியர் சூசன் முல்லர் ஒக்கின் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். *'உண்மைதான், குழுக்களுக்கு மத்தியில் சமத்துவத்தையும், சகிப்புத் தன்மையையும் ஏற்படுத்த முனைவதானது அறியாமலேயே, 'பன்மைக் கலாசாரத்தின் முரண்பாட்டால் விளிம்பு நிலையிலுள்ள' ஏற்கனவே வலுப்படாதிருக்கும் அங்கத்தவர்களை மேலும் அநீதியின் புறமாக இட்டுச் செல்லும் அதிகாரப் படிநிலைகளை வலுப்படுத்துவதாக அமையக் கூடும்.*[79]

[79] Okin Susan Moller, 1998 Feminism and Multiculturalism: Some tensios, pp661-684, The University of Chicago Press.

பெண்கள் உரிமைகள், மனித உரிமைகள் தொடர்பாக 'தனித் தீவுகளாக செயல்வாதங்கள்' இடம்பெறும் இலங்கையின் பின்னணியுடனும் இந்த முரண்பாடான நிலை ஒத்துப் போகின்றது. முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் முஸ்லிம் அமைப்புகளினுடையது என்ற கருதுகோளால் முஸ்லிமல்லாத செயற்பாட்டாளர்கள் இந்த விடயங்களில் ஈடுபட தயங்குகின்றனர் அல்லது சொல்லப்பட்ட சமூகத்தாலேயே விலக்கி வைக்கப்படுகின்றனர். முஸ்லிம் சட்டத்துடன் தொடர்புபட்ட எதையாவது செய்வதாயின் அந்தக் கலந்துரையாடல் இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டவியலுடன் தொடர்புபடுவதனாலும், ஏற்கனவே 'இஸ்லாமிய எதிர்ப்பை' எதிர் கொள்ளும் ஒரு சமூகத்திடம் கடினமான கேள்விகளை முன்வைக்க வேண்டும் என்பதனாலும் 'பெரும் சிக்கலுக்குரியது' என்று சிவில் சமூகமும், அரச துறையும் நோக்குவதாக இருக்கவும் கூடும். இதன் விளைவாக முஸ்லிம் பெண்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் ஈடுபடும் அசௌகரியத்தை விட இதனைக் கையாள முஸ்லிம் சமூகமே சிறந்தது என்று விட்டுவிடப்படுகின்றது.

இந்த ஆய்வின் நோக்கிற்காக, பிரதான பெண்கள் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களிடம் அவர்களது அமைப்புகள் ஏன் முஸ்லிம் சட்டத் திருத்தம் தொடர்பாக பரிந்து பேசவில்லை என்று கேட்கப்பட்டது. இதற்கான பதிலானது மேலே சொல்லப்பட்ட 'கலாசார கூருணர்வு' என்ற விடயத்துடன் பெரிதும் ஒத்துப்போனதுடன் முஸ்லிம் பெண்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு தங்களை ஆதரவாளர்களாக 'அழைக்கும்' வரை காத்திருக்கும் நிலை பற்றியும் கூறப்பட்டது. இங்கு இரண்டு தரப்பும் சாணக்கியமாக செயற்பட்டு சௌகரியமாக இருந்துள்ளன. இது சட்டத் திருத்த செயல்முறை மேலும் காலம் நீட்டித்துச் செல்வதற்குப் பங்களித்துள்ளதுடன், பிரதான கலந்துரையாடல் மற்றும் செயற்பாட்டு நீரோட்டத்தில் இருந்து விலக்கி வைக்கவும் வழிகோலியுள்ளது.

**இன்னும் எதிர்வினையாக இளவயதுத் திருமணங்களை முடிவுறுத்தல், மனித உரிமைகள், பிரசாவுரிமைகள் என்பனவற்றில் வாதங்களைக் கொண்டு வந்து முஸ்லிம் பெண்களையும், சிறுமிகளையும் 'விசேட பிரிவு' என்று இரண்டாம் தரப் பிரசைகளாக்கப்பட்டு தனிமைப்படுத்திய நிலைக்கு ஆளாக்கியுள்ளது. இன, சமய பேதங்களற்ற பெண்களின் ஒன்று திரளலானது ஏனைய சமூகங்களில் காணப்படுமளவு முஸ்லிம் பெண்கள், சிறுமிகளின் உரிமைகள் தொடர்பாகவும் விரிவடையாமை கவலைக்குரியதாகும்.**

## 7. இலங்கையின் கூருணர்வு மிக்க இன-சமய பன்மைத்துவமானது பல சவால்களைத் தோற்றுவிக்கின்றது

> '(முஸ்லிம்) பெண்கள் என்ற வகையில் எங்களை விமர்சிக்க, எங்களை வரையறுக்க, நாங்கள் சொல்லும் எதனையும் தடுக்க என சமயத் தலைவர்களும் மற்றும் தாமாகவே பிரதிநிதித்துவம் செய்து கொள்ளும் சமூகத் தலைவர்களும் எங்களிடம் இருக்கின்றனர். மறுபுறம் பாதிக்கப்பட்டவர்கள் என்ற படத்தையே நிலையிலேயே எங்களை வைத்துக் கொள்ள விரும்பும் இனவாதிகளும் எங்களிடம் இருக்கின்றனர்.
>
> தீயா கான் (சர்வதேச செயற்பாட்டாளர்)

இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்களும், போருக்குப் பிந்திய பின்னணி, அரசியல் மற்றும் சட்ட நடபடிகள், ஆணாதிக்க சமூகம் போன்ற பல்வகைப்பட்ட சமூக-கலாசார, சட்ட மற்றும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். அண்மைக் காலத்திலிருந்து இஸ்லாத்துக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிழையான கண்ணோட்டத்தைப் பரப்பும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான கருத்துக்களாலும், செயற்பாடுகளாலும் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு முஸ்லிம் விரோத கருத்துக்களைப் பரப்புபவர்கள் சமயக் குழுக்களிலிருந்து பிரிந்த தீவிரவாத அமைப்புகளான பொது பல சேனா, சிங்கள ராவயவிலிருந்து அரசியல்வாதிகளும், சாதாரண பொதுமக்களும் உள்ளடங்குகின்றனர்.

2014ம் ஆண்டின் 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவரினால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையானது முஸ்லிம் விவாக மற்றும்

விவாகரத்துச் சட்டத்தினாலும், காதிநீதிமன்ற முறைமையினாலும் இலங்கை முஸ்லிம் பெண்கள் எதிர் கொள்ளும் பாரபட்சங்களையும், மீறல்களையும் போதியளவு அறிக்கையிடத் தவறினாலும் இனவாத நடத்தைகளினால் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. பொது பல சேனா போன்ற தீவிரவாதக் குழுக்கள் முஸ்லிம் சமூகத்தை ஒட்டு மொத்தமாக குறி வைக்கும் அதே சந்தர்ப்பத்தில் குறிப்பாக முஸ்லிம் பெண்களைக் குறிவைத்து 'நிகாப்' எனும் முகத்திரையை அணிய தடை விதிக்கவும், இஸ்லாமிய அடிப்படையில் உடை அணியும் பெண்களை துன்புறுத்தவும் செய்தது என்பதனை இவ்வறிக்கை பதிந்துள்ளது.

முஸ்லிம் எதிர்ப்புணர்வானது நாட்டிலுள்ள சில பிரதேசங்களுக்குள் அல்லது அமைப்புகளுக்குள் மட்டும் காணப்படும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றல்ல. இது நகரப்புறங்களுக்குள்ளும், நிறுவனங்களுக்குள்ளும் கூட ஊடுருவக் கூடியது மட்டுமன்றி எந்த ஒரு துறையிலும், இடத்திலும் இருக்கும் எந்த ஒரு பெண்ணையும் பாதிக்கக் கூடியது. இந்த ஆய்வினை எழுதிக் கொண்டிருக்கும் போது தான் ஒரு முஸ்லிம் என்தற்காக ஒரு விரிவுரையாளராக நியமிக்காமல் தடை செய்தமைக்காக கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு எதிரான உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்து வெற்றி கண்ட பாத்திமா ஷானாஸ் அலாவுடீன் உடைய வழக்குத் தீர்ப்பு வெளிவந்திருக்கின்றது.[80] இத்தகைய சம்பவங்கள் எமக்கு உணர்த்துவதானது முஸ்லிம் எதிர்ப்புணர்வு அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரமானது முஸ்லிம் பெண்களது கல்வி, தொழில், நடமாட்டம் மற்றும் தீர்மானம் எடுத்தலில் மேலும் மட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதையேயாகும். அதுமட்டுமன்றி இவர்களது நம்பிக்கை காரணமாக இவர்களைப் பற்றிய தகவல்கள் பிழையானவையாகவும், எதிர்மறையானவையாகவும் கொடுக்கப்படுவதனால் தாம் வித்தியாசமாக நடத்தப்பட அல்லது அலட்சியப்படுத்தப்பட அல்லது அவமானப்படுத்தப்படக் கூடும் என்ற அனுமானத்தினால் இப்பெண்கள் நிவாரணம் பெறுவதற்காக தமது சமூகத்தைத் தாண்டி வேறு ஆதரவளிக்கும் சேவை நிலையங்களை நாடுவதைக் கூட இவை துண்டித்து விடுகின்றன.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தளவில், பெண்களைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி சமூகத்துக்குள்ளேயே கதைப்பதற்குக் கூட எதிர்ப்பினை தெரிவிக்குமளவு முஸ்லிம்களுக்கெதிரான எதிர்ப்புணர்வு பங்களித்துள்ளது. இதைப்பற்றிய கதையாடல் சமூகத்துக்கு வெளியே இருக்குமெனின் அது பொதுபல சேனா போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான குழுக்கள் 'ஷரிஆ சட்டம் முஸ்லிம் பெண்களின் உரிமைகளை மீறுகின்றது' என்று கோசமிட்டு முஸ்லிம் சட்டத்தை ஒழித்து காதிநீதிமன்ற முறைமையினை இல்லாமலாக்கி விடுவார்கள் என்ற அச்சம் காணப்படுகின்றது. இச்சட்டத் திருத்தத்துக்கான குழுவின் ஒரு அங்கத்தவரின் கருத்துப்படி 2012ம் ஆண்டின் முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் இச்சட்டத் திருத்த நடவடிக்கை தாமதமாகுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளால் பல வழிகளிலும் அதிகம் பாதிக்கப்படுவது முஸ்லிம் பெண்களே. அதேசமயம் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத நபர்களிடம் முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமியர்களின் செயற்பாடுகள் மீதான சுருக்க முறை விசாரணையிலான தண்டனை அல்லது சமூக கண்காணிப்பு பற்றி பேசும்போது 'அதிகரித்து வரும் தீவிரவாதம் அல்லது பழமைவாதத்தின்' விளைவாக எழும் 'இது ஒரு அண்மைக்கால நடவடிக்கைகள்' என்றும் இது 'அடிப்படைவாதிகள்', 'வஹாபிகள்', அல்லது 'இஸ்லாமியர்கள்' ஆகியோரின் செல்வாக்கின் விளைவாகும் என்று தெரிவித்தனர். இந்த சொற்கள் பொதுவாக பழைமைவாத முஸ்லிம்கள் பற்றிப் பேசும்போது எப்போதும் சொல்லப்படுபவையாகும். ஆயின் இதன் கீழான சமய மற்றும் அரசியல் ரீதியான கருத்தியல்களின் பன்மை மற்றும் சிக்கல்தன்மை குறித்து அநேகமானோர் அடையாளம் காண்பதோ அல்லது விளங்கிக் கொள்வதோ இல்லை. எவ்வாறெனினும் இந்த கருத்தியல்கள் பால்நிலை பாரபட்சங்களையுடையது என்பது பொதுவான புரிந்துணர்வாகும்.

சமூக-கலாசார அரங்கிலும், குடும்ப வாழ்க்கையுள்ளும் பழைமைவாத செல்வாக்கின் நீட்சியும், பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான இதன் தாக்கமும் அண்மைக் காலங்களில் உன்னிப்பாக அவதானிக்கப்படவோ, ஆய்வுக்குள்ளாக்கப்படவோ இல்லை. இலங்கையில் முஸ்லிம் குழுக்களுக்கிடையில் மார்க்கம் பற்றிய கண்ணோட்டங்கள், மார்க்கப்பற்றின் அளவு, சமூக கட்டுப்பாடுகள், பால்நிலை விழுமியங்கள் என்பன வேறுபட்டுள்ளதுடன் யுத்தம், இடப்பெயர்வு,

80 SC/FR 236/2011. https://www.colombotelegraph.com/wp-content/uploads/2016/02/sc_fr_236_2011.pdf

அரசியல் மாறுபாடுகள், தலைமைத்துவம் என்பவற்றில் தங்கியும் இருந்து வருகின்றது. அவை மேலும் சௌதி அரேபியா போன்ற நாடுகளின் ஆதரவிலும், பணத்திலும், இறையியலிலும் தங்கியுள்ளன. அதுமட்டுமன்றி குறித்த சமூகங்களின் மார்க்கத் தலைமைகளிலும், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இடம் பெறும் சமூகங்களுக்கு மத்தியில் இடம்பெறும் உறவு நிலையைப் பொறுத்தும் வேறுபடுகின்றன.

முஸ்லிம் சமூகமானது பிரதேச மற்றும் இன அடிப்படையில் மிகவும் வித்தியாசமானது என்பதனால் அதன் அனுபவங்களும் வித்தியாசமானவை இதனால் குறிப்பிட்ட ஒன்றை வைத்து அனைத்து சமூகத்துக்குமாக உதாரணமாகக் காட்டுதல் கடினமானதாக இருக்கும். ஆயினும் முஸ்லிம் பெண்களைப் பெரிதும் பாதிக்கும் இஸ்லாமிய பால்நிலை விழுமியங்கள், விதிகள் மற்றும் போதனைகள் பற்றிய குறுகிய அல்லது பரந்த பொருள்கோடல்கள் அவர்களது வாழ்வில் பாரிய விளைவுகளை உண்டு பண்ணுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

# பகுதி 4: முக்கியமான பரிந்துரைகள்

# PART 4:
# KEY RECOMMENDATIONS

## முக்கியமான பரிந்துரைகள்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் தற்போதைய நிலையானது எவ்வகையிலும் அனுமதிக்கப்பட முடியாதது என்பது மிகத் தெளிவான நிலைப்பாடாகும். இச்சட்டத்திலும், இதனை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிரமான குறைபாடுகள் காணப்படுகின்றன. இது சமூகத்தின் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் நல்வாழ்வு, உரிமைகள் மீது மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சட்டத்திலுள்ள பாகுபாடான அம்சங்களுக்கு எதிராக நிவாரணத்தைத் தேடுவதிலிருந்தும் உறுப்புரை 16(1) போன்ற அரசியலமைப்பு ஏற்பாடுகள் தடை செய்கின்றன என்பதுடன் சமத்துவமற்ற ஒரு பிரசையாக கீழான நிலையில் முஸ்லிம் பெண்களை இருக்கச் செய்கின்றன. கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருத்தத்துக்கான முஸ்லிம் பெண்களின் இந்தப் போராட்டமானது நீண்ட காலமாக இன்னல்களுக்கு ஆட்பட்டு, பாராட்டப்பட வேண்டிய வகையில் அர்ப்பணிப்புடன் இயங்கும் சில செயற்பாட்டாளர்களால் பல வரையறைகளுக்கு மத்தியில் எடுத்துச் செல்லப்படுகின்றது.

இந்தப் பின்னணியில், இந்தப் போராட்டத்தில் நெருக்கமாக செயற்பட்டவர்கள் தந்த தகவல்கள், எழுத்திலான ஆணவங்களின் ஆய்வுப்பார்வை, ஒப்பீட்டடிப்படையில் ஏனைய நாடுகளில் இருந்து பெறப்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட கருத்துக்களின் ஒருங்கிணைப்பாக கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் இது இந்த எழுத்தாளர்களின் சுதந்திரமான பகுப்பாய்வினூடாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான மூலோபாய வழிகளாக இவை முன்வைக்கப்படுகின்றன. தற்போதைய சட்டத் திருத்த செயன்முறைகளினூடாக வரையறுக்கப்பட்ட சில முன்னேற்றங்களையே அடைய முடிந்திருந்தாலும், இந்த வழிகாட்டல்கள் நியாயமான நீதியான சமத்துவ சமூகத்திற்கான எமது ஆர்வத்தை வலிமையுடையதாக்கும்.

### A. முதன்மை கடமை உடையவராக அரசை பொறுப்பேற்கச் செய்தல்

இலங்கையில் அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துடன் காதி நீதிமன்ற செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் முகங்கொடுக்கும் விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டிய பிரதான கடமை அரசாங்கத்துக்குரியதாக உள்ளது. அரச சட்டங்கள் பிரஜைகளின் உரிமைகளை பாதுகாப்பதோடு சமயம் மற்றும் பால்நிலை அடிப்படையில் பாகுபாடு, அநீதி ஏற்பட காரணமாக அமையாமல் இருப்பதனை உறுதிசெய்யும் முதன்மையான பொறுப்பு இலங்கை அரசிற்குரியது. இது தொடர்பாக, பிரஜைகளின் தனிப்பட்ட, அடிப்படை உரிமைகள் என்பன கலாசாரம் மற்றும் சமய உரிமைகளின் பெயரில் மறுக்கப்படலாம் அல்லது ஏற்றுக் கொள்ளப்படலாம் என்பதனை தீர்மானிக்கும் பொறுப்பை ஒரு சமய அல்லது இனக் குழுவிற்கு இலங்கை அரசாங்கம் வழங்கக்கூடாது. குறிப்பாக, ஒரு ஜனநாயக நாட்டில் மதச் சார்பற்ற சட்டங்கள் உள்ளன. அவை இயல்பாகவே ஒவ்வொரு பிரஜைக்கும் பொருந்தும்.

ஆகக் குறைந்த திருமண வயது போன்ற குறிப்பிட்ட விடயங்களில் அனைத்து பிரஜைகளிற்கும் ஏற்புடையதான சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கும் கல்வி, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கு ஏற்றவாறு வயதினை தெரிவு செய்வதற்கு இலங்கை அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகளிற்கு முன்னால் கலாசார மற்றும் சமய உரிமைகளைக் கொண்டுவருவதும் முஸ்லிம் சிறுவர்களை சிறுவயதிலேயே திருமணம் செய்ய சட்டரீதியாக அனுமதிப்பதனையும் சட்டரீதியாக குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழும் அரசியலமைப்பின் கீழும் அவர்களிற்கான பாதுகாப்பினை சட்டரீதியாக தளர்த்தலும் இந்த அரசு தனது பொறுப்பை தீவிரமாக மீறும் செயலாகும்.

இஸ்லாமிய குடும்பச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 38 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட " மாறும் உலகில் இஸ்லாமிய குடும்பச் சட்டம்" என்ற தனது ஆய்வு நூலில் அத் அல்லாஹ் அகமட் நைம் வேறுபட்ட பரப்புக்களில் வேறுபட்ட அளவுகளில் இஸ்லாமிய குடும்பச் சட்டத்தின் மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனத் தெரிவிக்கிறார். ஏனெனில் *இது* நடைமுறைப்படுத்தப்படும்

*பெரும்பாலான நாடுகளில் ‘ஷரீஆவின் பாராம்பரிய மூலங்களிலிருந்து பெறப்படுவதிலும் பார்க்க சட்டம் அரசினால் நியதிச்சட்டமாக இயற்றப்படுகின்றது. மேலும் ஒரு தீர்ப்பானது நியதிச்சட்டத்தன் அடிப்படையாகவோ அல்லது நீதிபதியின் தெரிவாகவோ இருந்தாலும்* ***அது சட்டரீதியாக பிணிக்கும் என்பதுடன் அரச அதிகாரத்துடன் மட்டுமே செயல்படுத்தக் கூடியதுமாகும்.’***[81]

இதன் விளைவாக அரசினது நீதி நிர்வாகமானது தனிப்பட்ட ரீதியாக சமயத்தை அனுஷ்டிக்கும் உறுதிப்பாட்டிலிருந்தும் வேறுபட்டது என அவர் மேலும் குறிப்பிடுகின்றார். *‘இந்த பரப்பு (ஷரீஆ சட்டம்) ஏனைய சட்டங்களைப் போன்று அரசின் அரசியல் விருப்புடமையின் அடிப்படையிலேயே அதிகாரத்தைப் பெறுகின்றது என்பதனை வெளிப்படையாக அங்கீகரித்தல் சிறந்தது’* என வாதிடுகின்றார். இது ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் அமைந்த தனியார் சட்டங்களாவன அரசால் அதிகாரமளிக்கப்பட்டு சட்டங்களாக்கப்படும்போது அதன் விளைவுகளுக்குப் பதில் சொல்லும் வகையில் அச்சட்டங்களைத் திருத்தவும், மாற்றவும், மீள உருவாக்கவும் அதே அரசுக்கே பொறுப்புடமை உண்டு என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

### B.அரசியலமைப்பில் சமத்துவத்தை உறுதி செய்தலும், நீதித்துறை மீளாய்விற்கு அனுமதித்தலும்

அரசியலமைப்பின் மீயுயர்ந்த தன்மையை மீறுகின்றதும், சில பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறலையும் அனுமதிக்கும் அரசியலமைப்பின் உறுப்புரை 16 போன்றவை தொடர்பில் வெளிப்படுத்தவும், அதனை இரத்துச் செய்யவும் சரியானதொரு சந்தர்ப்பத்தினை தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புத் திருத்தம் இலங்கை அரசிற்கு வழங்குகின்றது. 2016 இன் ஆரம்பத்தில் பொதுப் பிரதிநிதிகள் குழுவினால் (PRC) மாவட்ட மட்ட கருத்துப் பெறல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, ஆண்களும் பெண்களுமாக ஆர்வலர்கள், வாதாடுபவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கில் இக்குழு முன்னிலையில் சாட்சியமளித்ததோடு ஆணையாளர் முன்னிலையில் அறிக்கைகளையும் வழங்கி பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான வாய்ப்பினை வழங்கவும், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ளுமாறும் கோரினர். உறுப்புரை 16(1) இனை நீக்குவதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தும் உறுப்புரைகளை உள்ளடக்கும் படியும் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சாட்சியமளித்த முஸ்லிம் பெண்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரந்த அடிப்படை உரிமைகளையும், நீதித்துறை மீளாய்வினையும் உள்ளடக்கி பரிந்துரையை முன்வைத்துள்ளது. ஆகவே, புதிய அரசியலமைப்பானது பொது மக்களின் வெளிப்படையான கோரிக்கைகளை உள்ளடக்கி இருப்பதனை உறுதி செய்யும் கடமை அரசிற்குரியது.

அனைத்து பிரஜைகளுக்கும் இன, மத, பால்நிலை, பிரிவு என்ற எந்தவொரு வேறுபாடும் இன்றி அடிப்படை உரிமைகளின் முழுமையான பாதுகாப்பும், சமத்துவமும் கிடைப்பதை உறுதிப்படுத்துவது ஒரு அரசியலமைப்புக்கு அத்தியாவசியமானதாகும். முஸ்லிம் பெண்களின் அடிப்படை உரிமை மீறல்கள் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டவை என்று மிகவும் குறுகியதாக இஸ்லாத்தைப் பொருள்கோடல் செய்து கூறும் ஆண்களின் கூற்றுப்படி “கலாசார கூருணர்வு” என்ற போர்வையில் இவ்வுரிமை மீறல்களைக் கவனத்தில் கொள்ளாமல் விடுகின்றதானது மிகவும் பலவீனமான காரணமாகும். இது சமூகத்தில் இத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், அதனை தீர்க்க முன்வரவேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்தாலும் அவற்றை புறந்தள்ளிவிட்டு தனது ஆணாதிக்கத்தைப் பேண விரும்பும் முஸ்லிம் ஆண்களின் எண்ணத்தையே வெளிப்படுத்துகின்றது.

### C.முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை நாடு பூராகவுமுள்ள முஸ்லிம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே மேம்படுத்த வேண்டும்.

[81] ʿAbd Allāh Aḥmad Naʿīm, 2002. *Islamic Family Law in A Changing World: A Global Resource Book.* Law and Religious Program, Emory University. Zed Books Ltd. London, New York

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், காதி நீதிமன்ற செயற்பாடுகள் அத்துடன் சிவில் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பற்றிய போதிய அறிவின்மை இலங்கையிலுள்ள முஸ்லிம் சமுதாயத்தை பாதிக்கும் பிரச்சனைகளின் பிரதானமான காரணியாக உள்ளது. முஸ்லிம்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் மற்றும் பொதுச் சட்டங்கள் போன்ற இரட்டை சட்ட அமைப்பினால் ஆளப்படுகின்றனர். சமுதாயத்திலுள்ள பல உறுப்பினர்கள், விசேடமாக பெண்கள் இந்த முறைகளின் நியாயாதிக்கம் பற்றி தெரியாதுள்ளனர். உதாரணமாக வீட்டு வன்முறைகள் தடுப்புச் சட்டம். அதுமட்டுமன்றி இலங்கையில் முஸ்லிம்களுக்கிடையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் என்ற ஒன்று இருக்கின்றது என்பது பற்றியோ, அதன் நடைமுறைகள், பயன்பாடுகள் பற்றியோ அறிவு மிகக் குறைவாக காணப்படுகின்றமை தெளிவாக புலப்படுகின்றது. இது மிகவும் கவலைக்குரிய விடயம். ஏனெனில் இச்சட்டம் பற்றிய தவறான கருத்துக்களை ஏற்கவும், இச்சட்டத்திருத்தத்தினை எதிர்க்கவும் இந்த அறியாமை பங்களிக்கக் கூடும். இந்தச் சூழ்நிலையில் சட்டங்கள், பிரச்சனைகள் மற்றும் இஸ்லாமிய சட்டத்திலுள்ள பல்வேறு பட்ட கண்ணோட்டங்கள், கருத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு இன்றியமையாதது. முதலாவதாக ஆண்களும், பெண்களும் ஒன்றாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் அவசியம் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக முஸ்லிம் இச்சட்டத்தின் திருத்தத்திற்காக விவாதங்கள் மேற்கொள்ளப்படும் போது அதன் தேவை, முழு சமுதாயத்திற்கும் இத்திருத்தத்தினால் ஏற்படப்போகும் நன்மைகள் பற்றி இலங்கை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**D.முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்தினை முஸ்லிம் அடையாளத்தின் இன்றியமையாத இருத்தல் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது**

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது பிரச்சினைக்குரிய ஏற்பாடுகளையும், நடைமுறை விளைவுகளையும் கொண்டிருந்த போதிலும் கூட முஸ்லிம் சமுதாயத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. பல தனிப்பட்ட நபர்கள் இக் கருத்தினை ஏற்றுக் கொள்வதோடு இச்சட்டம் திருத்தப்பட்டாலும், திருத்தப்படாவிட்டாலும் கூட பொது திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான தெரிவைக் கூடக் கொண்டிருக்கக் கூடாது என்னும் நிலைப்பாட்டில் உள்ளனர். இதேபோன்றே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது தீவிரமான மீளாய்விற்கு உட்பட்டு, இரத்துச் செய்யப்பட்டு முஸ்லிம்களின் அடையாளம் தொலைந்து விடும் என்ற அச்சம் தான் அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) இன் திருத்தத்துக்கான விலக்களிப்பாக காணப்படுகின்றது. இதன் பெறுபேறாக குறிப்பிட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள், செல்வாக்குள்ள தனிநபர்கள், சமுதாய உறுப்பினர்கள் இச்சட்டத்தைப் பாதுகாக்கும் நடத்தைப் போக்கைக் கொண்டுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் பல காரணங்களினால் இந்த விவாதம் தர்க்க ரீதியற்றது. இலங்கை முஸ்லிம் சமுதாயம் நடைமுறையிலும் உணர்வு ரீதியிலும் மாறுபட்ட பல்வகைத் தன்மை வாய்ந்ததோடு வித்தியாசமான அடையாளங்களுடனும் தொடர்புடையது. முஸ்லிம் சமுதாயம் ஆகக் குறைந்தது நான்கு வேறுபட்ட சிறுபான்மையினரைக் கொண்டது. இது இனத் தோற்றம், கலாசாரம், மொழி, ஆடை மற்றும் சமய பழக்கவழக்கங்களின் முறைகளில் மாறுபடுகின்றது. கற்பிக்கும் பாடசாலைகள் மற்றம் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபடும் பல கருத்தியல் அடிப்படையிலான குழுக்களும் காணப்படுகின்றன.

முதலாவதாக இலங்கை முஸ்லிம் சமுதாயம் நடைமுறை மற்றும் இஸ்லாம் பற்றிய உணர்வுகள் ஆகியவற்றில் வித்தியாசமான தன்மையினை கொண்டது என்ற உண்மையை இந்த தவறான அபிப்பிராயம் மறுக்கின்றது. இலங்கையின் முழு முஸ்லிம் சமுதாயமும் பின்பற்றுவதற்கு தேவையான இஸ்லாமிய சட்டத்தின் விதிகளை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் கொண்டுள்ளது என்று இனிமேலும் வாதிட முடியாது. இரண்டாவதாக இஸ்லாமிய சட்டமும் அதனுள்ள பல்வேறு சிந்தனைப் பிரிவுகளும் வேறுபட்ட மத்ஹப் மற்றும் பிரிவுகளை அனுமதிக்கின்றது. ஆனால் இத்தகைய செழிப்பான இஸ்லாமிய சட்டம் இந்த முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. உதாரணமாக பெண்கள் தமது திருமணத்துக்கு தமது சம்மதத்தை தெரிவித்தல், பெண்கள் காதிகளாக செயற்படல் என்பவற்றைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக இஸ்லாமிய சட்டத்தினாலோ, சமய சார்பற்ற சட்டத்தாலோ அங்கீகரிக்கப்படாத கைக்கூலி என்னும் ஏற்பாட்டையும் இச்சட்டம் கொண்டிருக்கின்றது.

பிற சந்தர்ப்பங்களில் இந்த சிறுபான்மை இன மத அடையாளப் பாதுகாப்பைத் தக்க வைத்துக் கொள்ள பெண்களின் திருமணம், விவாகரத்து மற்றும் குற்றவியல் குற்றங்களுக்கு உள்சமுதாய தலையீடுகள் உள்ளடங்களாக பொது வாழ்க்கை, பெண்களின்[82] அபிப்பிராயங்களை கட்டுப்படுத்தல் போன்ற இறுக்கமான விதிகளாலும், கட்டுப்பாடுகளாலும் முயற்சிக்கப்படுகின்றமை வெளிப்படையாகின்றது. முஸ்லிம் பெண்களின் 'ஒழுக்கம், கௌரவம், நன்மதிப்பு' என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், பத்திரப்படுத்துவதற்குமானது என்ற அடிப்படையிலான இந்த சமூக கண்காணிப்பும், கட்டுப்பாடும் சிறுமிகளதும், பெண்களதும் திருமணத்துடனும், திருமணத்துக்கான தகைமையுடனும் உள்ளார்ந்த தொடர்புடையதுடன் ஒப்புரவற்ற குடும்பச் சட்டங்களுக்கும் வழிகோலுகின்றது.

வயதிற்கு வந்த பெண்களை குடும்பத்தின் ஆண் அங்கத்தவர்களின் பாதுகாப்பின் கீழ் பராயமடையாதவர்களாகக் கருதும் எத்தகைய சட்டங்களும், இச்சட்டங்கள் செல்லுபடியாகும் அதே சமுதாயத்திற்கும், சமூகத்திற்கும் அவர்களின் செயற்பாடுகளையும், தீர்மானங்களையும், வாழ்க்கைத் தெரிவுகளையும் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் உட்கிடையாக அனுமதியை வழங்குகின்றது. இதன் விளைவாக பெண்களின் தனிப்பட்ட பிரஜாவுரிமை, சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் மீது மட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது.

இலங்கை முஸ்லிம் பெண்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவது அவர்களது சமயம் சார்ந்த நம்பிக்கையினால் அல்ல. மாறாக ஆணாதிக்கத்தினதும், அதிகாரத்தினதும் விளைவாக சட்டத்தின் கீழான சமமான பாதுகாப்பிலிருந்து பெண்களை தகுதியிழக்கச் செய்வதற்காகவும், தொடர்ச்சியாக பெண்களை தமக்குக் கீழ் அடக்கி வைப்பதற்கும் சமய மற்றும் சட்ட அடிப்படைகளை பாவிப்பதனால் ஆகும்.

ஆகவே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தமானது முஸ்லிம் அடையாளத்தை இல்லாமலாக்கி விடும் என்னும் வாதமானது பெண்களை விட ஆண்களுக்கு சலுகைகளை வழங்கும் இந்த ஆணாதிக்க நிலையை கேள்விக்குள்ளாக்கி விடும் என்பதைக் குறிப்பதாகவே கருதப்பட முடியும்.

ஒரு இளம் முஸ்லிம் ஆர்வலர் உறுதிப்படுத்தியதானது - *"என்னுடைய மதத்தின் பெயரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அநீதியான சட்டங்களினால் எனது முஸ்லிம் எனும் அடையாளம் பலப்படுத்தப்படவில்லை. மாறாக ஒரு இலங்கைப் பிரஜையாக சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மைக்கான முழு உரிமைகளையும் பெற்றுக் கொள்ளக் கூடிய எனது திறமையினால் பலப்படுத்தப்படுகின்றது. இந்த உரிமைகள் அரசினாலும், அரசியலமைப்பினாலும் ஏனையவர்களுக்குப் போன்று உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்".*

## E. கலாசார கூருணர்வு என்பதன் அர்த்தம் கலாசாரத்தினதும், சமயத்தினதும் பெயரால் மேற்கொள்ளப்படும் அநீதிகளை அங்கீகரித்தல் என்பதாக முடியாது

அண்மைக் காலத்தில் முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகள் தொடர்பில் அக்கறையுள்ள முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத இளம் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக சிறுபான்மை குழுக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருபவர்கள் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் மற்றும் கருத்துநிலைகளுக்கு எதிராகவும், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் நல்லாட்சி மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகவும் தொடர்ந்து குரல்கொடுத்து வந்துள்ளனர். எனினும், முஸ்லிம் சமூகத்துக்குள் நிலவிவரும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், அதன் திருத்தம் என்பன தொடர்பில் பெருமளவில் மௌனம் சாதித்தே வருகின்றனர். இதற்குக் காரணம், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பில் பொதுவாக நிலவிவரும் தகவல் போதாமையா, அது பற்றிய

[82] சமுதாய பாதுகாப்பிற்கு உதாரணமாக 2011 ஜுலையில் காத்தான்குடியினைச் சேர்ந்த இரண்டு 17 வயது சிறுமிகள் மாலை நேர வகுப்பு நிறைவடைந்த பின் வீடு திரும்பும் வழியில் இணைய நிலையமொன்றிற்கு சென்றமைக்காக தண்டிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் பெண்கள் முகத் திரையை அணிவதற்கு தற்காலிகமானதும் உத்தியோகபூர்வமற்ற தடைக்கும் இட்டுச் சென்றது. இதனால் யார் எங்கே செல்கிறார்கள் என அடையாளங் காண முடியும் என்பதற்காக என்று ஆர்வலர்கள் கூறினர். அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் முகத் திரைக்கான எழுச்சி உருவாகியுள்ளதை ஏனைய ஆர்வலர்கள் அவதானித்துள்ளனர். ஏனெனில், பெண்கள் தாம் யார் என்பதை அடையாளப்படுத்தாமல் சுதந்திரமாக சென்று வரவும், ஏனைய முஸ்லிம் சமுதாய உறுப்பினர்களின் பாதுகாப்பு அங்கீகாரம் இன்றியும் பயணிக்க முடியுமாயுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அறிவின்மையா அல்லது வேண்டுமென்றே அது குறித்துப் பேசுவதைத் தவிர்ந்துகொள்ளும் முனைப்பா என்பது தெளிவின்றிக் காணப்படுகின்றது.

முஸ்லிம் பெண்களைப் பாதிக்கும் விடயங்கள் ‘முஸ்லிம் விடயங்கள்’ என்றல்லாமல் பெண்களின் உரிமைகள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் என்ற ரீதியில் பார்க்கப்படுதல் முக்கியமானதாகும். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பில் அதிகமான ஆதரவுக் குரல்கள் ஒருங்கிணையும் பட்சத்தில், முஸ்லிம் பெண்களின் சட்டபூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவும், முஸ்லிம் சமூகத்தில் கவனத்திற் கொள்ளத்தக்க அம்சங்கள் தொடர்பிலான தீர்வுகளைக் கண்டடைவதற்கான காத்திரமான முன்னெடுப்புகளையும், கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து வாதாடுபவர்கள், இலங்கை முஸ்லிம் பெண்கள் இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் முழுமையான உரிமைகளை பெறவும், சமூகத்தின் நலனைப் பேணவும் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழான பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் என்பதனை உணர வேண்டும். ஆயின் வீடு மற்றும் குடும்ப வாழ்க்கையில் தான் சமயம், கலாசாரம் பற்றிய தனிப்பட்ட கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

முஸ்லிம் சமூகத்தினுள்ளே இடம்பெறும் பால்நிலைசார் வன்முறை வடிவங்கள் மற்றும் பால்நிலை சமத்துவம் இன்மை என்பன குறித்து சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களாலும் அரச முகவர்களாலும் பலமுனைப்பட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும். நாட்டில் இடம்பெற்றுவரும் சட்டபூர்வ சிவில் உரிமைகள் மற்றும் சமத்துவம் தொடர்பிலான பரந்துபட்ட கலந்துரையாடல்களில் முஸ்லிம் பெண்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். தேர்ச்சிபெற்ற முஸ்லிமல்லாத செயற்பாட்டாளர்கள் மற்றும் குழுக்கள் காத்திரமான முன்னெடுப்புகள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பில் முஸ்லிம் செயற்பாட்டாளர்களோடு ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நிகழ்த்தும் வகையில் உள்வாங்கப்படுதல் வேண்டும். அரசியல் ரீதியான பாரபட்சங்களைத் தவிர்த்தல், கலாசார உணர்வுகள் புண்படுத்தப்படாதிருத்தல் என்பன தொடர்பிலான கரிசனைகளுக்குப் பொருத்தமான நேரத்தில் உரிய இடம் வழங்கப்பட்டே தீரும் என்ற போதிலும், மனித உரிமைகள் மீறப்படுமிடத்து அவை கருத்திற் கொள்ளப்பட வேண்டியதில்லை என்பது பொதுவிதியாகும்.

பின்னிணைப்பு :
## மூலோபாய செயற்பாட்டுக்கான புள்ளிகள்

## ANNEXE:
## STRATEGIC ACTION POINTS

## பின்னிணைப்பு : மூலோபாய செயற்பாட்டுக்கான புள்ளிகள்

**பின்வருவன நேர்காணல்களிலும், இலக்குக் குழு கலந்துரையாடல்களிலும், ஆய்வாசிரியர்களின் பகுப்பாய்வுகளிலிருந்தும் திரட்டப்பட்ட சில பரிந்துரைகளின் பட்டியலாகும்.**

1. **அரச பொறுப்புடமையைக் கட்டாயமாக்கல்**

   1.1 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்த நடைமுறைகளை வசதிப்படுத்தலையும், துரிதமாக்குவதையும் உறுதிசெய்தல் :

   - இச்சட்டத் திருத்தம் தொடர்பான தனது பரிந்துரைகளை முன்வைப்பதற்காக உருவாக்கப்பட்ட குழு தனது 7வது ஆண்டில் இருக்கின்றது. நீதி அமைச்சானது இக்குழு தனது நடவடிக்கையை முற்றாக்கி பரிந்துரைகளை முன்வைப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.
   - நீதியமைச்சு அறிக்கையினை வெளியிட்டு அதிலுள்ள உள்ளடக்கங்கள் மற்றும் கரிசனைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும். குழுவின் நடவடிக்கைகள் பகிரங்கமானவையாக இல்லாதிருப்பதனால் சமத்துவம் மற்றும் பாகுபாடின்மையினை இந்த அறிக்கை ஏற்படுத்துகின்றதா என்பதனை காண்பதற்கு விமர்சன அடிப்படையிலான மதிப்பீடு தேவைப்படுத்தப்படல் வேண்டும்.
   - பரிந்துரைகளின் அடிப்படையில் இச்சட்டத் திருத்தத்திற்காக வரையப்படும் மசோதாவானது, திருத்தத்திற்காக பாடுபடும் பெண்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்றதா என்பதனையும், இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச கடப்பாடுகளுக்கு ஏற்பவும் இருக்கின்றதா என்பதனை அனைத்து பங்குதாரர்களும் உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் முஸ்லிம் பெண்களும், சிறுமிகளும் இலங்கை பிரஜைகளாக சட்டத்திற்கு முன் பாகுபாடு இல்லாமலும், சமத்துவத்துடன் நடத்தப்படுவதை இம்மசோதா உறுதிப்படுத்த வேண்டும்.
   - முஸ்லிம் சமுதாயத்தினருடன் கடமையாற்றும் தலைவர்கள், அமைப்புக்கள், நலன்விரும்பிகள் ஆகியோா் இம்மசோதா நிறைவேற்றப்படுவதற்கு ஒன்றிணைய வேண்டும்.

**1.2 தற்போது இடம்பெற்று வரும் மீறல்களுக்கு தீர்வுகாணல்**

**1.2.1 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட வழக்குகள் மற்றும் காதி நீதிமன்ற நடபடிகளுக்கென ஒரு கண்காணிப்பு முறைமைக்கு அதிகாரமளித்தல்**

- காதி நீதிமன்றங்களில் காணப்படும் குறைகளை களைதல் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழு துடிப்பாக இயங்குதல் வேண்டும். குறிப்பாக நிதி சாா் விடயங்கள் மற்றும் காதிகளின் நடத்தை தொடர்பான ஒழுக்கக் கோவை என்பவற்றில் இறுக்கமான மேற்பார்வை அவசியம்.
- நீதிச் சேவை ஆணைக்கு தான் பெற்றுக் கொள்ளும் முறைப்பாடுகளின் எண்ணிக்கைகளையும் அவ் வழக்குகளிற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் பதிவு செய்து நீதி அமைச்சுக்கு அறிக்கையிட வேண்டும்.
- காதிகளால் மேற்கொள்ளப்படும் இலஞ்ச, ஊழல் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக வெறுமனே அவர்களைப் பதவி நீக்குவதுடன் மட்டும் நின்று விடாமல் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். நீதிச் சேவை ஆணைக்குழுவானது இவ்வகையான வழக்குகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற புலனாய்வுப் பகுதிக்கு பாரப்படுத்தப்பட்டதை உறுதி செய்தல் வேண்டும்.

- மேன்முறையீடுகளின் போக்குகளையும், வடிவங்களையும் அவதானிப்பது காதிச் சபையின் பொறுப்பாகும். (உதாரணமாக, குறிப்பிட்ட ஒரு பிரதேசத்திலிருந்து அதிகளவிலான மேன்முறையீடுகள் கிடைக்கப் பெறின் குறித்த காதி தொடர்பான கரிசனை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.) அத்துடன் நீதிச் சேவை ஆணைக்குழுவுடனும், நீதியமைச்சுடனும் இந்நடவடிக்கை தொடர்பில் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம்.
- காதிகள் சபை மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழு எவ்வகையான வழக்குகளை பெறுகின்றன, அத்தோடு அவை எவ்வாறு பின்தொடரப்பட்டு தீர்க்கப்படுகின்றன என்பது தொடர்பான பொருத்தமான, அண்மைக்கால தகவல்களை சிவில் சமூக பங்குதாரர்களும் பெற வேண்டும். இது எவ்வகையான வழக்குகள் காதிகள் சபையிடமிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செல்கின்றன என்பதனை அவதானிக்க உதவும்.

### 1.2.3 வழக்குகள் தொடர்பாக பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்தல்

- பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலுள்ள பெண்களிற்கான அலகுகள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் காதியின் நியாயாதிக்கம் உள்ளடங்கலாக முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துடன் தொடர்புடைய விதிகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டப்படல் வேண்டும்.
- வீட்டு வன்முறைகளினாலோ அல்லது வேறு துன்புறுத்தல்களினாலோ பாதிக்கப்பட்ட பெண்கள் உள்ளடங்கலாக முஸ்லிம் பெண்கள் அனைவருக்கும் அனைத்து பிரசைகளுக்கும் பொதுவான அரச கொள்கைகளிற்கும், நடைமுறைகளிற்கும் அமைவாக பொலிஸார் தகவல்களையும், சேவையினையும் வழங்க வேண்டும்.
- குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களிலுள்ள பெண்களிற்கான அலகுகளில் போதியளவு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதோடு அந்த சமுதாயத்துடன் பொருந்தக் கூடிய மொழித் திறனைக் கொண்ட உத்தியோகத்தர்களையும் கொண்டிருக்க வேண்டும்.
- ஆலோசனைச் சேவைகளை வழங்கும் முஸ்லிம் அமைப்புக்கள், குழுக்கள் மற்றும் பள்ளிவாசல் குழுக்கள் மற்றும் ஒன்றியங்கள் பொலிஸாருக்கு அறிவிக்காமல் வீட்டு வன்முறைத் தடைச் சட்டத்தின் கீழ் வரும் வீட்டு வன்முறை வழக்குகளிற்கோ அல்லது ஏனைய குற்றவியல் வழக்குகளுக்கு ஆலோசனை வழங்கவோ அல்லது மத்தியஸ்தம் செய்யவோ கூடாது. மாறாக அவ்வழக்குகள் பொலிஸாரிற்குப் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

### 1.2.4 சமயம் சார் கட்டமைப்புக்களின் அதிகாரங்களையும், வகிபங்கினையும் தெளிவுபடுத்தல்

- முஸ்லிம் விவகார அமைச்சானது பள்ளிவாசல் குழுக்களினதும், ஒன்றியத்தினதும் வகிபங்கை உன்னிப்பாக மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன்கீழ் எழும் எந்தவொரு பிரச்சினையையும், முறைப்பாட்டையும் அமைச்சினால் விசாரணை செய்து செயற்படுத்தக் கூடியவற்றிற்கு குறை தீர்ப்பு பொறிமுறையொன்றினை உருவாக்கல் வேண்டும்.
- வீட்டு வன்முறைகள், ஏனைய குற்றவியல் வழக்குகளில் குறுக்கிடவோ அல்லது மத்தியஸ்தமோ செய்யாமல் இவ்வழக்குகளை பொலிசாரிற்கு பரிந்துரைக்கும் படி நாடு முழுவதுமுள்ள பள்ளிவாசல் குழுக்களிற்கும், ஒன்றியங்களிற்கும் முஸ்லிம் விவகார அமைச்சு தகவல்களுடன் கூடிய நெறிப்படுத்தல் ஒன்றை வழங்கல் வேண்டும்.

- பள்ளிவாசல் குழுக்களினதும், ஒன்றியங்களினதும் உண்மையான வகிபங்குகள் பற்றி சமூக விழிப்புணர்வொன்று எழுப்பப்படல் வேண்டும். அத்துடன் இவை பொலிஸாருக்கு அறிவிக்காமல் வீட்டு வன்முறைகள் அல்லது ஏனைய குற்றங்கள் தொடர்பில் தலையிடவோ அல்லது மத்தியஸ்தம் செய்யவோ முடியாது என்பது சமூகத்தில் தெளிவாக்கப்பட வேண்டும்.
- அனைத்து இலங்கை ஜாமியத்துல் உலமா (ACJU) மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சமயம் சார் அமைப்புக்களும் சமுதாயத்தில் ஏற்படும் பாரிய சவால்களைத் தீர்க்க முன்னுரிமைப்படுத்துவதோடு முஸ்லிம் பெண்களின் உரிமைகள் மீறப்படாத தீர்வை வழங்கல் வேண்டும்.

### 1.2.5 குறித்த விடயங்கள் அதனுடன் தொடர்புடைய அமைச்சுக்களினாலும், முகவர்களினாலும் கையேற்கப்பட்டதனை உறுதி செய்தல்.

- கல்வியமைச்சு, பெண்கள் மற்றம் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு போன்ற அமைப்புக்களும் இளவயதுத் திருமணப் பிரச்சினையை சிறுவர் உரிமைகள் விடயமாக கருத்தில் கொள்ளல் வேண்டும். முஸ்லிம் சிறுவர்கள், இளைஞர்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பிரதிநிதித்துவமும், முறைப்பாடும் செய்யப்படுகையில் தேசிய சட்டங்களுக்கும், கொள்கைகளிற்கும் அமைவாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
- பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு போன்ற சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் முஸ்லிம் பெண்கள் முகங்கொடுக்கும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்துடன் தொடர்புடைய சவால்களை தெரிந்து வைத்திருப்பதுடன் தமது தேசிய செயற் திட்டத்திலும், அமைச்சின் முயற்சிகளிலும் இவற்றுக்கான தீர்வு காணும் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

## 2. அரச பொறிமுறைகளினூடாக நீதியை தூண்டுதல்

### 2.1 அரசியலமைப்புத் திருத்தங்கள் சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துவதை உறுதிப்படுத்தல்

- அரசியலமைப்புத் திருத்தத்திற்கான குழுக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் எதுவித நிபந்தனைகளோ, எந்தவொரு சட்டத்துக்குமான விலக்களிப்போ இன்றி அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) நீக்கப்படும் என்பதனை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்துச் சட்டங்களுக்கும் நீதித்துறை மீளாய்வுக்கு உட்பட வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பே மீயுயர்ந்ததாக இருத்தல் வேண்டும்.
- பால்நிலை, மதம், இனம் மற்றும் தேசியம் என்ற எந்தவொரு அடிப்படையிலும் பாராபட்சம் காட்டப்படாது சமத்துவமாக முஸ்லிம் பெண்கள் உள்ளடங்களாக அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதற்காக சிவில் சமூக அமைப்பினர் ஆதரித்து வாதாடல் வேண்டும்.

### 2.2 பொது திருமணக் கட்டளைச் சட்டம் மற்றும் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையினைத் திருத்தல்.

- 2009 இல் பொது திருமணக் கட்டளைச் சட்டத் திருத்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட முஸ்லிம்களுக்கும் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான தெரிவு வழங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை நடைமுறைப்படுத்த நீதியமைச்சும், சிவில் சமூக அமைப்பினரும் செயற்பட வேண்டும்.

- அனைத்து பிரஜைகளிற்குமான ஆகக் குறைந்த திருமண வயதெல்லையாக 18 இருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 363 ஆம் கீழுள்ள நியதிச்சட்ட பாலியல் வல்லுறவானது 16 வயதிற்கு உட்பட்ட அனைத்து சிறுமிகளையும் உள்ளடக்கும் வகையில் திருத்தப்படுவதனை நீதியமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சட்ட ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக அமைப்பினர் ஆகியோர் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும்.

## 3. முஸ்லிம் பெண்களை பாதிக்கும் முக்கிய பிரச்சனைகள்

பெண்கள், சிறுவர் உரிமைகள் அமைப்புக்கள், இளைஞர் குழுக்கள் ஆகியன முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வினை கொண்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் கூட்டு நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### 3.1 பொது அரங்குகள் மற்றும் ஊடகங்கள் ஊடாக

- சர்வதேச ரீதியாகவும், மும்மொழிகளில் தேசிய ரீதியாகவும், பத்திரிகை கட்டுரைகள், கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள், திறந்த கடிதங்கள், கூற்றுக்கள் மற்றும் செய்தி வெளியீடுகள் ஊடாக முஸ்லிம் பெண்களும் சமூகமும் பாதிப்படையும் விடயங்களை சிவில் சமூக அமைப்பினர் தொடர்ச்சியாக பொதுக் கலந்துரையாடலிற்கு கொண்டு வர வேண்டும்.
- முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் பற்றிய செய்திக் கதைகளை தெரிவு செய்து அவற்றை விசாரித்து, தகவல்களை திரட்டி சமுதாய மட்டத்தில் முகங்கொடுக்கப்படும் பல்வேறு கரிசனைகளை முன்னிலைப்படுத்திக் காட்டுவதற்கு ஊடகவியலாளர்களும், ஊடகத்துறையினை சார்ந்தவர்களும் வலியுறுத்தப்படுவதோடு, ஊக்குவிக்கப்படவும் வேண்டும்.
- காதி நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் முஸ்லிம் சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு காதி அலுவலகங்கள், பள்ளிவாசல்கள் போன்ற இடங்களுக்கு வெளியே சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், அறிவிப்புக்கள் போன்ற பொது அறிவினை புகட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரச சட்ட நடவடிக்கைகள் மூலம் முஸ்லிம் பெண்களின் மத்தியில் இடம்பெறும் குடும்ப வன்முறைகள், பால்நிலை ரீதியான வன்முறைகள் போன்ற பிரச்சனைகள் மீது வழக்கு தொடரும் நடைமுறைகள், பொலிஸ் அதிகார எல்லை போன்ற தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

### 3.2 உள்ளக சமூக உரையாடல் மற்றும் முயற்சிகள் மூலம்

- முஸ்லிம் விவாக மற்றும் விவகாரத்துச் சட்டம் தொடர்பான முயற்சிகளில் புறக்கணிக்கப்படும் மலேயர்கள், மேமன்கள், போராக்கள் போன்ற முஸ்லிம் சமுதாயத்தின் சிறுபான்மையினர், அத்துடன் நாடு பூராகவும் உள்ள மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்கள் (உதாரணமாக தெற்கு, மத்திய மாவட்டங்கள்) ஆகியன வரை இச்சட்டத்திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் என்பன விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- சமூகம் சார் அமைப்புக்களான மலேயர் சங்கங்கள், ஏனைய அமைப்புக்கள் என்பன தமது தொகுதிகளில் காதி நீதிமன்ற செயற்பாடுகள், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான அறிவினை வழங்குவதற்கு பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்களை நடாத்த வேண்டும்.

- முஸ்லிம் சமூகத்தின் சிறுபான்மையினர் தாங்களாகவே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்திருத்தம் தொடர்பில் தேசிய மட்டத்திலான கலந்துரையாடல், ஆலோசனைகளில் தமது பங்கை உறுதி செய்வதோடு இலங்கை முஸ்லிம்கள் முகங்கொடுக்கும் சவால்களை களைய முனைய வேண்டும்.

## 4. ஆதாரங்களை வலுவாக்கல்

### 4.1 தகவல்களை சேகரித்தலும், உறுதிப்படுத்தலும்

- சமுதாய உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் வெவ்வேறு விடயங்களில் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர் என்ற அபிப்பிராய ஆய்வுகள் திரட்டப்படல் வேண்டும். இதில் இலங்கையிலுள்ள பல்வேறு முஸ்லிம் சிறுபான்மைக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கல் வேண்டும்.

- பெண் காதிகள், திருமண வயது, பலதார திருமணம், பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான தெரிவு போன்ற ஒவ்வொரு விடயங்களிலும் சமுதாயத்தின் கண்ணோட்டம் என்னவென்பதை ஆய்வு உள்ளடக்கியிருக்க வேண்டும்.
  - வெவ்வேறு பிரதேசங்கள் அல்லது இணையத்தில் வாக்குகள் மூலம் அல்லது பிரதான அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக இவை சேகரிக்கப்படலாம்.
  - இவ்வாய்வுகள் தவறான நம்பிக்கைகளைக் கேள்வி கேட்கக் கூடியதாக, மேலும் ஆழமாக புரிந்து கொள்ளக் கூடியதான கலந்துரையாடல்களை உருவாக்கவும் இந்த அபிப்பிராய ஆய்வு உதவும்.
- நாடு பூராகவுமுள்ள முஸ்லிம் சமுதாயத்தில் இளவயதுத் திருமணம் போன்றவற்றில் பால்நிலை அடிப்படையில் பிரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் போன்ற விடயங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.
- பலதார திருமணம், விவாகரத்து, கைக்கூலி விடயங்கள், பராமரிப்பு பிரச்சினைகள், ஹத் (அடித்தல்) தண்டனைகள் (இன்னும் பல விடயங்களுள் இது தனிப்பட்டவர்களால் கையாளப்படுவதாக கண்டறியப்பட்டது.)போன்றவற்றின் தன்மை, பரப்பெல்லை, எந்தளவு நடைமுறையிலிருக்கிறது, வடிவங்கள் மற்றும் இவற்றின் தாக்கங்கள் என்பன தொடர்பாக தரம்சார், தரவுசார் ஆய்வுகள் இச்சட்டத் திருத்தத்துக்கு துணையாகக் கூடிய வகையில் செய்யப்படல் வேண்டும்.
  - ஒவ்வொரு காதி நீதிமன்றத்தினாலும் கோப்பிடப்படும் அமுலாக்கல் கட்டளைகளின் எண்ணிக்கை, நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பெறப்படும் முறைப்பாடுகளின் தன்மை போன்றன திரட்டப்பட வேண்டிய மேலதிக தகவல்களுள் அமைகின்றன.
- ஆய்வில் கண்டறியப்பட்டவை பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்களையும், தகவல்களையும் உரிய முறையில் பேணும் ஊடக தரம் கொண்ட ஊடகங்களிலும் அதனுடன் தொடர்புடைய அதிகார சபைகளுடனும் பரந்தளவில் பகிரப்பட வேண்டும்.

## 5. செயற்பாட்டு உதவி வழங்கும் முகவர்களின் உள்வாங்கும் அணுகுமுறை

- பெண்களின் உரிமைகள், பால்நிலைசார் வன்முறை, சிறுவர் உரிமைகள், சட்டத் திருத்தங்கள் (அரசியலமைப்புத் திருத்தங்கள் உள்ளடங்கலாக) ஆகியவை தொடர்பில் பொருத்தமான அமைச்சுகளுக்கும், தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செயற்பாட்டு உதவியினை வழங்கும் முகவர்கள் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட கரிசனைகள் உள்வாங்கப்படுவதனையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுவதனையும் உறுதிப்படுத்தல்.
- பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகள், பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமைகளை மேம்படுத்த செயற்படும் அமைப்புகள் பால்நிலை அடிப்படையிலான வகிபங்கை மீண்டும் கற்பிக்கும் சிறிய அளவிலான பொருளாதார செயற்பாடுகளை செய்வதை விடுத்து முஸ்லிம் பெண்களது உரிமைகள் மீறப்படும் விடயங்களையும் தங்களது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

*“என்னுடைய சமயத்தின் பெயரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அநீதியான சட்டங்களினால் எனது முஸ்லிம் எனும் அடையாளம் பலப்படுத்தப்படவில்லை. மாறாக ஒரு இலங்கைப் பிரஜையாக சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மைக்கான முழு உரிமைகளையும் பெற்றுக் கொள்ளக் கூடிய எனது தகுதியினால்தான் பலப்படுத்தப்படுகின்றது. இந்த உரிமைகள் அரசினாலும், அரசியலமைப்பினாலும் ஏனையவர்களுக்குப் போன்று முஸ்லிம் பெண்களுக்கும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்”.*